www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஜன.23-29,1994

ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 35


## உள்ளூராட்சித் தேர்தல்களும் வெட்டி ஓடும் விளையாட்டுக்களும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



அரசியல் அலசல்

இராஜதந்திரி



அரங்கம் அதிர நடனம் ஆடும் குண்டர்கள்

தகவல் பெட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வர்ணப் படங்களோடு சினிவிசிட் | பாப்பா முரசு | சிறுகதைகள் கவிதைகள் | மகாபாரதம் கதை வசனம் | லேடீஸ் ஸ்பெசல் | உலக ரவுண்டப் | ரசிகனின் இலக்கியநயம் |

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அவர் இரக்கமும் உடன்படிக்கையும்

"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்." ஏசாயா 54:10

தெய்வீக அன்பின் மிகச் சிறந்த அம்சம் அதன் நிலைத்திருக்கும் தன்மையே ஆகும். உலகை தாங்கி நிற்கும் தூண்கள் அவை இருக்கும் இடத்திலிருந்து நிலைபெயர்ந்து விடலாம். ஆனால் இரக்கமுள்ள யெகோவாவின் கருணையும் உடன்படிக்கையும் அவர் மக்களை விட்டு ஒருபோதும் அகன்றுவிடாது. தெய்வீக உள்ளுக்கம் பெற்ற இந்த உறுதி மொழியை உறுதியாய் நம்புவதால் என் ஆன்மா எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறது. காலங்கள் மாறலாம். ஆனால் ஆண்டவர் மாறாதவராயிருக்கிறார். குன்றுகள் இயற்கை ஆற்றல் கூறினால் நிலைபெயர்ந்து விடுகின்றன. ஆனால் கருதத்தக்க எந்த சக்தியும் நித்தியமான கடவுளின் நிலையை மாற்ற முடியாது. இறந்தகால நிகழ்கால எதிர்கால சம்பவம் எதுவும் யெகோவாவை என்மீது இரக்கமற்றவர் ஆக்க முடியாது.

என் ஆத்துமாவே, அவர் நெருங்கிய உறவினர் போல் உன்னை நடத்தும் ஆண்டவரின் நித்திய இயக்கத்தின் நிச்சயத்தில் அமர்ந்திரு. நித்திய உடன்படிக்கையையும் நினைவில் வைத்திரு. கடவுள் எப்பொழுதும் அதை நினைத்திருக்கிறார். நீயும் அதை நினைத்திருக்க கவனமாயிரு. மகிமையுள்ள கடவுள் கிறிஸ்து இயேசுவில் தாம் உன் கடவுளாக இருப்பதாகவும் வாக்குறுதி அளித்திருக்கிறார். இந்த வாக்குறுதியை இரக்கமும் உடன்படிக்கையும் உறுதி செய்திருப்பதால் நித்திய காலமாய் அது உன்னிடமிருந்து எடுபடாது.

குணத்தி பிரபா-கனடா.

# ஆன்மீகம்

## உபதேசமும் செயலும் ஒன்றாக அமைதல் வேண்டும்



தாம் செயற்படாமல் மற்றோருக்கு உபதேசிக்கும் சொற்பொழிவாளர்களை அருள்மறை அல்குர்ஆன் வன்மையாகக் கண்டித்துள்ளது. நீங்கள் செய்யாதவற்றை ஏன் (மற்றவர்களுக்கு) சொல்கிறீர்கள் - என்ற திரு வசனம் இதனை உணர்த்துகிறது.

நபிகள் நாதர் (ஸல்) விண்ணுலக யாத்திரையின் போது ஒரு கூட்டத்தினரைக்கண்டார்கள். அவர்களின் நாவுகள் நெருப்பினாலான கத்திரிகளினால் கத்தரிக்கப்படுவதை அவதானித்த நபியவர்கள் இவர்கள் யாரென ஜிப்ரஈல் (அலை) அவர்களிடம் வினவினார்கள். அதற்கு அமரர் ஜிப்ரஈல் (அலை) அவர்கள் விடை பகர்ந்தபோது " இவர்கள்தான் உங்களது சமுதாயத்தில் (உம்மத்தில்) உள்ள சொற்பொழிவாளர்கள். இந்தப் பேச்சாளர்கள் பிறருக்கு உபதேசம் செய்தார்கள். ஆனால் தாங்கள் அதன்படி செயல்படவில்லை. அதற்காகவே இத்தண்டனை வழங்கப்படுகிறது" என்றார்கள்.

தாங்கள் "அமல்" செய்யாமல் பிறருக்கு மாத்திரம் போதனை செய்யும் அறிஞர்களின் சொற்பொழிவுகளால் எவருக்கும் பயன் கிட்டுவதில்லையென ஆத்ம ஞானிகளான "ஸூபியாக்கள்" இயம்புகின்றனர்.

அருமை நபிகளாரின் பரம்பரையில் வந்துதித்த 'அறிவுக்கடல்' "அவ்லியாக்களின் அரசர்-முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள், உபதேசிகளின் பண்புகள் எப்படி இருக்கவேண்டும் என இவ்வாறு விளக்குகின்றார்கள். அத்தகையோர் "ஷரீஅத்" கல்வியில் பூரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். "இல்முல் மஃரிபா" எனப்படும் ஆத்மீகக் கலையில் அனுபவரீதியிலான பக்குவம் இருத்தல் வேண்டும். சொல்வதைப் போன்று செயலும் இருக்க வேண்டும். இவ்வாறானோரே சொற்போதனைக்குத் தகுதியானோராவர்.

இன்று நாம் பல்வேறு வகையான "பயான" சொற்பொழிவுகளை அவதானிக்கிறோம். தமது பேச்சு வன்மையைப் பறைசாற்றும் வகையில் கம்பீரமான குரலில் அடுக்கு மொழியில் உரை நிகழ்த்துவோர் பலர் அருள்மறைக்கும்- அல்ஹதீஸ்களுக்கும் தமது சொந்தக் கருத்துக்களைக் கூறிப் பாமர மக்களை அறிவு மயங்க வைக்கின்றனர். உண்மையான இறையச்சமுள்ள பேணுதலான நல்லறிஞர்களின் உபதேசங்களால் பலர் பயன் பெறுகின்றனர். ஆனால் பணக்காரர்களின் அடிவருடிகளான-புகழுக்கும் பணத்துக்கும் அறிவை விலை பேசும் அற்பாகளெல்லாம் பேரறிஞர்கள் போன்று வேடம் தரித்து உபதேசம் செய்வதாலும் இஸ்லாமிய ஆன்மீக அறிவு ஞானங்களைக் கேட்டுப் பயன்பெறும் அதிஷ்டம் பலருக்குக் கிட்டுவதில்லை.

திஹாரிய-ஹாரித்-

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
முரசின் வெற்றியும்
வாசக நெஞ்சங்கள் மத்தியில்
கிடைத்துவிட்ட-
வலிமையான-இனிமையான வரவேற்பும்
முரசை கேலி செய்தவர்கள் சிலர்கூட
முந்திக்கொண்டு வாசித்திட வைத்துள்ளது.
முரசை பின்பற்றவும் வைத்துள்ளது.

அனுபவங்கள்-வித்தகத்தனங்கள் பேசுவோர்
எந்தத்துறையும்
தமக்குரிய குத்தகை என்பது போல
மனப்போக்குக் கொண்டோர்
எப்போதும் ஜெயிப்பதில்லை.

ஒன்றில் தோல்வியோடு விலகவேண்டும்.
அல்லாவிடில்
வளர்ந்துவரும் சக்திகளை
பின்பற்றவேண்டும்.
சிறந்தவற்றை எவரும் எடுத்துக்கொள்ளலாம்.

முரசின் ஆரம்ப அடிவைப்பில்
முரசத்தில் கூறியிருந்தேன்.
இனி-முரசின் பாணியே
எங்கும் முகம் உயர்த்தும் என்று.
முப்பத்தைந்தாவது முரசில்
அதனை நினைவூட்டும் போது
அதற்கு மூல காரணமான
வாசக நெஞ்சங்களை
வாஞ்சையோடு அணைத்துக்கொள்கிறேன்.

இன்னும் பல மாற்றங்கள் படைப்போம்.
இன்னும் பல சிகரங்கள் தொடுவோம்.

ஒன்று சொல்கிறேன்.
பத்திரிகைத்துறை என்பது
மலை போன்ற பாரம் சுமக்கும்
கடினமான பணிதான்.
மூச்சு முட்டும் வேலைதான்.

ஆனால்-
பத்திரிகைத்துறை என்பது
பண்டிதர்களுக்கும்
தம் பெயரின் பின்னால்
படங்களை பட்டியலிட்டு வைத்திருப்போருக்கும்
மட்டுமே உரிய துறை என்று
சத்தியமாய் நம்ப வேண்டாம்.

வாசகர்களை புரிந்துகொள்வது
வாசகர்களிடம் கற்றுக்கொள்வது
அறிதல்-அறியவைத்தல்
புதிது-புதிதாய் முயல்தல்
ஈடுபாட்டோடு உழைத்தல்
இவை இருந்தால் போதும்.
அது நம்மிடம் உண்டு.
எனவே-உயர்வோம். ஜெயிப்போம். ■

எலும்புக்கூடுகள்-
தலைநகரில் அச்சுறுத்துகின்றன.
எதிர்க்கட்சியும்- ஆளும்கட்சியும்
பரஸ்பரம் குற்றம் சாட்டிக்கொண்டு
கட்சி அரசியல் மூலம்
அந்த விவகாரத்தை விகாரமாக்கியதால்
எல்லாமே குழப்பமாகிவிட்டது.

உயிரோடு இருப்பவர்களே
உதடுகள் திறக்க அஞ்சும் காலம் இது.
எலும்புக்கூடுகளோ
எழுந்து வந்து பேசப்போகின்றன?

நாடு முழுவதிலும்-
மனித உயிர்களின் பெறுமதி
இறங்குமுகமாய்த்தான் இருக்கிறது.

வடக்கு-கிழக்கில் தோண்டினால்
எண்ணமுடியாத தொகையில்
எலும்புக்கூடுகள் கிடைக்கலாம்.

தெற்கில் எனினும் தோண்டலாம்.
தோண்டிவைத்துக்கொண்டு
அரசியல் லாப-நட்டக்கணக்குப் பார்க்கலாம்.
வடக்கு-கிழக்கில், தோண்ட வேண்டாம்
தோண்ட நினைத்தாலே போதும்
மரணம் சர்வ நிச்சயம்.

தோண்டப்பட்ட எலும்புக்கூடுகள்
பற்றி யோசிக்கும்போது
தோண்டப்படாமல் கிடக்கின்ற
அந்த எலும்புக்கூடுகளையும்
நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கிறது. ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

# தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-32

### விதைக்கப்பட்டவற்றில் வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

"ஆராய்ச்சி"
உள்ளுக்குள் ஈரமில்லாதவர்களால்
ஊருக்குள் அநாதையானோம்.
கல்லுக்குள்ளாவது ஈரமிருக்குமோ?
விடையைக் காணவே
உடைத்துப் பார்க்கிறோம்.

கலைமகள் அன்ஸார்
அல்-அக்ஸா நகர், கிண்ணியா-2.

**பாராட்டுக்குரிய கவிதைகள்**

வளரும்
பயிர் இரண்டு.
வசந்தத்தின்
முகவரியை
தொலைத்துவிட்டு
இங்கே
தேடுகின்றனவோ?
பூ. இதயரெத்தினம்
ஆரையம்பதி-3.

ஒருவனுக் குணவின்றேல்!....
இந்தப்...
பாரதிர்ந்தது. தம்பி
சிறயவ னுனக்காகக்
கருங்கல்லும் உருகுதடா.
ச. மோட்சநாதன்
துறைநீலாவணை.

ஏழ்மை வேதம்
கல்லுடைத்து
காத்திருக்கும் பாலகனின்
பசியடைத்து
வெல்லுவேன் இந்த
ஏழ்மையை என
வேதம் செப்பினையோ?
எஸ். தங்கா, பெரியகல்லாறு-01.

எம் வாழ்க்கை
பெரிய மலைகள்
தகர்த்தெறியப் படலாம்
சிறு கல்லில் உளிகொண்டு
செதுக்கிவை!
எதிர்கால சந்ததிக்கு
எம் வாழ்க்கை
ஒரு பாடமாக
அமையட்டும்.
மா. கவிதா
அக்கரைப்பற்று-8.

வறுமை
"வறுமைக்கு ஏதிங்கே வயதெல்லை"
வா என்னுடன்"
கே. சண்முகம், ஹட்டன்.

இது?
தொண்ணூற்றி நாலிலே
தொடரவிருக்கும் கல்லறையமைத்தலுக்கு
தொடக்க நிகழ்ச்சியோ இது?
எஸ். பாலன், கொழும்பு-13.

ஓயாத அவலங்கள்
ஐ.நாவின்
யுனிசெப்
ஒவ்வொரு ஆண்டும்
ஒப்பாரி வைத்தாலும்
ஓயாது...
இந்த அவலங்கள்.
சிப்பியூர் சலீம்
மதவாச்சி.



"ஷெல்லடி என்று சொல்லடி"
கல் தோன்றி
மண்ணும் தோன்றியது
"ஷெல்"லடி பட்டு
உடைந்து போன எம்
வீட்டுச் சுவர்களிலிருந்து என்று
சொல்லடி கிளியே.
ஷர்மி, கண்டி.

யாருமில்லை
ஏடறியோம் எழுத்தறியோம்
ஏங்கவிட்டு ஈன்றவளும்
சென்றதேனோ?
ஏற்றிவிட யாருமில்லை.
சன்- பருத்திநகர்.

தளிர்க்கரங்கள் இங்கே
தழும்பேறிச் சிவப்பதோ?
துளிர்விடும் வேளையில்-இவர்கள்
துயரத்தைச் சுமப்பதோ?
சு. அருள்ஜோதி, கொழும்பு-13.

உடைப்பது கற்கள்தான்
ஆனால்..!
உடைந்து போனது
எங்கள்..
வாழ்க்கையே..!
ரீ. விவேகானந்தராஜா
திருக்கோவில்-2.

இல்லாத ஒன்று
மனித உள்ளத்தில்
இல்லாத
ஈரம்-இந்த
கல்லில்
இருக்கிறதா
பார்ப்போம்.
திருமதி. ஜே. இஸ்மாயில்
உடதலவின்னை.

## கவிதைப் போட்டி இல-35



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 29.1.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 35
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

திக்கெட்டும் திகழும் தமிழ் இனம் எங்கே, எப்போது என காத்திருக்கும் எனது உயிருக்கு நிகரான தமிழ் முரசே! பாப்பா முரசில் நீ தரும் தங்கத்தமிழை தாங்கிய அறிவுரையை நான் மனதார வாழ்த்துகின்றேன்.

சச்சி-சஜீவராஜ்-மட்டக்களப்பு.

•

அன்பின் தினமுரசே, உலக அதிசயங்களையும் உலக புதுமைகளையும், அள்ளித்தரும் முரசே, வாரம் தோறும் என் எண்ணத்தை கிள்ளிக் கொள்ளும் முரசே, உனக்கு எனது வார வணக்கம்.

ரி. சுமதன்-மட்டக்களப்பு.

•

தேவை ரசிகன் அறிமுகம்

சூடு, சுவை குன்றா தினமுரசே! உனக்கு நிகர் நீயே என்பது தற்போது யாவரும் அறிந்த விடயமே! ஆனால் ரசிகன் அறிமுகத்தை இன்னும் ஆறப் போடாமல் புதுவருடத்திலாவது அறிமுகப்படுத்துவாயாக! புது மணத்துடன் மென்மேலும் புகழ் மணம் பெற வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

எஸ். பத்மாவதி-கொழும்பு-10.

•

அன்பின் தினமுரசே,

புதிய கவிஞர்களுடன் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களுடன் நாட்டு நடப்பில் பக்கம் சாராது மிக சொற்ப காலத்தில் எங்கள் நெஞ்சங்களை கொள்ளைகொண்ட உன்னை மனதார வாழ்த்துகின்றோம்.

நிமலன், வசிகரன், சுஜிவன் நிசாந், மதிவானன்-மட்/புனித மிக்கேல் கல்லூரி மட்டக்களப்பு.

•

தினமுரசே!

என்னுயிர் தினமுரசே,

நீ ஏந்திவரும் அத்தனை அம்சங்களும் மூளைக்கு விருந்தாய் அமைவதோடு உன்னை எத்தனை முறை சுவைத்தாலும் திகட்டாத தேன் கிண்ணமாய் இருக்கிறாய். நீ என்றும் நிலைத்து வாழ என் வந்தனங்கள்.

ஏ. எஸ். மௌஜூத்-திருமலை.

•

தினமுரசில் வந்த அத்தனை அம்சங்களும் வெகுஜோர். குறிப்பாக அஸ்வதியின் "நரகத்திற்குப் போ" சிறுகதை பிரமாதம். நாட்டுப்பற்றை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது. பாராட்டுக்கள்.


ஏ. எம். மத்லூப்-தெஹிவளை.

•

வாரம் தோறும் வலம் வரும் வண்ணமுதான முரசே!

உன் வடிவழகைக்கண்டு நான் மதிமயங்கி நிற்கின்றேன். பார்ப்பவர் கண்ணை பரவசமடையச் செய்யும் உன் திறமையைக் கண்டு திணறுகின்றேன் நான். வாழ்க வளமுடன் நீ. வளர்க உன் பணிசிறக்க.

செல்வி. நபீலா மீராலெவ்வை
நிந்தவூர்-03.



•

வார மலரே இவ்வாரம் மன நிறைவு தந்தாயே. நீ சுமந்து வந்த அனைத்து அம்சங்களும் மிகவும் பிரமாதம். அத்தோடு என் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாகிவிடும் போது "கண்ணே மதுமிதா" என்னும் தொடர்கதை என் இதயத்தை கவர்ந்துவிடுகிறது.

லத்திபா-மூதூர் நடுத்தீவு.

•

தித்திக்கும் சுவையான சிறப்பம்சங்களை திறமையுடன் அள்ளி வழங்கும் தினமுரசு வாரமலரே- நீ கடந்து சென்ற ஆண்டில் அள்ளி வழங்கிய சிறப்பம்சங்களைப் போன்று

# வாசகர் சாலை




இப்புதிய ஆண்டிலும் சுமந்துவந்து என் கரங்களில் தவழ்ந்திட என் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

செல்வி. மஹ்பூபாசாஹுல் ஹமீட்-காத்தான்குடி-06.

•

அன்பின் முரசே,

என் பலகோடி வணக்கம் வார, வாரம் வித்தியாசமான அம்சங்களை தந்து வியப்பில் ஆழ்த்துகின்றாய். வளர வேண்டும் இன்னும் உனது சேவை.

சுஜா, ஷர்மிளா, ஜெஸீலா, மஸ்தியா, சறுனா, மசீனா, பானு, ஷம்றாத், மகிசா-மூதூர்-01.

•

"முரசுக்கு" ஈடு தினமுரசே! உன் சேவைக்கு என் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ஏ. ஜே. எம். பைஸர்-பீர்சாய்பு வீதி.

•

கண்ணே மதுமிதாவில் தன் கைவரிசையை காட்டிய ரசிகன் இலக்கிய நயத்திலும் காட்ட ஆரம்பித்துவிட்டார். ரசிகன் பலே கில்லாடிதான் போங்கள். முரசே ஆக்கங்களை அள்ளித்தருவதில் உனக்கு நிகர் நீயேதான். என்றென்றும் நலமுடன் வாழ என் வாழ்த்துக்கள். வாழ்க!

எ. பரீனா பைதா-புத்தளம்.

•

புதிய ஆண்டில் புத்தம் புது முரசு வேண்டும். நித்தம் ஒரு முரசு வேண்டும். எங்கள் மனம் மகிழ வேண்டும். தமிழில் நீ வளர வேண்டும்.

தெ. சுதர்சன். அ. யசோதினி, அ. சுரேந்திரன் ந. கோபி-புத்தளம்.

•

பொன் முரசே,

உன்மேல் கோலம் போடும் ரசிகனின் ரசமான படைப்பு மேலும் உனக்கு மெருகூட்டுகிறதே. ரசிகனின் ரூட்டே வேறு என்றென்றும் நீ மலர வாழ்த்துக்கள்.

எம். நிஸா முஸம்மில்-தியத்தலாவை.

•

வர்ணப்படங்களோடு இந்த முறை சினிவிசிட் ஜோர். ரசிகனின் இலக்கிய நயம் எங்களை விண்ணில் பறக்க வைக்கிறது. மகாபாரதம் தரும் தினமுரசே உனக்கு எங்கள் கோடி நன்றிகள்.

சாபிகான், சபான், ஆசிக்கான், ரிஸ்க்கான், ஸமீனாடஹ்லான், நிசானி -பட்டுகொடை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ரணிலின் அழைப்பை புலிகள் நிராகரிப்பு! தேர்தலுக்கான தந்திரம் என்று கூறுகின்றனர்!!

## "உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிய வடக்கே தாக்குதல்"

புலிகள் அமைப்பினர் பேச்சுக்கு வரலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் அழைப்பு விடுத்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் அது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள புலிகள் அமைப்பினர் ரணிலின் அழைப்பு தேர்தல் பிரச்சாரத் தந்திரம் என்று கூறியுள்ளனர்.

புலிகள் அமைப்பின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கிட்டுவின் நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றும் போது, யுத்த ஆண்டை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. அதை எதிர் கொள்ள அனைவரும் தயாராக வேண்டும் என்று கூறியுள்ளார்.

புலிகள் அமைப்பினர், பேச்சுக்கள் தற்போது சாத்தியமாகாது என்ற கருத்தையே வலியுறுத்தி வருகின்றனர்.

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் வடக்கே பாரிய தாக்குதல் ஒன்றுக்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று அவர்கள் யாழ்ப்பாணத்தில் கூறிவருகின்றனர்.

புதிய இராணுவத்தளபதி ஜெரி டி.சில்வா பதினாறாயிரம் புதிய துருப்புக்களை உருவாக்கி பாரிய இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிடப் போவதாக கூறியுள்ள புலிகள், அரசு யுத்தத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

புதிய இராணுவத் தளபதியும் சமீபத்தில் அளித்த பேட்டிகளில் வடக்கே பெரியளவான தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிருப்பது போலவே கூறியுள்ளார்.

தற்போதும் யாழ்குடாநாட்டில் ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

காங்கேசன்துறை கடலில் இருந்தும் பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

முல்லைத்தீவிலும் புக்காரா விமான குண்டுவீச்சால் கணவன், மனைவி பலியான்துடன், பலர் காயமடைந்ததாகவும் உடமைகள் சேதமானதாகவும் தகவல்கள் வருகின்றன.

இவ்வாறான நிகழ்வுகள் போரில் சம்பந்தப்படாத, போர் தொடர்வதால் விரக்தியுற்றுள்ள மக்களையும் அரசு மீது அதிருப்தியடைய செய்துவருகின்றன.

தாக்குதல்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கும் போது பேச்சுக்கள் பற்றிய அறிவிப்புக்கள் மக்களிடம் நம்பிக்கையூட்டு வனவாக தெரியவில்லை.

படையினரும்-புலிகளும் மோதிக் கொள்ளாத போதும் ஷெல்தாக்குதல்கள் நடைபெறுவது பொதுமக்களையே பாதிக்கிறது. புலிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத போது, புலிகளது நிலைகளையே தாக்கியதாக படையினர் கூறுவார்களே யானால் பாதிக்கப்பட்ட மக்களிடம் அது வெறுப்பையே தோற்றுவிக்கும்.

மார்ச் மாதத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கிழக்கிலும், வவுனியாவிலும் நடைபெறுவதால் வடக்கு-கிழக்கில் பாரிய தாக்குதல் உடனடியாக நடைபெறாது.

வடக்கே பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதன் விளைவுகள் தேர்தல் முடிவுகளையும் பாதிக்கும் என்பதால் தேர்தல் முடிந்த பின்னரே இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகும். ■

# மாத்தையா ஏற்கனவே மாண்டுபோனார்? சந்தேகம் நிலவுவதாகச் சொல்கிறது பி.பி.சி!!





கைகுலுக்கியபடி அன்று மாத்தையா-பொட்டம்மான். குலுக்கும் கரத்தில் விலங்கிட வேண்டிவரும் என்று யார் கண்டது?

புலிகள் அமைப்பினரின் உட் பிரச்சனைகள் பற்றிய செய்திகள் வதந்திகளோ என்ற சந்தேகம் இப்போது மறைந்துவிட்டது.

புலிகள் அமைப்பினரின் வெளிநாட்டுச் சஞ்சிகைகள் இப்போது 'மாத்தையா தேசத்துரோகி' என்று கடுமையாகக் குற்றம் சாட்டுகின்றன.

இலண்டனில் இருந்து வெளிவரும் "களத்தில்" என்னும் பத்திரிகை புலிகள் அமைப்பினரால் வெளியிடப்படுவதாகும். கடந்தவருடம் அப்பத்திரிகை 'மாத்தையாவுக்கு பிரச்சனை' என்பது கட்டுக்கதை என்று கூறியிருந்தது.

சமீபத்தில் 30.12.93 அன்று வெளியான "களத்தில்" பத்திரிகையில் 'மாத்தையா ஒரு தேசத்துரோகி என்பதால் அவருக்கு ஆகக்கூடிய தண்டனை வழங்கப்படவேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7.1.93அன்று வெளியான 'களத்தில்' பத்திரிகையில் தேசத்துரோக குற்றத்தின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட இருப்பவர்கள் என்று மூன்று பேரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1. மாத்தையா
2. சுரேஸ்(மாத்தையாவின் மெய்ப் பாதுகாவலர்)
3. மகேந்திரராசா (எஞ்சினியர் என்று அழைக்கப்படுபவர்)

கனடாவில் இருந்து வெளிவரும் புலிகள் அமைப்பினரின் பத்திரிகையான "உலகத் தமிழர்" 'இந்தியாவின் உள்சதி மாத்தையா விசாரணையில்' என்ற தலைப்போடு வெளியிட்டுள்ள செய்தியில், "இந்திய அரசு இதுகாலவரை தமிழ்த் துரோக குழுக்களை பயிற்றுவித்து விடுதலைப் புலிகளின் உறுதியைக் குலைக்க முற்பட்டது. அது முடியாமல் போகவே, மாத்தையாவைத் தமது கருவியாக்கியது" என்று குறிப்பிட்டுள்ளது.

புலிகள் அமைப்பினரின் உட் பிரச்சனை பற்றிய செய்திக் குறிப்பொன்றை இலண்டன் பி.பி.சி. வானொலி வெளியிட்டது.

மாத்தையாவுக்கு தலைமை தண்டனை வழங்கினால் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் மத்தியில் மாத்தையாவுக்கு செல்வாக்கு இருக்கிறது என்று பி.பி.சி கூறியுள்ளது.

"மாத்தையா ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டதாக கருத்து நிலவுகிறது" என்று பி.பி.சி இலங்கைச் செய்தியாளர் கூறியுள்ளார்.

இவ்வாறு இலண்டன் பி.பி.சி தெரிவித்தது.

இதேவேளை மாத்தையாவுக்கு கிட்டுவின் நினைவு தினத்தன்று தண்டனை வழங்கப்படும் என்று சில செய்திகள் வெளியாகின. ஆனால் அன்றைய தினம் அவ்வாறு தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இதேவேளை "பாரிஸ் ஈழநாடு" பத்திரிகைக்கு கடந்த 13ம் திகதி குண்டுவீசியது மாத்தையா குழுவி னரே என்று சந்தேகம் நிலவுகிறது.

# கிட்டுவின் மரணம்-இந்தியாவின் துரோகம்! நினைவுதினக் கூட்டத்தில் புலிகள் கண்டனம்!!

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் யாழ் மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் சதாசிவம் கிருஷ்ணகுமார் என்னும் கிட்டுவின் நினைவுதினக் கூட்டங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

கடந்த வருடம் ஜனவரி 16ம் திகதி கிட்டுவும் அவரோடு வந்த 10 பேரும் கடலில் பலியானார்கள்.

சமாதானத்திட்டத்தோடு கிட்டு வந்ததாகப் புலிகள் அமைப்பினர் தெரிவித்தனர்.

கிட்டு வந்த கப்பலில் ஆயுதங்கள் இருந்ததாக இந்திய அரசின் வட்டாரங்கள் கூறின.

கிட்டுவும் அவரோடு வந்தவர்களான 10 பேரும் தம்மைத்தாமே அழித்துக்கொண்டதாக புலிகள் அமைப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கிட்டு பலியாகிய முதலாண்டு நினைவு தினம் கடந்த 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரால் அனுஷ்டிக் கப்பட்டது.

கிட்டு உட்பட 11 பேரினதும் உருவப் படங்கள் முக்கிய இடங்களில் வைக்கப் பட்டிருந்தன.


நினைவுத்தூபிகளும் திறந்து வைக்கப்பட்டன. கிட்டுவின் 30 அடி உயரமான உருவப்படமும் திறந்து வைக்கப்பட்டது.

நினைவு தினக் கூட்டங்களில் உரையாற்றிய புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர்கள் இந்தியா மீது கடும் கண்டனங்களை தெரிவித்தனர்.

"இந்திய அரசு தமிழ் மக்களுக்கு செய்த வரலாற்றுத் துரோகமே கிட்டுவின் இழப்பாகும்" என்றும், இந்திய அரசின் துரோகத்தனத்தால் கிட்டு வங்கக் கடலில் காவியமானார்", என்றும் புலிகள் அமைப் பின் 'வெளிச்சம்' என்னும் சஞ்சிகை கிட்டுவின் அட்டைப்படத்தோடு செய்தி வெளியிட்டுள்ளது.

கிட்டு பயணம் செய்த 'அஹமத்' என்னும் கப்பலின் வடிவம் கொண்ட 45 அடி உயர கட்-அவுட்டுக்களும் யாழ்ப் பாணத்தில் முக்கிய சந்திகளில் வைக்கப் பட்டிருந்தன.

புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர் என்று சொல்லப்படும் தேவர், கிட்டுவின் நினைவுதினக் கூட்டமொன்றில் உரை யாற்றியபோது "இந்தியா எமது கல்வியை அழிப்பதற்கு கடுமையாக முயல்கிறது." என்று குற்றம் சாட்டினார். ■



கிட்டு

## மனிதாபிமானமற்ற யுத்தம்! கத்தோலிக்க ஆயர் சங்கம் கூறுகிறது!!

வடக்கு-கிழக்கு யுத்தம் மனிதாபிமானமற்றது என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கம் கூறியுள்ளது.

வத்திக்கான் வானொலி இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கத்தின் அறிக்கையை ஒலிபரப்பியது.

கடந்த பத்துவருட மோதலால் பத்தாயிரம் உயிர்கள் பலியானதாகவும், பத்து இலட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளதாகவும் கத்தோலிக்க ஆயர் சங்கம் கூறியதாக வத்திக்கான் வானொலி தெரிவித்தது.

# தந்தி வரும் பிந்தி! கடிதம் வரும் முந்தி!!

(தினமுரசு நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப்பிரதேச தபாலகப் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு வெளியிடங்களிலிருந்து அனுப்பி வைக்கப்படும் தந்திகள் பெரும்பாலும் பலநாட்கள் தாமதித்தே வந்தடைகின்றன.

தந்திகள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படுவதே இதற்கான காரணமென அறிய வருகின்றது.

அவசரமாகத் தகவல்களைத் தெரிவிப்பதற்காக அனுப்பப்படும் தந்திகள் தாமதித்தே கிடைப்பதால் தந்திச் சேவையை இப்பிரதேசங்களில் அர்த்தமற்ற சேவையாகக் கருத வேண்டியுள்ளது.

நீண்ட காலமாக இருந்துவரும் இந்த அவல நிலையையிட்டு மக்கள் பிரதிநிதிகள் எவரும் தட்டிக்கேட்டதாகவும் தெரியவில்லை!

தந்தி ஒன்றை அனுப்புவதைவிட உரிய தகவலை சாதாரண கடிதம் மூலம் அறிவித்தால், தந்தி கிடைப்பதற்கு முதலே கடிதம் கிடைத்துவிடுகின்றது.

நமது தந்திச் சேவையின் 'மகிமை' இப்படியிருக்கும் போது, தந்திகளுக்குப் பதிலாக 'ஃபக்ஸ்' சேவை நடத்தவும், தபாலகங்களுக்கு ஃபக்ஸ் வசதி அளிக்கவும் அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தைச் சேர்ந்த, கல்முனை, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, அட்டாளைச் சேனை, அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, மருதமுனை ஆகிய பகுதி பிரதம தபாலகங்களுக்கு உடனடியாக ஃபக்ஸ் வசதி அளிக்க சம்பந்தப்பட்டோர் ஆவன செய்ய வேண்டுமெனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

மக்கள் பிதிநிதிகளின் கவனமும், முயற்சியும் இது விடயத்தில் திரும்புமா? ஃபக்ஸ் வசதிகிடைக்குமா? ■

# வரிகட்டியும் வழக்கில் மாட்டியவர்!

(திருகோணமலை நிருபர்)

ஒழுங்காக வரிகட்டிவந்த நபர் ஒருவர் மீது வரி கட்டப்படவில்லை என்று நகராட்சி மன்றத்தாரால் வழக்குத் தொடரப்பட்டது. இந்த விசித்திர வேலையைச் செய்த நிருவாகம் தான் பிழையான நடவடிக்கை என்று தெரிந்து கொண்டவுடன் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டது.

நீதிமன்ற வீதியிலுள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கெதிராக 1989ம் ஆண்டு முதல் வரிப்பாக்கி இருப்பதாகவும் அதன் பேரில் எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கையின் பிரகாரம் நீதிமன்றம் வருமாறும் அழைப்பாணை அனுப்பப்பட்டதால் திகைத்துப் போன வர்த்தக நிலைய உரிமையாளர், ஒழுங்காக வரிகட்டிய ஆவணங்களுடன் நீதிமன்றம் சென்று தன் நிலையை விளக்கியதன் பிறகே நகராட்சி மன்றத்தார் தமது தவறை உணர்ந்து வழக்கை உடனடியாக வாபஸ் பெற்றனர். வர்த்தக நிலைய உரிமையாளர் நகராட்சி மன்றத்தாரின் நிருவாகத் திறனை வியந்தவாறே சிரித்துக்கொண்டு சென்றார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்


விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex,
NUWARA ELIYA.

Dial: 052-2508 & 3093
AND
072-26088, 078-61933

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

எமது புதிய முகவரி

| | |
|---|---|
| வினோத் இன் | Vinnoth Inn |
| இல.33, மூன்றாவது மாடி | No.33, 3rd Floor |
| குணானந்த மாவத்த | Gunanantha Mawatha |
| கொட்டாஞ்சேனை. | Kotahena |
| கொழும்பு–13. | Colombo-13. |

போன்: 431845

மேலுள்ள விலாசத்திற்கு இடம் மாறியுள்ளோம்.

**இப்புதிய இடம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலும், குணானந்த மாவத்த தபால் கந்தோரிற்கு மிக அருகாமையிலும் அமைந்துள்ளது.**

தலைநகர பஸ் மார்க்கம்
இல. 112, 102, 168, 115, 176, 145.

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
*187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398*


தருவது — அயலகச் செய்திகள் — ஏழுமலை

# வசைபாடிய முன்னாள் அமைச்சர் வாழ்த்துப்பா பாடி மீண்டும் இணைந்தார்!

தமிழக அரசியலில் அடிக்கடி கட்சிமாறுவது சாதாரண சம்பவம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து விலகி செல்வி ஜெயலலிதாவை விமர்சித்துக்கொண்டிருந்தவர் வி.வி.சுவாமிநாதன். இவர் ஒரு முன்னாள் அமைச்சர்.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழ் நாட்டில் நல்லாட்சி இயக்கம் துவக்கியபோது அவருக்கு வலதுகரமாக இருந்து ஜெயலலிதாவை தமிழகத்தை விட்டு விரட்டப்போவதாக சொல்லிக்கொண்டிருந்தவர்.

ஜெயலலிதாவை மிக மோசமாக விமர்சித்து அறிக்கைகளும் வெளியிட்டவர் சுவாமிதான்.

அவர் இப்போது மீண்டும் செல்வி ஜெயலலிதாவோடு சேர்ந்துவிட்டார்.

தான் மீண்டும் அ.இ.அ.தி.மு.கவில் சேர்ந்தது ஏன் என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கைதான் சுவையானது.

"பூமி குளிரும்படி மழை பெய்தது முதல்வர் ஜெயலலிதா காலத்தில்தான். ஜெயலலிதாவின் காலம் பொற்காலம். என்னை மீண்டும் கட்சியில் சேர ஜெயலலிதா அனுமதித்தது, முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜி.ஆரே கூப்பிடுவது போல இருந்தது." என்று அந்த அறிக்கையில் சுவாமிநாதன் கூறியுள்ளார்.

மக்களின் மறதிமீது சுவாமிநாதனுக்கு அத்தனை நம்பிக்கை.

■

காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநில முக்கிய பிரமுகராகக் கருதப்பட்டவர் திருமதி கீதா நாராயணன்.

பிரபல சமூக சேவகி என்று நம்பப்பட்டவர்.

முக்கிய தலைவர்கள் தமிழ்நாட்டுக்கு வரும்போது மாலையோடு விமானநிலையத்திற்கு சென்றுவிடுவார்.

சமீபத்தில் கீதாநாராயணன் தமிழகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

சென்னையில் அவரது வீட்டில் விபச்சாரத்தில் பெண்களை ஈடுபடுத்தியபோதே பொலிசார் ஆதாரத்தோடு கைதுசெய்தனர்.

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட கீதா நாராயணன் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து தமிழக காங்கிரஸ் வட்டாரத்தில் சலசலப்பு.

கீதா நாராயணன் சொல்லியுள்ள விளக்கம் படு சுவாரசியம்.

"பெரிய தலைவர்கள் என்னைக் கண்டால் தனியே அழைத்து "எப்படியம்மா நல்லா இருக்கியா" என்று கேட்பார்கள். அதனால் பலருக்குப் பொறாமை. என் அழகு மீது ஆத்திரம். இது ஜெயலலிதா திட்டமிட்டு என்மீது சுமத்திய பழி."

கீதா நாராயணன் சொல்வதை யாரும் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை.

இதே சமயம் தமிழக காங்கிரஸ் பிரமுகர் ரமனிபாய் என்பவர் விடுத்துள்ள அறிக்கையில் ஆணும், பெண்ணும் சேர்ந்தால்தானே விபச்சாரம். பெண்களை மட்டும் பிடித்துக்கொண்டு ஆண்களை விட்டுவிடுவது என்ன நீதி? கடந்த காலத்தில் மிகப் பெரிய புள்ளிகள் சம்பந்தப்பட்ட வீடியோ கசட்டுக்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு காணாமல் போயின என்று கூறியுள்ளார்.

■

மகாத்மா காந்தியை சுட்டுக்கொலை செய்த நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே காந்தி கொல்லப்பட்டதில் வருத்தமில்லை என்று கூறியுள்ளார்.

காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவரான கோபால் கோட்சே காந்தியை தனது சகோதரர் கொலை செய்ததுக்கு யாரது தூண்டுதலும் காரணம் அல்ல என்றும் கூறியுள்ளனர்.

"மகாத்மாவை நான் கொலை செய்தது ஏன்" என்ற புத்தகம் கொலையாளி கோட்சேயால் எழுதப்பட்டது. அந்தப் புத்தகமும் கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டது.

தூக்குத்தண்டனை பெற்று முடிந்த கோட்சே காந்தி தேசப் பிரிவினைக்கு காரணமானவர் என்றும், அவரைப் பாகிஸ்தானின் தந்தை என்று அழைக்கலாம் என்றும் அந்தப் புத்தகத்தில் கூறியுள்ளார்.

முஸ்லீம்களை தாஜா செய்யும் தேசவிரோதக் கொள்கையை காந்தி கடைப்பிடித்தார் என்று கோட்சேயின் தம்பி கோபால் கோட்சே கூறியுள்ளார்.

# மக்கள் மனதில் மறையாத தலைவன்!



முன்னாள் தமிழக முதல்வர் அமரர் எம்.ஜி.ஆரின் சமாதிமுன் அவர் பிறந்தநாளில் திரண்ட மக்கள் அலை மோதுகிறார்கள். சுமார் 2 கோடி ரூபா செலவில் தமிழக அரசால் சமாதி கட்டப்பட்டுள்ளது. "மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும். அது முடிந்த பின்னாலும் என் பேச்சிருக்கும்." என்றது உண்மைதான்.

## கிராம அதிகாரிகள் ஒன்று கூடினார்கள்!

மன்னார் தீவுப் பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர்களின் வருடாந்த ஒன்று கூடல் வைபவம் சமீபத்தில் மன்னார் உதவி அரச அதிபர் பணிமனையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. விழாத் தலைவர் திரு.ரகுநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த வைபவத்தை சிரேஷ்ட மூத்த கிராம அலுவலர் திரு.என். சிவகுமாரவேலு அவர்கள் ஆரம்பித்து வைத்தார். பிரதம அதிதியாக உதவி அரச அதிபர் செல்வி. ச.கணபதிபிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக அலுவலக உதவியாளர் செல்வி.எல்.ஆர். அய்யாப்பிள்ளை, திட்டமிடல் பணிப்பாளர் செல்வி.ப.சின்னத்துரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரைகள் ஆற்றினார்.

மன்னார் மாவட்ட சிறீலங்கா ஐக்கிய கிராம அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் திரு.ஏ.ஆர். அலிகான் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து பிரதம லிகிதர்.ச.சூசைநாயகம் ரெவ்வல் ஆசியுரை வழங்கினார். கிராம அதிகாரிகள் அலுவலக உத்தியோகத்தர்கள் கொண்ட இந்த வைபவத்துக்கு ஏறக்குறைய 75 பேர் பங்கெடுத்தனர்.

மதியபோசனத்துக்குப் பின் "கதம்பம்" என்ற தலைப்பில் பல இனிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஈற்றில் விழாச் செயலாளரும் மன்னார் மாவட்ட சிறீலங்கா ஐக்கிய கிராம அதிகாரிகளின் சங்கத்தின் பொதுச் செயலாளருமான திரு.ஈ.ஜே.ஜே மிராண்டா அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் இனிதே நிறைவுபெற்றது.

புகார் பெட்டி

## கட்டணம் அறவிடுவது ஏன்? புகார் சொல்கின்றனர் பொதுமக்கள்

இராகலை பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பொது மலசல கூடத்திற்கு சிறுநீர், மலம் கழிக்க செல்வோரிடமிருந்து பணம் வசூலிக்கப்படுவதாக பொது மக்கள் புகார்கள் தெரிவிக்கின்றனர்.

வலப்பனை, ஹங்குரங்கெத்த, உடபுசல்லாவ, நுவரெலியா போன்ற இடங்களிலிருந்து அன்றாடம் வேலைக்கு செல்வோர் இராகலை வழியாகவே செல்கின்றனர். அது மட்டுமல்லாது பிற தூர இடங்களிலிருந்து இங்கு வருவோர், பாடசாலை பிள்ளைகள் இம்மலசல கூடத்திற்கு செல்லும் போது பணம் வசூலிக்கப்படுவதால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்நகருக்கென சுத்திகரிப்பாளர்கள் வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ள போதிலும் இவர்கள் பணம் வசூலிப்பது ஏன் என கேட்கின்றனர்.

பிரபல்யம் பெற்று வரும் நகரங்களில் இராகலை முன்னணி வகிக்கின்றது. எனினும் சுகாதார நிலைமை மிகவும் மோசமடைந்து வருகின்றது. கடை வீதிகள், சுற்றுப் புறங்களிலும் ஆங்காங்கே குப்பைக்கூழங்கள் நாட்கணக்கில் சேர்த்து, போட்டு வைப்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. மக்கள் மூக்கைப் பிடித்து கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இதனை வலப்பனை பிரதேசத்திலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டு இக்குறைகளை தீர்த்து வைக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோருகின்றனர்.

(இராகலை நிருபர்)

## புத்தளம் கற்பிட்டி பாதை புனரமைக்கப்படுமா?

புத்தளத்திலிருந்து கற்பிட்டிவரை செல்லும் பாதையானது சுமார் 40 கி.மீ. வரை தூரம் கொண்டது. கூடுதலான அளவு அகதி முகாம்களைக் கொண்ட இவ்விடங்களில் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாண மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறார்கள். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அடை மழை காரணமாக பாதையில் சிறு சிறு இடங்களில் நீர் தேங்கியுள்ளமையுடன் பாலக்குடாவிலிருந்து கற்பிட்டி வரையுள்ள பாதை மிகவும் மோசமான நிலையிலுள்ளது. ஒரு வாகனம் அதில் புதையுண்டால் அந்நாள் வரை அவ்வழிப் போக்குவரத்து ஸ்தம்பித நிலையை அடைகின்றது. அன்றாடம் உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் மீனினையும் இப்பகுதியிலிருந்து கொழும்புக்கு எடுத்துச்செல்லும் லொறிகள்கூட இப்பாதையின் சீர்கேட்டின் மத்தியிலான தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றன. அன்றாடம் பிரயாணிகள் அவ்விடத்தில் இறங்கி சற்று தூரம் நடந்து சென்று மீண்டும் தமது பிரயாணத்தை மேற்கொள்கிறார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பாதையினை சீர் செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்ள மாட்டார்களா? என அங்கலாய்க்கும் அதேநேரம் புத்தளத்திலிருந்து பாலக்குடா வரை பாதை புனருத்தாரனம் செய்யப்பட்டு பாலக்குடாவிலிருந்து கற்பிட்டி வரையான 10 கி.மீ. தூரம் ஏன் சீர் செய்யப்படவில்லை என்ற கேள்விக்குறியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எச்.எம்.அக்றம், நுரச்சோலை.

ஒரு மறுப்பு

## எடுத்துச் சொல்லியும் செவியில் ஏறவில்லை வாங்குவதில் வேகம் சேவையில் மந்தம்

தங்கள் 26.12.1993ந் திகதிய தினமுரசு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விடயம் சம்பந்தமாக அறியத்தருவது,

மேற்படி தலையங்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பாதை நகரசபைக்குரியதல்ல. நகரசபைக்கு சொந்தமில்லாத பாதையாகையால் நகரசபைப் பணத்திலிருந்து செலவிட முடியாது. இப்பாதையை நகரசபைக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

செயலாளர்
நகராட்சிமன்றம்-திருகோணமலை.

## பிரதான வீதியின் சீர்கேடு

தற்போது திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக சீனக்குடா திருகோணமலை பிரதான வீதி மிகவும் சீர்கேடான நிலையில் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது. இதனால் வீதியில் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன. அத்துடன் குழிகளில் தண்ணீர் தேங்கிநிற்பதால் சைக்கிள்களில் செல்வோரும் பாதசாரிகளும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

-சீனக்குடா-

## பதிவாளர் அலுவலகத்தில் மெதுவான சேவையா?

பிறப்பு,இறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் பெறுவதற்கு, நுவரெலியா மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்து மூன்று மாதங்களாகியும் கிடைக்காததால் விண்ணப்பதாரிகள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் 1994ம் ஆண்டு தமது பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதற்கு விண்ணப்பித்த பலர் பிறப்பு சாட்சி பத்திரங்களை சமர்ப்பிக்க முடியாமலும் பிறப்பு சாட்சி பத்திரங்கள் இல்லாததால் பெரும்பாலானோர் தேசிய அடையாள அட்டை பெற விண்ணப்பிக்க முடியாமலும் இருக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவ்விண்ணப்பதாரிகளுக்குரிய இறப்பு,பிறப்பு அத்தாட்சி பத்திரங்களை அனுப்பி வைத்து உதவுவார்களா?

கே.நவநீதராஜா, இராகலை.

## இந்தவீதிக்கு ஏன் இந்தக் கதி?

அனுராதபுரம் மேற்கு-கம்பிரிகஸ்வெவ பிராந்திய பிரதான வீதி உட்பட பல வீதிகள் மழைகாலத்தில் நதியாக பெருக்கெடுக்கின்றன.

அண்மையில் அழகாக திருத்தியமைக்கப்பட்ட கம்பிரிகஸ்வெவ பிரதான வீதியில் பெருங்குறையாக காணப்படுவது இருபக்க வீதிக் கான்கள் இல்லாமையே. இதனால் மழைநீர் வீதி வழியாக பெருக்கெடுத்து நீர் நிலைகளை அடைகின்றமையால் வீதியில் செல்லும் போது நதியிற் செல்லும் பிரமை ஏற்படுகிறது.

மற்றும் உபவீதிகள் எவ்வாறென கூறவா வேண்டும்? கட்டுக்கலியாவ, கியூளோகட, பாசிவளை போன்ற உபவீதிகள் ஆடு, மாடுகள் மற்றும் கால்நடைகள் கூட செல்ல முடியாதவாறு களித்தரைகளாக காட்சியளிக்கின்றன.

இந்த வீதிகளை விரைவில் திருத்தியமைக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் தினமுரசு ஊடாக கோரிக்கை விடுகின்றனர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு.

எ.எம்.மிஸுருள்லாபி
கம்பிரிகஸ்வெவ.

## கிண்ணியா ஒரிகன் பாலம் உடைவு

சின்னக் கிண்ணியாவையும்-பெரிய கிண்ணியாவையும் ஒன்றிணைக்கும் "ஒரிகன்" பாலம் தற்பொழுது இரு பகுதியிலும் பாரிய குழிகள் தோன்றி உடைந்து காணப்படுகின்றது. இப்பாலம் அண்மையில் தான் திருத்தி அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிண்ணியா நிருபர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்





புலிகளது இராணுவ ரீதியான வெற்றிகள் வியப்பானவைதான். அந்த வியப்புக்களில் தமிழ் பேசும் மக்களது அரசியல் தலைமைத்துவ வெற்றிடம் மறைக்கப்பட்டு வருகிறது.

# உள்ளூராட்சித் தேர்தல்களும் வெட்டி ஓடல்களும்!

கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தப் போவதாக ஜனாதிபதி அறிவித்தார்.

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் இப்போது தேர்தல் வேண்டாம் என்றே கருத்துத் தெரிவித்தன.

தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் மட்டுமல்லாமல் ஆளும்கட்சிக்குள்ளும் குறிப்பாக கிழக்கில் உள்ள ஆளும்கட்சி முக்கியஸ்தர்களிடமும் தேர்தல் உடனடியாக சாத்தியமில்லை என்ற கருத்தே நிலவியது.

ஜனாதிபதிக்கு அதை எடுத்துச் சொல்வது யார் என்ற தயக்கமும் இருந்தது. எப்படியோ தேர்தலை சற்றுப் பின்போட்டு மீண்டும் அறிவித்தார் ஜனாதிபதி.

சூழ்நிலையில் பெரிய மாறுதல் இல்லை. இதனைவிட தள்ளிப் போடாமல் முன்னரே தேர்தலை நடத்தியிருக்கலாம்.

புலிகளும் விரும்பினால் தேர்தலில் கலந்துகொள்ளலாம் என்று ஜனாதிபதி கூறினார்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள புலிகள் தேர்தல் அறிவிப்புக் கேட்டதும் ஆயுதங்களை எல்லாம் தூக்கி ஓரத்தில் வைத்துவிட்டு ஓடிவந்து தேர்தலில் நிற்பார்கள் என்று ஜனாதிபதி நம்பியிருக்கமாட்டார். ஒரு சாணக்கியமான பேச்சாக அப்படி கூறியிருப்பார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை கிழக்கிலும், வவுனியாவிலும் நடத்துவதன் நோக்கமே அரசாங்கம் தனது பலத்தையும், புலிகளது பலவீனத்தையும் வெளிப்படுத்திக் காட்டுவதற்குத் தான்.

அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்களின் அங்கீகாரம் பெற்ற ஜனநாயக நிர்வாகம் இருப்பதாகக் காட்ட விரும்புகிறது.

அரசியல் ரீதியாக புலிகளை தனிமைப்படுத்திக் காட்டி, புலிகளது பயங்கரவாதப் பிரச்சனை மட்டுமே தீர்க்கப்படவேண்டிய பாக்கியுள்ள பிரச்சனை என்று சொல்வதை உறுதிப்படுத்தவே ஜனாதிபதி விரும்புகிறார்.

இராணுவ ரீதியில் புலிகளது செயற்பாடுகள் பிரமிப்புக்களைத் தோற்றுவிக்கின்றன. பூநகரி முகாமும், நாகதேவன்துறை கடற்படை முகாமும் தாக்கப்பட்டதும், ஆயுதங்கள் எடுக்கப்பட்டதும் புலிகள் பற்றிய வியப்பை விரிவாக்கியிருக்கின்றன.

புலிகளும் யாழ்ப்பாணம் வல்லைவெளியில் பூநகரி முகாம் போன்ற மாதிரி வடிவம் உருவாக்கி அதை தாக்கிய முறையையும் விளக்கி கண்காட்சிகள் நடத்துகிறார்கள்.

முகாமைத் தாக்கும்போதே அதை வீடியோ படம் எடுத்து இப்போது யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் போட்டுக் காண்பிக்கிறார்கள். புலிகள் அமைப்பின் கெரில்லாத் தந்திரமும், தாக்குதல் திறனும் சிறப்பானவை என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால், புலிகளது இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளின் பரபரப்பான ஆரவாரங்கள் மத்தியில் மிகப்பெரிய பலவீனம் ஒன்று மறைக்கப்பட்டுவருகிறது.

தமிழர்களின் அரசியல் தலைமைத்துவம் அழிந்து போய்க்கொண்டிருக்கும் மாபெரும் பலவீனத்தை எல்லோரும் மறந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை கிழக்கிலும், வவுனியாவிலும் நடத்தப்போவதாக அரசாங்கம் அறிவித்தபோது தமிழ் பேசும் மக்களின் அபிப்பிராயம் என்னவென்பதை ஒரு முகமாய் வெளிப்படுத்தக் கூடிய தலைமைத்துவம் இல்லாமை அப்பட்டமாகத் தெரிந்தது.

ஒரே குரலில் பேசுகின்ற பக்குவம், அனுபவ முதிர்ச்சி என்பவை இன்னமும் உருவாகவில்லை என்பது துயரமான உண்மை.

அதனால் அரசியல் ரீதியில் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் கரங்கள் ஓங்கி வருகின்றன.

தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லை. ஆனால் தேர்தல் நடந்தால் பங்குகொள்வோம் என்பது மாதிரியான போக்கை தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்தமையானது அவற்றின் அரசியல் பலவீனத்தையே வெளிப்படுத்தி உள்ளன.

தமிழ்பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளை ஒருமுகமாய் முன்வைக்க புலிகள் மட்டுமே தடை என்று சொல்வது ஒரு தலைப்பட்சமான வாதம். புலிகள் மட்டுமே தடை என்று சொன்னால் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளால் ஒரு முகமான முடிவுகளை முக்கிய பிரச்சனைகளில் எடுக்க முடியாமல் போயிருப்பது ஏன்?

உள்ளூராட்சி மன்ற தேர்தல் விடயத்தில் கூட தமக்குள் ஒன்றுபட்டு பொதுக்கருத்தை முன்வைத்து, அக்கருத்துக்காக இணைந்து செயற்பட அக்கட்சிகளால் முடியாமல் போனது ஏன்?

தாம் ஆஜராகும் தரப்பை நியாயப்படுத்துகின்ற சட்டத்தரணிகள் போல, தமக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புக்கு ஏற்ப வாதாடுகின்ற பட்டிமன்றத்து பேச்சாளர்கள் போல தமிழ் அரசியல் கட்சிகளது அறிக்கைகள் அமைந்திருந்தன. சரி-பிழைகள் பற்றிய கவலை கிடையாது.

தெளிவான முடிவினை மேற்கொள்ளும் அரசியல் துணிச்சல், அரசியல் பலம் என்பவை வறுமையாகிப் போன நிலையில் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளும் பேச்சுக்களும் முகம் காட்டின.

அரசியல் தலைமை என்பது நிகழ்ச்சிகளின் அல்லது சூழ்நிலைகளின் வாலைப் பிடித்துக்கொண்டு ஓடும் விசயமல்ல.

அந்தந்த கால கட்டத்தில் ஏற்படும் நிகழ்ச்சிப் போக்குகளை கவனித்து, அவை தவறோ சரியோ என்று மதிப்பிட்டு முன்னால் நின்று வழிகாட்டுவதே தலைமைத்துவம். தவறான நிகழ்ச்சிப் போக்குகளை தடுத்து நிறுத்தி மக்களை சரியான வழியில் இட்டுச் செல்வதே அரசியல் தலைமைத்துவம்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் காலத்தில் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் காலத்தில் தமது அரசியல் முடிவுகளை மக்கள் முன்வைத்து அதற்கு ஏற்ப மக்களை தம் பக்கம் கவர்ந்து, தமது கொள்கைக்கு ஏற்ற அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தும் போக்கு நிலவியது.

சரியோ-தவறோ தமது முடிவுகளை தெளிவாக மக்கள் முன்பாக வைக்கும் ஆளுமை அவர்களுக்கு இருந்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில், மாவட்ட சபைத் தேர்தல்களில் கூட்டணியினர் போட்டியிட்டபோது விருப்பமின்றி தேர்தலில் கலந்துகொள்வதாக அவர்கள் சொல்லவில்லை.

"எங்களுக்கு விருப்பமில்லை. என்ன செய்வது? சூழ்நிலை அப்படி. எடுத்துச் சொன்னோம். தேர்தல் வேண்டாம் என்றோம். அரசாங்கம் கேட்கவில்லை. நாம் என்ன செய்ய?" என்ற ரகத்தில் இப்போது பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அமைப்பினர் ஒரு அறிக்கை விட்டிருந்தனர். அதன் தலைவர் திரு.சித்தார்த்தனின் விளக்கம் அது. வவுனியாவில் இருக்கக் கூடிய சூழ்நிலையால் அங்கு தேர்தலில் கலந்துகொள்வதாகவும் கிழக்கில் அவ்வாறான சூழல் இல்லை என்பதால் தேர்தலில் தாம் நிற்கவில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

அரச கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவிலும் மட்டக்களப்பிலும் இருக்கக்கூடிய சூழ்நிலை வேறுபாடுகள் என்னவென்று அவர் விளக்கமாகச் சொல்லவில்லை.

ஈ.பி.டி.பி விடுத்த அறிக்கை ஒன்றில் மட்டக்களப்பில் தாம் ஏன் போட்டியிடவில்லை என்பதற்கு ஒரு விளக்கம் சொல்லப்பட்டது. ஏனைய பகுதிகளில் ஏன் போட்டியிடவில்லை என்பதற்கு விளக்கம் காணப்படவில்லை. புத்திஜீவிகள் சட்டத்தரணிகள் என்பவர்களை தேர்தலில் நிறுத்த விரும்பியதாகவும், சில நபர்கள் கெடுத்துவிட்டதாகவும் கூறியிருந்தனர். ஒரு அரசியல் கட்சியின் செயற்பாட்டையே கெடுக்கக்கூடிய அந்த வல்லமை வாய்ந்த நபர்கள் யார் என்று அவர்கள் கூறவில்லை. ஒற்றுமையைக் கெடுத்தவர்களை இனம் காட்டியிருக்கலாமே. இல்லாவிட்டால் அவர்கள் தேர்தலில் தெரிவாகும் அபாயம் ஏற்படுமல்லவா?

ரெலோவின் முன்னாள் செயலதிபர் திரு.கருணாகரன் அந்த அமைப்பின் சார்பான பாராளுமன்ற உறுப்பினர். அவரது தந்தையார் திரு.கோவிந்தன் மட்டக்களப்பு சுயேட்சைக் குழுவில் முக்கிய வேட்பாளர். அவர் அங்கம் வகிக்கும் சுயேட்சைக் குழுவுக்கே திரு.கருணாகரனும் ஆதரவாக வேலை செய்கிறார்.

முன்னாள் செயலதிபர் மட்டக்களப்பில் சுயேட்சையாக கேட்போருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யும் போது, ரெலோ வவுனியாவில் புளொட்டுடன் தேர்தலில் மோதுகிறது. மட்டக்களப்பில் ஏன் ரெலோ என்ற பெயரில் கலந்துகொள்ள முடியவில்லை? வவுனியாவில் மட்டும் எப்படி கலந்துகொள்ள முடிகிறது? ரெலோ என்ன சொல்லப் போகிறதோ தெரியவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் தேர்தல் நடத்தப்படக்கூடிய சூழல் இல்லை. நடந்தால் கலந்துகொள்வோம் என்றே கூறியிருந்தார். இப்போது தேர்தலில் தோல்வி கண்டால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்வேன் என்று கூறியிருக்கிறார்.

சூழ்நிலை பிழையான தேர்தலில் ஏன் இத்தனை பிடிவாதம் என்று புரியவில்லை. அனுதாபம் தேடவே அவர் அப்படிச் சொல்லியிருப்பதாக அவரது அரசியல் எதிரிகள் பேசிக்கொள்ள இடமளித்திருக்கிறார்.

முஸ்லிம் ஐக்கிய முன்னணி. இவர்கள் முன்பு புலிகளது யாழ் தளபதி கிட்டுவோடு தமிழ்நாட்டில் போய் பேசியவர்கள். புலிகளை நன்றாக நம்பி அதன்மூலமாக தமக்கும் ஒரு திருப்பம் வரும் என்று கருதியவர்கள். பின்னர் எல்லாம் பொய்யாகிவிட்டது. வடக்கு-கிழக்கு பிரிப்பு விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய முன்னணி இரண்டும் தமது கருத்தை தேர்தலில் முன்வைக்க வேண்டும்.

அநேகமாக முன்வைக்கமாட்டார்கள் போலவே தெரிகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தேர்தலில் கலந்துகொள்வதில்லை என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. தேர்தலில் கலந்துகொள்ளவேண்டாம் என்றும் கூறியுள்ளது. அக் கோரிக்கைக்கு பெரிய முக்கியத்துவம் இருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தலானது தமிழ் மக்களினது அரசியல் அபிலாசைகளை பாதிக்கும் என்று சொல்லியுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவ்வாறான தேர்தலில் பங்குகொள்ள வேண்டாம் என்று மக்களுக்கு கூறக்கூடிய அரசியல் பலத்தை கொண்டிருக்கவில்லை.

இதே வேளையில் வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஏனைய தமிழ் அமைப்புக்கள் கலந்துகொள்ள மறுத்தபோது ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் ஆகிய இரு அமைப்புக்கள் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேர்தலில் போட்டியிடவில்லை என்று அறிவித்தபோதும், அக் கட்சியின் பிரமுகர்களுக்கு ஆசை விடவில்லை. தமிழ் அரசியல் கட்சிகளும் தேர்தல் என்றவுடன் அவர்களது நினைவுவர வீடு தேடிப் போய் பட்டியலில் சேருங்கள் என்று ஒரே பிடி.

தமிழ் ஈழமே இறுதித்தீர்வு, அடுத்த தேர்தல் தமிழ் ஈழத்தில் என்று 1977 பொதுத் தேர்தலில் போட்டியிட்ட கூட்டணியினர் அதற்கு பின்னர் வந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாவட்ட சபைத் தேர்தல்களிலும் கலந்துகொண்டனர்.

அப்போது தமிழ் இயக்கங்கள் அத்தேர்தல்களில் போட்டியிட வேண்டாம். அது போராட்டத்தை பலவீனப்படுத்தும் என்று கூறின. கூட்டணியினர் கேட்கவில்லை போட்டியிட்டனர்.

இப்போது தமிழ் அரசியல் கட்சிகள் பல தேர்தலில் போட்டியிடும் போது, "தேர்தல் வேண்டாம் இது பிரச்சனையை திசை திருப்பும்" என்று கூட்டணி அறிக்கைவிட்டுள்ளது.

கிடைப்பதை பெற்றுக்கொண்டும், நிர்வாகங்களை கைப்பற்றிக் கொண்டும் தொடர்ந்து போராடுவது என்கின்ற முன்னைய தமது "அரசியல் சாணக்கியத்தை" கூட்டணியினர் மாற்றிக் கொண்டார்காளா? அல்லது புலிகளது மிரட்டலை மீறி செயற்படாமல் இருக்க சீ.சீ. இந்தப் பழம் புளிக்கும் என்ற கதையோ தெரியவில்லை.

ஆக, மொத்தத்தில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையான தன்மை காணப்படாமை மட்டுமல்ல, ஒவ்வொரு கட்சிகளுக்குள் கூட ஒரு தெளிவான ஒருமுகமான கண்ணோட்டம் நிலவவில்லை.

சூழலுக்கு பணிந்து போகும் அரசியல் பலவீனம் அவர்கள் தாங்களும் குழம்பி ஏனையோரையும் குழம்ப வைத்துள்ளது.

ஒவ்வொரு அமைப்பும் தாமே தமக்குள் தெளிவில்லாத போது சக அமைப்போடு ஒன்றுபட்டு செயற்படுவது இயலாத விசயம்.

இயக்கங்கள் என்ற தன்மையில் இருந்து அரசியல் கட்சிகளாக தாம் மாறிவிட்டதாக தமிழ் அமைப்புக்கள் கருதுகின்றன. ஆனால் அரசியல் தலைமைத்துவத்திற்கு உரிய பண்புகளை தமது அமைப்புகளுக்குள் அவை உருவாக்கவில்லை.

அதனால்தான் வேட்பாளர் பட்டியலுக்கு வெளியே இருந்து ஆட்கள் தேடுவதும், அதனை ஆரோக்கியமான தலைமை என்று கூறக்கூடிய நிலைக்கு சென்றிருப்பதும் நிகழ்ந்துள்ளது.

வேட்பாளர் பட்டியல் தாக்கல் செய்யும் இறுதிக் காலக்கெடுவரை பொது வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் முயற்சியில் சில தமிழ் அமைப்புக்கள் ஈடுபட்டிருந்தன. அவ்வாறு ஈடுபட்டிருந்த போதே தமக்குரிய தனிப்பட்டியலுக்கும் ஆள் தேடும் முயற்சிகளும் நடந்தன.

தமிழ் அமைப்புக்களுக்கு நிறைய கால அவகாசம் இருந்தது. தனித்துப் போட்டியிடுவதா, அல்லது பொது வேட்பாளர் பட்டியலா என்று தீர்மானித்து முடிவு செய்திருக்கலாம்.


ஆனால் இழுத்தடித்து இறுதி நேரத்தில் ஒருவரை ஒருவர் பின்னுக்குத் தள்ளிவிட ஒரு சில அமைப்புக்கள் மேற்கொண்ட முயற்சிகள் "உனக்கும் இல்லை, எனக்கும் இல்லை. எல்லாம் போச்சு" கதையாகிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியால் 38 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட முடிந்திருக்கிறது. தமிழ் அரசியல் கட்சி ஒன்றால் கூட மூன்று சபைகளில் கூட நேரடியாக போட்டியிட முடியாமல் போய்விட்டது.

அப்படியிருக்கும் போது ஐ.தே.கட்சியை வெற்றி பெறவிடக்கூடாது என்றும் அறிக்கைகள் வருகின்றன. அதுதான் வேடிக்கை.

தமிழ் அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட முன்வந்தது தேர்தலுக்கு தமிழ் அமைப்புக்களும் ஆதரவு என்று அரசாங்கம் சொல்லக் கூடிய நிலையை உருவாக்கியது. ஆக, அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியில் அது சாதகம். ஆனால் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தமது பலவீனத்தை வெளிப்படுத்தவும், மேலும் தமக்குள் கசப்புக்களை வளர்க்கவுமே தேர்தல் உதவியிருக்கிறது.

ஆங்காங்கே மோதல்களும் உருவாகக்கூடும். அவ்வாறு நிகழாமல் என்றாலும் பார்த்துக்கொள்ளட்டும். ■



## அதிரடி அய்யாத்துரை

சுவிற்சர்லாந்திலிருந்து எங்கடை ஆட்கள் கொஞ்சப் பேரை போட்டுவாங்கோ எண்டு அனுப்பி வைக்கினம். பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் அனுப்பப்போறதா சொல்லுகினம். இஞ்சை இருந்தா தொல்லை ஓடுங்கோ எண்டு அனுப்பி வைக்கிறதிலை என்ன கௌரவம் வேண்டிக்கிடக்கு. இடையிலை இறங்கி ஓடினாலும் எண்டு பாதுகாப்புக் கொடுக்கினமோ தெரியேல்லை.

ரெண்டு எழுத்துக்காரரின் பிரதியாரை யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தியிலை வைத்து போடப் போகினம் எண்டு சனம் கதைக்குது. கனடாவிலை உள்ள ரெண்டு எழுத்துக்கார ஆதரவு பேப்பர் ஒண்டு பிரதியார் முந்தி ஒருதலைக் காதலில் நஞ்சு குடிச்சவர். அப்பவே போயிருக்க வேண்டியவர் எண்டு செய்தி போடுது. எப்பவோ செத்திருக்க வேண்டியவர் அதாலை இப்ப சாகிறதை நினைச்சு வருத்தப்படவேண்டாம் எண்ட மாதிரி அந்தச் செய்தி இருக்குது. அந்தப் பேப்பர் முந்தி பிரதியாரை என்ன மாதிரிப் புகழ்ந்தது தெரியுமோ? பனையேறி விழுந்தவனை மாடும் மிதிக்கிறது அந்தக் காலம். இப்ப மனுசரும் எல்லோ மிதிக்கினம். காலம் கெட்டுப் போச்சு.

அயல்நாட்டு தலைவரை பின்னாலை இருந்து அடிச்சவர் தெற்கில் தேர்தலிலை நிற்கப் போறாராம். பாத்தியளோ அநியாயத்தை. தகுதிகள் எப்படி எல்லாம் வருகுது எண்டு.

பொங்கலுக்கு எங்கட தொலைக்காட்சியள் நல்ல விருந்து படைச்சவை. கண்ணுக்கு விருந்தான கலரான நட்சத்திர இரவும் போட்டவை. பார்த்துக்கொண்டிருக்கேக்கை எங்கட முரசின்ரை தகவல் பெட்டி நினைவுக்கு வந்தது. அரங்கம் அதிர குண்டர்கள் ஆட்டம். அதுதான் பாருங்கோ எங்கட ராதிகா வந்து உசிலம்பட்டி பெண்குட்டி பாட்டுக்கு பெரிய உடம்போடை ஆடினா பாருங்கோ. ரசிக்க முடிஞ்சுதோ இல்லையோ சிரிக்க முடிஞ்சுது. உசிலம்பட்டி பெண்கள் அப்படித்தான் இருப்பினம் எண்டு யாரும் நினைச்சிருப்பினம்.

இலண்டனில் இருந்து வரும் வானொலிச் சேவை ரெண்டு எழுத்துக்காரரை தட்டிக்கொடுக்கிறது வழக்கம். பிரதியார் விசயத்திலை தலைவர் எடுத்திருக்கிற முடிவைப் பத்தி அந்த வானொலி ஒரு கிழி கிழிச்சுப் போட்டுது. அதுவும் ரெண்டு எழுத்தாருக்கு வேண்டப்பட்டவர் என்று கருதப்படும் அந்த ஆனந்த சோதரி கிழிச்சதுதான் பெரிய ஆச்சரியமாய் போட்டுது.

பாரிசிலை ஈழநாட்டுக்கு குண்டுவீசினது பிரதியார் கோஷ்டியாம். அதென்னவோ தெரியேல்லை ஒன்றுபட்டு இருக்கேக்கை யாழ்ப்பாண ஈழநாட்டுக்கு குண்டுவைச்சினம். இப்ப பிரிஞ்சு நிக்கேக்கையும் பாரிஸ் ஈழநாட்டுக்கு குண்டு வீசியிருக்கினம். அணிகளாய் பிரிஞ்சாலும் அவேன்ர தனிப்பாணி போகாது பாருங்கோ. இயக்க மோதல்கள் இப்ப இயக்கத்துக்கை மோதல்கள். நடுவிலை மாட்டுப் பட்டு முழிக்கிறவைதான் பாவம்.

காரியம் ஆகவேணுமெண்டா இல்லாத பெருமையெல்லாம் சொல்லி முகஸ்துதி செய்யிற வழக்கம் இப்ப மட்டுமில்லை அந்தக்காலத்திலையும் இருந்தது. அதிமதுரகவி முகஸ்துதி செய்து கடைசியாய் அதுக்காக கவலைப்படுறார் பாருங்கோ.

"கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்.
காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்.
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்.
போர் முகத்தை அறியானை புலியேறு என்றேன்.
மல்லாரும் புயம் என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனை நான் வள்ளல் என்றேன்.
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின் றேனே."
■

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பிணங்கள் குவிந்த மெக்சிக்கோ வீதிகள்!

உலக ரவுண்டப்



## "சுதந்திர தனிப் பூமி தா" -விவசாயிகள் யுத்தம்!!

கெரில்லாக்கள் நான்கு நகரங்களை கைப்பற்றி தமது பலத்தை வெளிப்படுத்த மெக்சிக்கோ அரசு நடுக்கம் கண்டது.

1910ம் ஆண்டு மெக்சிக்கோவில் நடந்த புரட்சியை விட பல மடங்கு பெரிய கிளர்ச்சி இப்போது நடந்துள்ளது என்று விமர்சகர்கள் கூறினார்கள்.

விவசாயிகளையும், அவர்களது கெரில்லாக்களையும் அடக்க 12



மெக்சிக்கோ அரசு விவசாயிகளுக்கு உரிமை மறுப்பதாகக் கூறி அங்குள்ள விவசாயிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

"சுதந்திர தனிப் பூமி தா" "விவசாயிகளுக்கு உரிமை வழங்கு" என்ற கோசங்களுடன் கிளர்ச்சியில் குதித்துள்ள விவசாயிகள் ஆயுதம் ஏந்தியுள்ளனர்.

"சபாடிஸ்டா தேசிய விடுதலை இராணுவம்" என்னும் அமைப்பை உருவாக்கி விவசாயிகள் போராட்டம் விரிவாகியிருக்கிறது.

கடந்த புத்தாண்டு தினத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச படைகள் கடும் தாக்குதலை மேற்கொண்டன.

வான் வழியாகவும், தரை வழியாகவும் நடத்தப்பட்ட தாக்குதல்களால் வீதிகள் இரத்தத்தில் நனைந்தன. பிணக்காடுகளாகின.

500 பேர்வரை பலியானதாக கெரில்லாக்கள் கூறுகின்றனர். 150 பேர்தான் என்று அரசு சொல்கிறது.

## வயதானபின்னர் பிரசவமா? பிரிட்டன் எரிச்சல்!

அந்த கோடிஸ்வரப் பெண்ணுக்கு ஒரு ஆசை.

ஒரு குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும். பிரிட்டனைச் சேர்ந்த அந்தப் பெண் அங்குள்ள வைத்தியசாலைகள் பலவற்றுக்கு சென்று செயற்கைக் கருத்தரிப்பு மூலம் பிள்ளை பெறுவதற்கு விருப்பம் தெரிவித்தார்.

அவரது வயது காரணமாக பிரசவ வேதனையை தாங்கிக்கொள்ள முடியாது என்று சொல்லி பிரிட்டிஷ் வைத்தியசாலைகள் அவரை திருப்பி அனுப்பி விட்டன.

அவர் மனம் தளரவில்லை. பையிலே காசு. நெஞ்சிலே ஆசை. நேராக ரோம் நகருக்குச் சென்றார். தனது கணவரின் விந்தும் 20 வயது இத்தாலிப் பெண் ஒருவரின் கரு முட்டையும் இணைந்த சினை முட்டையை தனது வயிற்றில் சுமந்தார்.

பத்துமாதங்களில் குழந்தை பிறந்தது.

அதுவும் இரட்டைக்குழந்தை! கோடிஸ்வரிக்கு இரட்டை மகிழ்ச்சி.

செயற்கை கருத்தரிப்பில் இரட்டைக் குழந்தை பிறந்தது உலக சாதனை என்பதால் கின்னஸ் புத்தகத்திலும் அவரது பெயர் இடம்பெறப் போகிறது.

ஆனால் பிரிட்டனுக்கு எரிச்சலோ எரிச்சல். செயற்கை முறை கருத்தரிப்புக்கு அதிக பட்ச வயதை நிர்ணயிக்க வேண்டும் என்று பிரிட்டன் சுகாதார அமைச்சகம் உறுதியாக இருப்பதோடு, ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் இச்சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் விரும்புகிறது. ஐரோப்பிய நாடுகளிடம் இக்கோரிக்கையை முன்வைக்க பிரிட்டன் தீர்மானித்துள்ளது.

என்றாலும் தனது நாட்டுப் பெண் ஒருவரின் சாதனைக்காகப் பிரிட்டன் பெருமைப்படலாம்.

## போதை தேவையாம் சுடலைக்குள் திருட்டு!

பழகப் பழகப் பாலும் புளிக்கும். போதையும் அப்படித்தான்.

பாவித்துப் பழக்கப்பட்டவர்களுக்கு ஒரே அளவான போதை சலிப்பூட்டும். மேலும் போதையூட்டக்கூடிய ரகம் எதுவென்று தேடத் தொடங்கிவிடுவார்கள்.



ஹெராயின் போதை மருந்து ஒரு உயிர்கொல்லி. என்றாலும் போதை அதிகமுள்ள மருந்து. அது கூடக் காணாது என்று போதைப் பிரியர்கள் அடம்பிடித்தார்கள்.

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் உள்ள ஹெரோயின் விற்பனையாளர்கள் கில்லாடிகள்.

நேரே சுடுகாட்டுக்குப் போய் அங்குள்ள மண்டை ஓடுகளை எடுத்து அதன் துகள்களை ஹெரோயினோடு கலந்தார்கள். அட்டகாசமான போதையாகியது.

விசயம் வெளியே பரவ கெய்ரோவில் 4 பேரை மடக்கிப் பிடித்தது பொலிஸ்.

நாலு தட்டுத்தட்டி விசாரித்ததில் மண்டை ஓடு திருடி அவற்றின் துகள்களை போதை மருந்தோடு கலக்கும் விடயத்தில் கல்லூரி மாணவர்களுக்கும் தொடர்பிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## தாத்தாவுக்கு வயதோ 127 பேரப்பிள்ளைகள் தொகையோ 171

அவர் ஒரு ராசியான தாத்தா. 127வரை வாழ்ந்து சமீபத்தில் மரணமானார்.

ஈரானைச் சேர்ந்த விவசாயியான முகமது எஸ்லாமிகா என்னும் தாத்தா பற்றி ஈரான் அரசின் அதிகார பூர்வ செய்தி நிறுவனமான ஐ.ஆர்.என்.ஏ. பின்வருமாறு கூறுகிறது.

"அவர் தன்னுடைய 112 வயதுவரை விவசாய நிலங்களில் வேலை செய்து வந்தார்.

அவரது 120வது வயதில் மனைவியை இழந்தார். அவருக்கு 7 குழந்தைகளும் 171 பேரக்குழந்தைகளும் உள்ளனர்.

உலகில் அதிகநாள் வாழ்ந்தவர் என்று இதுவரை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருந்தவர் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஷிகேச்சியா இஸுமி என்பவர். அவர் 120 ஆண்டுகள் 237 நாட்கள் வாழ்ந்தவர். அவரது சாதனையை முகமது எஸ்லாமிகா உடைத்தெறிந்துவிட்டார்.

தனது வாழ்நாளில் சிகரெட் புகைக்காத, டாட்டரைப் பார்க்காத ஈரான் விவசாயி முகமது எஸ்லாமிகா"

கொடுத்து வைத்த தாத்தா!

## "200 ஆண்டுகள் உள்ளே இரு"

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரைச் சேர்ந்த பைரசிக்கு வயது 19.

1992 மார்ச் மாதம் பைரசி ஒரு காரியம் செய்தான்.

70 வயதான தனது தாத்தாவையும், பாட்டியையும் கொன்றுவிட்டான்.

பிடித்து சிறையில் போட பிணையில் வெளியே வந்தான்.

வந்தவுடன் இன்னும் சில கொலைகள் செய்தான்.

தனது மாமா, அத்தை, மாமாவின் மகள், மாமாவின் பெண் தோழி உட்பட ஆறுபேரை சதக், சதக் படுகொலைகள்.

மொத்தமாக 8 கொலைகள்!

மீண்டும் சிறை. பின்னர் விசாரணை. தற்போது கொலைவெறியன் பைரசிக்கு நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு கொலைக்கும் தனித் தனியாக வழங்கப்பட்ட தண்டனைக்காலம் மொத்தமாக 200 ஆண்டுகள்.

## 93ல் பலியான நிருபர்கள் 75

1993ம் ஆண்டில் பத்திரிகையாளர்கள் 75 பேர் பலியானதாக சர்வதேச பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதில் 13 பேர் பொஸ்னியா-ஹெர்சகோவினா போரின்போது உயிரிழந்தனர்.

மேலும் 17 நிருபர்கள் பலியானது பற்றியும் சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பு விசாரித்து வருகிறது.

சில நிருபர்கள் விபத்துக்களிலும், வேறுசிலர் வன்முறைச் சம்பவங்களிலும், திட்டமிட்டு கொல்லப்பட்டும் பலியானதாக அவ்வமைப்பு கூறியுள்ளது.

பொஸ்னியாவில் 20 நிருபர்கள் கதி பற்றி இன்னும் தெரியவில்லை.

இதுவரை இல்லாத அளவுக்கு 93ம் ஆண்டுதான் பத்திரிகையாளர்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்த ஆண்டாகும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

பார் முழுவதும் வெள்ளப்பெருக்கு ஒரு மாதிரிதான். பிரான்ஸ் நாட்டின் வடபகுதியில் பெய்த மழையில் பெருகிய வெள்ளத்தில் தனது கார் மூழ்கியதை சோகத்துடன் பார்க்கிறார் இவர். கார்கால மழை வெள்ளம் பெருக்க கார் அதில் சிக்கியதோ? இப்போது கார்கால மேகமாய் உரிமையாளரின் முகம் சோகத்தில் இருட்டாய்! →



# புதிய தலைமைத்துவத்தை ஏற்படுத்துவது! இந்திய உதவியோடு பிரதேச சுயாட்சி பெறுவது!!

## மாத்தையாவின் திட்டமாம்-குற்றச்சாட்டுகள்

புலிகள் அமைப்பின் உள்பிரச்சனைகள் பற்றிய கனடிய செந்தாமரை மஞ்சரியின் தகவல்களே இவை. இதில் முரசின் கருத்துக்கள் கிடையாது. சில பகுதிகள் மட்டும் சுருக்கப்பட்டுள்ளன.

சிவானந்தராஜா என்றவரும் புலிகளால் கைது செய்யப்பட்டார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவர் முல்லைத்தீவில் பணியாற்றியவர். மாத்தையாவுக்கு நெருக்கமானவர். முல்லைத்தீவு கிழக்கு பிரஜைகள் குழுவிலும் செயல்பட்டவர். பின்பு மாத்தையாவின் பக்கபலத்துடன் யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கக் குழு கலைக்கப்பட்டபோது பதவி இழந்தவர். இவருக்கெதிராக சில ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்த போது புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டார். இந்த விசாரணைகளின் போது திரு. சிவானந்தராஜா தனது செல்வாக்கினைப் பாவித்து செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இந்தியா தூதரகத்துடன் சில தொடர்புகளை பேணி வந்தார் என்று துப்புத் துலங்கியது.

இந்தப் புதுத் தகவல்களுடன் எஞ்சினியர் மீதான கண்காணிப்பும் சூடுபிடித்தது. எஞ்சினியர் கைது செய்யப்பட்டார் அவர் கொடுத்த தகவல்களையடுத்து புதிய திருப்பம் ஏற்பட்டது. பிரபாகரனையும் முக்கிய தலைவர்களையும் கொல்வதற்கான முக்கிய சதி அம்பலமாகியது. மாத்தையாவும் அதற்கு உடந்தை என்று சந்தேகிக்கப் பட்டது. மாத்தையாவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டது. இது மாத்தையாவிடம் கையளிக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

### தொடர் விசாரணைகள்

மாத்தையா மற்றும் ஏனையோரின் கைதுகளின் பின்னர் விசாரணைகள் தொடர்ந்தன. சுமார் 500 பேர் வரை கைது செய்யப்படாமல் விசாரணைக்குட்படுத்தப் பட்டனர். இவர்களில் மூர்த்தி, கரிகாலன் யோகி போன்ற முன்னாள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் அடங்குவர். ஒரு நடைமுறை நிர்ப்பந்தம் போல இவர்கள் விசாரணை செய்யப்பட்டனர். பொது மக்கள் பலரும் விசாரணை செய்யப்பட்டனர். மாத்தையாவுடன் கூட கைது செய்யப்பட்டவர்களில் 30 பேர் தண்டனை பெற்றுள்ளனர். இவர்களில் ஒருவர் மணியம் என்ற வியாபாரி. இவர் பல தடவைகள் வவுனியா வந்து பொருட்கள் கொள்முதல் செய்பவர். இன்னொருவர் செஞ்சிலுவை சங்கத்துக்காக காங்கேசன்துறைக்கு வாகனமோட்டிச் செல்பவர். இவர் பெயர் தெரியவில்லை. விசாரணைகள் தொடர்ந்தும் நடக்கின்றன. ஆனால் இதேவேளை விடுதலைப்புலி மற்றும் கடற்புலி பணிமனைகளில் பிரபாகரனும் மாத்தையாவும் சேர்ந்திருந்த புகைப்படங்கள் கழற்றப்பட்டு பிரபாகரன் தனியே நிற்கும் படங்கள் தொங்கவிடப்படுகின்றன.



### குற்றப்பத்திரிகை

மாத்தையா மீதான குற்றப்பத்திரிகை ஒரே ஒரு தடவை படித்துக் காட்டப்பட்டதே ஒழிய பிரதிகளாக வழங்கப்படவில்லை. எனவே கேள்விச் செவியர்களின் நாளும் பொழுதும் நலிவடையும் ஞாபகச் சக்தியை ஆதாரமாகக் கொண்டே இதனை எழுத வேண்டியுள்ளது. எனவே இது முழுமையானதல்ல. இதன் சாராம்சத்தில் கூடச் சில சில சிறு தவறுகள் இருக்கலாம்.

இந்திய உளவுப்படையின் சதிக்கு உடந்தையாகிப் போனதே பிரதான குற்றச்சாட்டு. இந்தியா இலங்கைச் சதியாளர்களுக்குத் துணை போகும் விதத்தில் இந்தியா இலங்கைப் படையினரின் அனுசரணையுடன் நேரடியாக அவர்களது மறைமுக சக்திகளூடாக அல்லது இந்திய இலங்கைப் படையினருக்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்து விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனையும்வேறு 11 முக்கிய புலிப் பிரமுகர்களையும் கொன்றொழிக்க முற்பட்டார் என மாத்தையா குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இந்தப் பதினொரு பேர்களில் 10 பேர்கள் மாத்திரமே கிடைத்துள்ளனர். ஒருவர் கிடைக்கவில்லை. கொல்குறி வைக்கப்பட்டதாகச் சொல்லப் படுபவர்கள் அன்ரன் பாலசிங்கம். பொட்டம்மான், பால்ராஜ், இளங்குமாரன் (பேபி சுப்பிரமணியம்) சூசை, சொர்ணம், புதுவை இரத்தினதுரை, தமிழ் செல்வன்(தினேஷ்) கருணா, நடேசன் ஆகியோர்.

பிரபாகரனையும் மேற்குறித்த தலைமைத்துவத்தையும் ஒழித்து விட்டுப் புதிய தலைமைத்துவம் ஒன்றை இயக்கத்துக்கு ஏற்படுத்துவதும், அதன் பின்னர் இந்தியா-இலங்கை கூட்டுறவுடன் பிரதேச சுயாட்சி கொண்ட அரசியல் அமைப்பொன்றை வட கிழக்கிற்கு ஏற்படுத்தி தமிழ் ஈழ போராட்டத்தைக் கைவிடுவது என்பதே மாத்தையாவின் குறிக்கோள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர பொட்டம்மான் என்று நினைத்து உளவுப் பிரிவின் துணைத்தலைவர் பொற்கோ சென்ற வாகனத்துக்கு குண்டு எறிந்த சதி முன்னாள் தளபதி. கிட்டுவுக்கு குண்டெறிந்த சதி, கிட்டு யாழ்ப்பாணம் திரும்புவது குறித்து இந்தியாவுக்குத் துப்புக்கொடுத்தது. போட்டி அமைப்பை உருவாக்க முயன்றது போன்ற குற்றச் சாட்டுக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

(மிகுதி அடுத்த முரசில்)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது - இராஜதந்திரி

# 'மயான காண்டம்!'

# 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போன்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்

இலங்கை அரசியலின் தராதரம் மிகவும் தரங்குன்றிய நிலையில் இருப்பதனையே இரத்தினபுரி சூரியகந்தப் பிரதேச புதைகுழி விவகாரம் புலப்படுத்துவதாக இருக்கின்றது.

இரத்தினக்கற்களின் மகிமையால் பெயர் பெற்ற பிரதேசமே இரத்தினபுரி. இங்கு கிடைக்கும் அரிய இரத்தினக்கற்கள் சர்வதேச கீர்த்தி பெற்றவையாகவும், இலங்கைக்கு பெருமளவு வருவாயை ஈட்டித் தருவனவாகவும் விளங்குகின்றன.

அழகிய இரத்தினக் கற்களைத் தோண்டி எடுப்பதனால் கீர்த்தி பெற்றிருந்த இரத்தினபுரிப் பிரதேசத்தை அண்டிய சூரியகந்த என்ற இடத்தில் மனித மண்டை ஓடுகளும், எலும்புக்கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்த மனித மண்டை ஓடுகள், எலும்புக்கூடுகள் என்பன சூரியகந்தப் பகுதியில் பாரிய புதைகுழியொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை, சில உண்மைகளை எக்காலத்திலும் குழி தோண்டிப் புதைத்துவிடமுடியாது என்பதனையே உணர்த்துவனவாக இருக்கின்றது.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுன இயக்கத்தினரின் நடவடிக்கைகள் மும்முரமடைந்திருந்தன. அப்போது தனிநபர் கொலைகள் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளையும் ஆக்கிரமித்திருந்தன.

உரிமை கோரப்பட்ட நிலையிலும், உரிமை கோரப்படாத நிலையிலும் வீதியோரங்கள், கடற்கரையோரங்கள் மற்றும் ஒதுக்குப்புறமான பிரதேசங்களில் மனித சடலங்கள் கோரமான முறையில் கொலையுண்டிருக்கக் காணப்பட்டன.

பல இடங்களில் வீதியோரங்களில் வாகன டயர்கள் பெருங்குவியல்களாக தீயிடப்பட்டிருக்கக் காணப்படும். ஆனால் அவற்றின் அருகே சென்று நோக்கும்போது கொளுந்து விட்டெரியும் இரப்பர் டயர்களின் இடையே மனித சடலங்கள் வேகிக் கருகிக் கொண்டிருக்கக் காணப்படும்.

இரத்தத்தையே உறைய வைக்கும் இத்தகைய காட்சிகள் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் இடம் பெற்றிருந்தன.

ஜே.வி.பி. கிளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாக பல ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் சிலர் நீதிமன்ற விசாரணைகளுக்குட்படுத்தப் பட்டனர். வேறு சிலர் புனர்வாழ்வு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் பற்றி இன்றுவரை எதுவும் தெரியாததாகவே இருந்து வருகின்றது.

இந்நிலையில் இரு வாரங்களுக்கு முன்னர் இரத்தினபுரியை அண்டிய எம்பிலிப்பிட்டிய சூரியகந்தப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளும், மண்டை ஓடுகளும்

ஜே.வி.பி. நடவடிக்கை நாட்களில் காணாமல் போனவர்களுடையதாக இருக்கும் என்ற ஊகத்தையே வலுவடையச் செய்வதாக இருக்கின்றது.

சாதாரண இளைஞர்கள் மட்டுமல்ல, பள்ளி செல்லும் மாணவர்கள் பலரும் ஜே.வி.பி நாட்களில் காணாமல் போனவர்களின் பட்டியலில் அடங்கியிருந்தனர்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் தம்மால் இயன்றமட்டும் தமக்குரியவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதில் முயற்சித்து, இறுதியில் தமது பிரயத்தனங்களை முற்றாகக் கைவிட்டிருந்த நிலையிலேயே 'சூரியகந்த' புதைகுழி விவகாரம் தென்னிலங்கையில் பரபரப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது.

இப்புதிய ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாகவே இருக்குமென்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க அறிவித்திருந்தார்.

இந்த ஆண்டின் இறுதியில் இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், அதனையடுத்து வரவுள்ள பொதுத் தேர்தல் என்பவற்றுக்குக் 'கட்டியம்' கூறுவது போலவே கிழக்கு மாகாணம் மற்றும், வவுனியாப் பிரதேசத்துக்கான உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியாப் பகுதியில் தேசியக் கட்சிகளுடன், தமிழ்க் கட்சிகள் சிலவும் தேர்தல் நடவடிக்கைகளில் குதித்துள்ளன.

ஆனால் தென்னிலங்கையில் ஆரம்பமாகியுள்ள புதைகுழி தோண்டும் படலம், அரசியல் வட்டாரங்களில் ஒரு 'மயான காண்ட'த்தையே உருவாக்கிவிட்டுள்ளது.

சூரியகந்த புதைகுழியை மேல் மாகாண சபை முதலமைச்சரும், எதிர்க்கட்சிப் பிரமுகருமான திருமதி. சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

இதனையடுத்து கடந்த வாரங்களில் தலைநகரின் சுற்றுப்புறங்களில் மனித மண்டை ஓடுகளும், எலும்புக்கூடுகளும் ஆங்காங்கே தென்பட ஆரம்பித்திருந்தன.

எனவே இந்த புதைகுழி தோண்டும் படலம் ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்தி விட்டிருந்ததுடன் ஆளுங்கட்சியினரும், எதிரணியினரும் இந்த மனித மண்டை ஓடுகள், எலும்புக்கூடுகள் தொடர்பாக பரஸ்பரம் ஒருவரை ஒருவர் கடுமையாகச் சாடும் நிலைமையையும் உருவாக்கிவிட்டிருந்தது.

எது எப்படியிருந்தபோதிலும் சூரியகந்த புதைகுழி விவகாரம் கண்மூடித்தனமான படுகொலைகள் இடம்பெற்றுள்ளதையே விளக்குகின்றது.

மயானங்களில் புதைகுழிகள் இருப்பதும் அவற்றினுள் மண்டை ஓடுகள், எலும்புக்கூடுகள் காணப்படுவதும் சகஜம். ஆனால் சூரியகந்தையில் ஒரு பாரிய குழிக்குள் பல சடலங்களின் எலும்புகளும் அவற்றின் சிதைந்து போன பாகங்களும் இருக்கக் காணப்பட்டுள்ளமை, பரகசியமான முறையில் ஒரு மாபெரும் மனித வேட்டை



மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகளுடன் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய புதைகுழி காணப்பட்ட 'சூரியகந்த' பிரதேசம்.

இடம்பெற்றுள்ளதையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

தென்னிலங்கையில் ஜேவிபி நடவடிக்கை நாட்களில் படுகொலைச் சம்பவங்கள் தென்னிலங்கையின் நாட்டுப் புறங்களில் மட்டும் இடம்பெற்றிருக்கவில்லை.



மேல்மாகாண முதலமைச்சர் திருமதி. சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா சூரியகந்த புதைகுழியைப் பார்வையிடுகிறார்.

கொழும்பிலும் பல அரசியல் பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள், பாதுகாப்புத்துறையைச் சேர்ந்தவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோர் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

கொழும்பில் கொலை செய்யப்பட்டவர்களில் பிரபல பத்திரிகையாளரான திரு.ரிச்சாட் டி.சொய்சா, இன்றைய மேல்மாகாண முதலமைச்சர் திருமதி. சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்காவின் கணவரான திரு.விஜயகுமாரணதுங்க ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

பத்திரிகையாளர் ரிச்சாட் டி.சொய்சா ஜீப் வண்டி ஒன்றில் வந்தவர்களால் வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் கடற்கரைப்பகுதியொன்றில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கக் காணப்பட்டார்.

திரு.விஜயகுமாரணதுங்க சிங்களத் திரைப்படத்துறையில் ஒரு பிரபல நட்சத்திரமாகப் பிரகாசித்தவர். பின்னர் அரசியலிலும் ஒரு பிரபலமான இடத்தைப் பெற்று வந்த தறுவாயிலேயே அவர் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இறுதியாக ஜே.வி.பி. இயக்கத்தின் தலைவரான றோகன விஜேவீராவும், அவரது முக்கிய சகாக்களும் அரச படையினரால் கைது செய்யப்பட்டதை யடுத்து, அவர்களின் கதியும் மரணத்திலேயே முடிவடைந்திருந்தது.

இதனையடுத்து ஜே.வி.பி. நடவடிக்கைகளும் தென்னிலங்கையில் அஸ்தமனத்துக்கு வந்திருந்தன.

சூரியகந்தயில் பாரிய புதைகுழி யொன்றினுள் மனித எலும்புக்கூடுகள், மண்டைஓடுகள் காணப்பட்டது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையையடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக அதன் செயலாளர் அ.தங்கத்துரை, ஐ.நா.மனித உரிமைகள் குழுவுக்கு அறிக்கை ஒன்றையும் அனுப்பியிருந்ததாகச் செய்திகள் தெரிவித்திருந்தன.

அத்துடன் அந்த அறிக்கையில் அவர், தென்னிலங்கையில் மட்டுமல்ல வடக்கு-கிழக்கிலும் காணாமல் போயுள்ளவர்கள் பற்றி ஐ.நா. ஸ்தாபனம் கரிசனைகாட்டி, தகுந்த விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்திருந்ததாக செய்திகள் மேலும் தெரிவித்திருந்தன.

தென்னிலங்கையில் ஜே.வி.பி. நடவடிக்கைக் காலங்களில் பலர் கொலை செய்யப்பட்டதும் மேலும் பலர் காணாமல் போனதும் நாட்டில் நன்கறியப்பட்ட விடயங்களே.

ஆனால் வடக்கு-கிழக்குப் பகுதியில் இடம்பெறும் தனிநபர் கொலைகள், ஆட்கடத்தல்கள் என்பனவும் தென்னிலங்கையில் இடம்பெற்ற அட்டூழியங்களுக்கு எவ்வகையிலும் சளைத்திராதவையாகவே காணப்பட்டன.

1986ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வடக்கு-கிழக்குப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும், ரெலோ இயக்கத்தினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல்கள் படுமோசமானவையாக இருக்கக் காணப்பட்டன.

இரு சாராரும் ஒருவரையொருவர் மூர்க்கத்தனமாகத் தாக்கியிருந்தனர். அத்துடன் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இம்மோதலில் இறந்தவர்களின் சடலங்கள் வீதியோரங்கள், மற்றும் வெட்ட வெளிகளில் போடப்பட்டுத் தீயிடப்பட்டிருந்தன.

நூற்றுக்கும் அதிகமானவர்கள் இந்த மோதல்களின் போது கொல்லப் பட்டிருந்தனர்.

இதுதவிர, யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவன் விஜிதரன், மர்மமான முறையில் காணாமல் போயிருந்தார்.

தொடர்ந்து வடக்கு-கிழக்கு பிரதேச அகதிகளின்புனர்வாழ்வு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த திரு. கந்தசாமி என்பவரும் வடக்கே காணாமல் போயிருந்தார்.

இந்திய அமைதிப்படையினர் வடக்கு-கிழக்குப் பகுதியை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில் யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான திருமதி. ரஜனி திரணகம படுமோசமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவைதவிர வடக்கு-கிழக்கில் இயங்கிவந்த பல்வேறு தமிழ்த் தீவிரவாத அமைப்புகளுக்கிடையே உட்பூசல்கள் காரணமாகவும் பல்வேறு அட்டூழியங்கள் இடம்பெற்றிருந்தன.

1989ம் ஆண்டில் இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்தும் வாபஸ் பெறுவதற்கு தயாரான வேளை 'தமிழ்த் தேசிய இராணுவம்' என்ற தொண்டர் பாதுகாப்புப் படைப்பிரிவொன்று, இந்தியப்படையினரின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்புதிய பிரிவில் இருந்த உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கண்மூடித்தனமான முறையில் வேட்டையாடப்பட்டிருந்தனர்.

தமிழ்த் தேசிய இராணுவத்தில் அங்கம் பெற்றிருந்தவர்கள் தமிழ் பேசுவோராக இருந்த போதிலும், இந்தியப் படையினருக்கு அனுசரணையாக இருந்தவர்கள் என்ற காரணத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளினால் படுமோசமான முறையில் அவர்கள் வேட்டையாடப்பட்டிருந்தனர்.

இந்த மனித வேட்டை இடம்பெற்ற காலங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசம் ஒரு பிணக்காடாகவே காட்சியளித்திருந்தது.

எனவே கடந்த பத்துவருட காலத்தில் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலுமே கொலைகள், ஆட்கடத்தல்கள், சித்திர வதைகள் இடம்பெற்றிருக்கக் காணப்பட்டன.

தென்னிலங்கையில் சூரியகந்த விவகாரத்தை மேலும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து அதனைப் பின்னர் தமது தேர்தல் பிரசாரத்துக்கு ஏற்ற வகையில் வடிவமைப்பது எதிரணியினரின் திட்டமாகக் காணப்படுகின்றது.

எனவே எதிரணியினரின் எதிர்கால தேர்தல் பிரசாரத்துக்கான அத்திவாரம் புதைகுழியைக் கிண்டிப் போடப்பட்ட தாகவே விளங்குகின்றது.

இதே வேளை வவுனியாவிலும், கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமடைந்துள்ளன.

சில தமிழ் அரசியல் கட்சிகள், மற்றும் தேசியக் கட்சிகள் ஆகியன இந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் குதிப்பதற் கான முயற்சிகளில் இறங்கியுள்ளன.

அத்துடன் வேறு சில தமிழ் அரசியல் கட்சிகள் தேர்தல்களை நடத்துவதற்கான தகுந்த சூழ்நிலை வடக்கு-கிழக்கில் இன்னும் பூரணமாகத் தோன்றிவிடவில்லை என்று கூறி இந்த உள்ளூராட்சித் தேர்தல்களி லிருந்தும் விலகியிருக்க முடிவு செய்துள்ளன.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை குறிப்பாக வடக்கே வவுனியாவுக்கப்பால் புலிகளின் ஆதிக்கமே வலுப்பெற்றிருக்கின்றது.

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய பிரதேசங்களில் புலிகளின் நடமாட்டம் பெருமளவு கட்டுப்படுத்தப் பட்டுள்ள போதிலும், சுமுகமான சிவில் நிர்வாகத்தை முன்னெடுப்பதில் இன்னமும் சிக்கல்கள் நிறைந்திருக்கவே காணப்படுகின்றன.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களைப் பொறுத்தவரை தீர்க்கப் படவேண்டிய பிரச்சனைகள் மிகவும் சிக்கலானவை யாகவே உள்ளன.

அங்கு ஒரு தகுந்த சிவில் நிர்வாகத்தைக் கட்டியெழுப்ப முடியாதிருக்கும் இத்தருணத்தில் தேர்தல்கள் மூலமாக ஆட்சியாளர்களும், எதிர்கட்சிகளும் வடக்கு-கிழக்கில் ஒரு பலப்பரீட்சையை நடத்த முயல்வது எந்த வகையில் ஏற்புடையதாகும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஏற்கனவே வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மாகாண சபை உறுப்பினர் களாகவும் தெரிவு செய்யப்பட்டோர் இன்று அப்பிரதேசத்தில் துணிகரமாக நடமாட முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக கடந்த பொதுத் தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று தலைநகரே தஞ்சம் என்று இருக்கும் நிலை காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்குப் பக்கம் தலைவைத்துப் படுப்பதே இவர்களுக்கு ஒரு பெரும் 'சிம்மசொப்பன'மாக இருக்கின்றது.

இந்நிலையில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள், மற்றும் அத்தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்படவிருக்கும் உறுப்பினர்களின் பாதுகாப்பு என்பன கேள்விக் குரியனவாகவே இருக்கின்றன.

சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நிலைமை சீரடைவதும், அங்கு தேர்தல்கள் இடம்பெறுவதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சியதிகாரங்களை கைப்பற்றுவதும் வரவேற்கப்படவேண்டியவையே.

ஆனால் இன்று வடக்கு-கிழக்குப் பகுதியில் ஓர் உறுதியான ,நிரந்தரமான தீர்வு ஏற்படுத்தப்பட்டபின்னர் தேர்தல்கள் நடத்தப்படுவதே இன்றியமையாததாக இருக்கின்றது.

ஏனெனில் வடக்கு-கிழக்கில் புலிகளின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில், 'மழை ஓய்ந்த போதிலும், தூவானம் நின்றுவிடாத நிலை'யே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் அமைதியும், பாதுகாப்பும் நிறைந்த சூழ்நிலை தமது பிரதேசங்களில் ஏற்பட வேண்டுமென்றே பிரார்த்தித்துவருகின்றனர்.

எனவே ஆட்சியதிகாரங்களைக் கொண்டுள்ளவர்கள் அத்தகைய அமைதி, மற்றும் பாதுகாப்பான சூழ்நிலைகளை ஏற்படுத்தக்கூடிய அரசியல் நடவடிக்கைகளுக்கே முதன்மையளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினாலோ, அல்லது பாராளுமன்றத்தினாலோ, மற்றும் ராஜதந்திர செயல்பாடுகள் மூலமாகவோ இதுவரை எதுவித நேர்த்தியான தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

இராணுவ ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைகளும் தகுந்த வெற்றியளிப்பனவாகக் காணப்படவில்லை.

இந்நிலையில் ஆட்சியாளர்கள் வவுனியாவிலும், கிழக்கிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முன்வந்துள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தலாம், உள்ளூராட்சி சபை நிர்வாகங்களையும் வடக்கு-கிழக்கில் அரசு ஏற்படுத்தலாம்.

ஆனால் வடக்கு-கிழக்கு பிரச்னை ஒரு விரிவான அரசியல் தீர்வை நாடியதாகவே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற மக்கள் தமது பகுதிகளில் ஓர் உறுதியான அரசியல் தீர்வு ஏற்படும்பட்சத்தில், தமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பிரதிநிதிகளை தேர்தல்கள் மூலம் தெரிவு செய்வதில் ஆர்வங்கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

எனவே வடக்கு-கிழக்கு மக்கள் ஒரு பரந்துபட்ட உறுதியான அரசியல் தீர்வுடன் வரும் தேர்தல்களையே எதிர்பார்த்து நிற்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

அத்தகைய மக்களுக்கு அரசு தற்போது கிழக்கிலும், வவுனியாவிலும் நடத்த முயலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள், "யானைப்பசிக்கு சோளப் பொரி" போன்ற பயனையே வழங்குவதாக இருக்கின்றது.

# உருவ அமைப்புக்கு உகந்த உடை! அழகுக்கு மேலும் அழகூட்டும்!!

**வெளிநாட்டு ஸ்பெசல்**

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக பில்கிளின்ரன் பதவியேற்ற வேளையில் திருமதி ஹிலாரி கிளின்ரன் அணிந்திருந்த ஆடைகள் பலருடைய கவனத்தையும் ஈர்த்தது. ஹிலாரியின் உடல் அமைப்புக்கு ஏற்ற மாதிரி மிகவும் நேர்த்தியாக அந்த உடை தயாரிக்கப்பட்டது.



மடோனாவுக்காக வடிவமைக்கப்பட்ட உடை

இந்த உடையினைத் திட்ட மிட்டுத் தயாரித்த ஆடை வடிவமைப்பு நிபுணர் ஆண்ட்றே வான் பியர் இன்று உலகின் மிகவும் போற்றப்படும் ஆடை அமைப்பாளராகத் திகழ்கிறார். ஏற்கனவே பிரபல நடிகை மடோனாவின் மார்பக அமைப்பினை வடிவமைத்துக் கொடுத்த பெருமையும் அவருக்குண்டு. தொடர்ந்து ஹிலாரியின் ஆடை வடிவமைப் பினால் அவருடைய புகழ் உச்ச நிலையினை எட்டியிருக்கிறது. உலகனைத்திலுமுள்ள பிரபல நடிகைகளும் சீமாட்டிகளும் ஆண்ட்றேயைத் தேடி அலைகின்றனர். அவரோ தொல்லை பொறுக்காமல் ஓடி ஒளிய வேண்டிய நிலையிலுள்ளார்.

ஹிலாரியின் அன்றைய ஒருநாள் அணிவதற்கான அந்த உடையின் பெறுமதி 25,000 அமெரிக்க டொலராகும். இன்றைய நாணய மாற்றுப்படி ஒரு அமெரிக்க டொலரின் இலங்கை மதிப்பினை அறிய இத்தொகையினை 49ஆல் பெருக்கி நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். (ஒரு டொலர் சுமார் ரூ 49.00க்கு மேல்)

கடந்த 30 ஆண்டுகாலங்களில் அமெரிக்காவின் முதல் பெண்மணியாக விளங்கியவர்களுள் ஹிலாரியே வயதில் குறைந்தவர். ஜாக்குலின் கென்னடிக்கு அடுத்து மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகமாகப் பெற்றுவரும் முதற் பெண்மணி என்ற பெயரைப் பெற்று வருகிறார்.

"எந்தவகையான உருவமைப்பையும் வடித் தெடுக்கக் கூடிய களிமண்ணைப் போன்றவர் ஹிலாரி. மெழுகுச் சிலைபோல் கச்சிதமான உடல்வாகு கொண்டவர். அவருக்கு எந்தவிதமான ஆடை அமைப்பும் சிறப்பாகப் பொருந்தும். எனினும் அவருடைய வாழ்வின் மிக முக்கியமான நாளான ஜனவரி 20ஆம் திகதியன்று அணிவதற்காக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட உடை அவருக்கு மிக மிகப் பொருத்தமாக அமைந்தது. இதனை ஹிலாரி மிகவும் விரும்பினார். ஜனாதிபதி கிளின்ரனும் இந்த ஆடையினை வெகுவாக இரசித்துப் பாராட்டினார்" என்று ஆண்ட்றே பெருமிதத்துடன் கூறுகிறார்.

ஹிலாரிக்கு ஏற்கனவே பல உடைகளை ஆண்ட்றே வடிவமைத்துக் கொடுத்துள்ளார். ஜொவான் கொல்லின்ஸ், ராக்குவெல் வெல்ச், லிஸா மினெல்லி போன்ற பிரபலங்களுக்கும் அவர் ஆடை வடிவமைப் புகளைச் செய்துகொடுத்திருக்கிறார்.

"சிவப்பும் நீலமும் ஹிலாரிக்கு ஏற்ற வர்ணங்கள். பதவி ஏற்கும் நாள் ஹிலாரி மிகவும் பரபரப்பாகவே இருப்பார். ஆகவே சிவப்பில் ஆடை உடுத்தினால் அவருடைய பதட்ட நிலையினை அவ்வர்ணம் பளிச்சிட்டுப் பறைசாற்றிவிடும் என்பதனால் இளஞ்சிவப்பு வர்ணத்தை கீழ் பாவாடைக்கு தேர்ந்தெடுத்தேன். அதற்கு ஏற்றாற்போல் பூப்பின்னல் அமைந்த முழுநீளக்கை வைத்த மேல் சட்டையினை அமைத்தேன். மெல்லிய இடைக்கு அகலமான பட்டியினையும் அமைத்தேன். மேல்சட்டையினை கழுத்து முழுவதையும் மூடும்படியும் வடிவ மைத்துக் கொடுத்தேன்."

இவ்வாறு ஹிலாரியின் ஆடை பற்றிய சிறப்பு அம்சங்களை ஆண்ட்றே விபரித்தார்." ஹிலாரி 'மினி' உடைகளை அணிவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறேன். அவருடைய காலின் மேல் பாகம் சற்றுத் தடிப்பமாக உள்ளமையினால் முழங்காலுக்கு ஒரு அங்குலத்துக்கு மேல் அவருடைய உடைகள் உயரக் கூடாது" என்றும் ஹிலாரியிடம் கூறியிருக்கிறாராம்.

ஹிலாரியின் உடை வடிவமைப் புக்கான அழைப்புக்கிடைத்த பின்னர் ஆண்ட்றே ஹிலாரி சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான புகைப்படங்களைப் பரிசீலனை செய்துள்ளார். ஹிலாரி பற்றி வெளியான செய்தித்தாள் கத்தரிப்புக்களைப் படித்திருக்கிறார். பல வீடியோ படங்களையும் பார்த்துள்ளார்.

அன்றைய உடைக்கேற்ற மாதிரி தலை அலங்காரம் செய்வதற்கு உலகப் பிரசித்தி பெற்ற நியூயோர்க்கின் லாகூப்பே சலூண் நிபுணர்கள் ஏற்பாடு செய்யப்பட்டனர்.

"மடோனாவுக்கு உடைகளை வடிவமைக்க நான் எத்தகைய நாட்டம் கொண்டுள்ளேனோ அதே அளவு ஆர்வம் ஹிலாரிக்கான உடைகளை வடிவமைப்பதில் எனக்குண்டு" என்கிறார் ஆண்ட்றே வான்பியர்.



உகந்த ஆடையோடு ஹிலாரி கிளின்ரன்

## எண்சாண் உடம்புக்கு பாதமும் முக்கியம்! பாதங்களைப் பராமரியுங்கள்!

'எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதான்' என்பார்கள். சிரசு எவ்வளவு பிரதானமானதோ, அதே போன்று தான் ஒரு பெண்ணின் பாதங்களின் அழகினையும் ஆரோக்கி யத்தையும் பேணுவது அவசியமாகும்.

உடலுறுப்புகளுக்கு ஏற்ற பயிற்சிகள் கொடுப்பது போன்று பாதங்களுக்கும் உரிய பயிற்சிகள் தரப்படுவது இன்றியமை யாதது. பாதங்களின் தசைநார்களுக்கு ஊறு ஏற்பட்டால் உடல் முழுமையுமே அது பாதித்துவிடும். பாதங்களுக்கு தினசரி பயிற்சி கொடுக்கப்பட்டுவந்தால் அன்றாடம் ஏற்படும் பழுவிலிருந்து பாதுகாப்பினைப் பெறமுடியும்.

பாதங்களிலும் விரல்களின் இடைகளிலும் அழுக்குச் சேராமல் பாதுகாப்பது முக்கியமானது. நகங்களில் அழுக்குப்புகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கைவிரல் நகங்களை வளர்த்து பலர் அழகுபடுத்துவர். அதே போன்று கால்விரல் நகங்களை வளர்ப்பது நல்லதல்ல. அவற்றை அழகாக வெட்டிச்-சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

அலுவலகங்களில் வேலைபார்க்கும் பெண்கள் நீண்டநேரம் பாதணிகளை அணிந்து கொண்டிருக்க வேண்டியிருக்கும். கூடுமானவரை பாதம் முழுவதையும் மூடும் பாதணிகளைத் தவிர்ப்பது நல்லது. குதிக்கால் உயர்ந்த பாதணிகளைப் பாவிப்பவர்கள், அவற்றை நீண்ட நேரம் தொடர்ச்சியாக அணிந்துகொண்டிருக்கலாகாது. அடிக்கடி அவற்றை கழற்றிக்கொள்ள வேண்டும். வீடு திரும்பியதும் அவற்றை கழற்றிவிட்டு சமமான அடிகொண்ட அணிகளை அணிவது நல்லது.


பாதங்களுக்கேற்ற பாதணிகளைத் தெரிந்தெடுப்பது முக்கியம். பாதங்களுக்குப் பொருத்தமில்லாத அணிகள் பெரும் தீங்கினையே தரும். உடலின் பாரத்தைத் தாங்கக் கூடிய அணிகள் பொருந்தாவிட்டால் உட லின் சமத்தன்மையினை இழக்கவைத்துவிடும்.



பாதங்களின் சுகாதாரம் நன்றாகப் பேணப்படாவிட்டால் உழைச்சல் ஏற்படும். பின்னர் பாதமூட்டுக்கள், கால், முழங்கால் ஆகிய பாகங்கள்வரை வலி அல்லது நோ பரவக்கூடும்.

வெந்நீரால் பாதங்களைக் கழுவி, விரல் இடைவெளிகளில் ஈரம் இல்லாமல் துடைத்து விட வேண்டும். விரல்களையும் பாதத்தின் மேற்புறம், கீழ், குதி முதலியவற்றையும் 'மசாஜ்' செய்துகொள்ள வேண்டும். இதனால் தசை நார்களில் அழுத்தம் குறைந்து இரத்த ஓட்டம் சீரடையும்.

## நீங்களும் தைக்கலாம் பிஜாமா (Pyjama)




முன், பின் கால் பாகம்

**அளவு** (Measurment)

கால்சட்டை உயரம் (Full lenth) 40".
பிட்டச் சுற்றளவு (Seat) 36".
கால்கரை அகலம் (Bottom) 24".
AC= சட்டையின் உயரம் 40".
AB= பிட்டச் சுற்றளவில் 1/3 பாகம் (36/3=12")
BB1=1 1/2".
GB1=பிட்டச் சுற்றளவில் 1/3 பாகம் + 1/4". (36/3+1/4=12 1/4")
GK= பிட்டச் சுற்றளவில் 1/12 பாகம் + 1/4"=36/12+1/4"=3 1/4"
G1 க்கு இடப்புறம் 3/4 அங்குலத்தில் G அமைக்கவும்
KH=பிட்டச் சுற்றளவில் 1/6 பாகம் +2" (36/6+2or6+2=8")
ED கால் கரையின் அகலம் Bottom =1/2 கீழ்ப்பாகம் 24/2=12".
CD கால் கரையின் (Bottom) மடிப்பு=2 1/2".

குறிப்பு: மடிப்பு 2 அங்குலம் முதல் 2 1/2" வரை அமைக்கலாம்.

G ஆனது G1க்கு 3/4" இடப்புறம் அமைக்கவும்.

JHG பிட்ட முதுகு வாட்டம் வரையவும்.

**பின் பாகம்** (Back)

M ஆனது Gக்கு 1 1/2". இடப்புறமும் 3/8". கீழ் இறக்கியும் அமைக்கவும்.

MB பிட்டச் சுற்றளவுக்கோடு.

L ஆனது A J கோட்டிற்கு மேலும் Jக்கு வலப்புறம் 1/2". தள்ளியும் அமைக்க.

LM முதுகு பிட்ட வாட்டம் அமைக்க.

NC கால் சட்டைக் கீழ்க் கரை அகலத்தில் 1/2 பாகம்.

குறிப்பு: பின்பாகம் முன் பாகத்தை விட 1" அதிகம். EO =1 Ä. வாட்டத்திற்கு Eக்கு மேல் P யை 1" தூக்கி அமைக்கவும். F க்கு மேல் N ஐ1" தூக்கி அமைக்கவும். CD கரை மடிப்பு 2 1/2 அங்குலம். PD,CN வாட்டம் அமைக்கவும்.

## சமைப்போம்-சுவைப்போம் — தருவது சுகந்தினி

### மஞ்சள் சாதம்

**தேவையானவை:**
முத்துச்சம்பா அரிசி-1 கிலோ
உருளைக்கிழங்கு- 200கிராம்
லீக்ஸ்- 100 கிராம்
கரட்- 150 கிராம்
கோவா- 150 கிராம்
வெண்ணை அல்லது மார்ஜரின்-125 கிராம்
பம்.வெங்காயம்- 4
ஏலக்காய், கறுவாப்பட்டை
கராம்பு, கறிவேப்பிலை, உப்பு
அளவாக
மஞ்சள் தூள்- 1தே.கரண்டி

**செய்முறை:**

உருளை மற்றும் கரட்கிழங்குகளை தோல்சீவி நீள் சதுரமெல்லிய துண்டு களாக வெட்டிக்கொள்ளவும். லீக்ஸ், கோவா மற்றும் வெங்காயத்தை கழுவி துப்பரவு செய்து சிறுசிறு துண்டு களாக்கிக் கொள்ளவும். ஒரு பாத்திரத் தில் வெண்ணையை அல்லது மார்ஜ ரினை விட்டு அடுப்பிலேற்றி கிழங்கு முதலானவற்றை வதக்கி தனியாக எடுத்து வைக்கவும். வதக்கும் போது ஏலக்காய் முதலானவற்றுடன் கறிவேப் பிலையையும் சேர்க்கவும்.

அரிசியைக் கழுவி சாதம் வடிக்கும் பானையிலிட்டு அதன் மட்டத்தின்மேல் 4 அங்குலம் வரை நீரிட்டு உலை வைக்கவும். அரிசி வெந்துவரும் பருவத்தில், ஏற் கனவே வதக்கிய காய்கறி களையும் மஞ்சள் தூள், வெண்ணை அல்லது மார்ஜரி னையும் போட்டு கிளறவும். உப்பையும் அளவாக விட்டு 2 நிமிடம் அடுப்பிலிருக்கவிட்டு மீண்டும் கிளறியபின் இறக்கி பரிமாறவும்.

குறிப்பு: அரிசியினை வேக வைக்கப் பயன்படுத்தும் பானை 2 கிலோ அரிசி வேகக் கூடிய அளவு கொண்டதாக இருக்க வேண்டும்.



## பட்டுச்சேலைப் பரிசுத் திட்டம்

முரசின் பட்டுச்சேலைப் பரிசுத் திட்டப் போட்டிகளில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றி ஆச்சரியப்படுத்தி விட்டீர்கள்.

அத்தனை விடைகளையும் சரிபார்த்து அதில் அதிஷ்டசாலிகளைத் தெரிந்தெடுத்து விரைவில் முரசில் பெயர்கள் பிரசுரமாகும். பரிசில்கள் காத்திருக்கின்றன.

## வீட்டுக்குறிப்பு

முகம் பளபளப்பாக, பொலிவுடன் இருக்க வேண்டுமா? பாலேடு சிறிது எடுத்துக்கொள்ளுங்கள்; முட்டையின் வெள்ளைக் கரு வுடன் இதைக் கலந்து, முகத்தில் பூசிக் கொள்ளவும். அரைமணிநேரம் ஊறியவுடன் குளிர்ந்த நீரில் கழுவி விடுங்கள்: தொடர்ந்நது செய்துவர, முகம் மாசுமரு வின்றி பளபளப்பாகி விடும்.

www.padippakam.com                                        நன்றி - நூலகத்திட்டம்

தகவல் பெட்டி

# ஆடினால் போதும் அரங்கமே அதிரும்

## மலைகள் ஆடுகின்றன-பார்வையாளர்களோ மலைக்கிறார்கள்



ஆடைகளைந்து ஆடும் நடனம் மேலைத்தேயங்களில் சர்வசாதாரணம்.

கீழைத்தேயங்களான ஜப்பான், ஹொங்கொங் போன்ற நாடுகளிலும் இத்தகைய நடனங்களுண்டு.

பொதுவாக இளம் பெண்களே இந்நடனங்களில் தாங்கள் அணிந்துவரும் ஆடைகளை ஒவ்வொன்றாகக் களைந் தெறிந்து ஆடுவார்கள்.

இப்பொழுது இந்த நடனங்களில் ஆண்களும் தலைகாட்ட ஆரம்பித்துவிட்டனர். இவர்கள் ஆடும் ஆடை உரி நடனங்களை கண்டுகளிக்க உலகம் பூராவும் ஆயிரக் கணக்கான இரசிகர்கள் கூடுகின்றனர். பெண்களும் பெருமளவில் வந்து அரங்கை நிரப்புகின்றனர்.

'புளோபென்டேல்' என்பது 5 பேர் கொண்ட ஒரு இசை- நடனக்குழு.

இவர்கள் ஐந்துபேரும் சேர்ந்தால் மொத்த எடை ஒரு தொன் ஆகும். உயரம் குறைந்தவர்கள். ஆனால் உடல் பருமனானவர்கள்.

ஐவரும் பாடிக்கொண்டு துள்ளித்துள்ளி ஆடுவது வேடிக்கையாக மட்டுமல்ல புதுவிதமான காட்சியாகவும் இருப்பதால் இவர்களுடைய ஆட்டங்களைக் காண இரசிகர்கள் கூட்டம் பெருகுகிறது.

சிலிம் (மெலிந்தவர் என்று பொருள்) 588 இறாத்தல் எடை கொண்டவர். இவர்தான் இக்கலைக் குழுவின் தலைவர்.

அடுத்தவர் பவர் ஹவுஸ் (364 இறாத்தல்)

லோலோ (252 இறாத்தல்)

ஸ்வான் ஓஃப் (336 இறாத்தல்)

ரைனி (504 இறாத்தல்)

இவர்கள்தான் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்தில் தான் இவர்கள் முதல் நிகழ்ச்சியினை நடத்தினார்கள். விரைவாகவே இவர்கள் புகழ் உலகெங்கும் பரவலாயிற்று. அழைப்புகள் வரத் தொடங்கின. விரைவில் புகழேயிணியில் ஏறத் தொடங்கிவிட்டனர்.

இவர்களில் ஆரம்பத்தில் மொத்தம் 11 பேர் சேர்ந்து குழுவினை அமைத்தனர். தங்கள் உடம்பைத் தூக்கி குலுக்கி ஆட்டம் போடுவது கடினமாக இருப்பதாகக் கூறிக்கொண்டு ஏனைய 6 பேரும் விலகிக்கொண்டு விட்டனர்.

இவர்கள் ஐவரும் மேடையில் தோன்றியதும் சிரிப்புக்குப் பஞ்சமேயில்லை. பார்வையாளர்கள் சகலரும் தங்களை மறந்து சிரித்து மகிழ்வார்கள். இவர்களில் ஸ்வான் ஓஃப் என்பவர் 4 அடி உயரம் மட்டுமே உள்ளவர். உருண்டு திரண்டு காணப்படுகிறார்.


"நாங்கள் வெறுமனே பருத்த உடல் கொண்டிருப்பதால் எங்களை மற்றவர்கள் பார்த்துச் சிரிக்கிறார்கள் என்பதில்லை. எங்களுடைய ஆற்றலைப் பார்த்து, எங்களால்-எங்களுடன் சேர்ந்து மற்றவர்கள் சிரித்து மகிழ்கிறார்கள்" என்று ரைனி கூறுகிறார். (ரைனி என்றால் 'சின்னஞ் சிறியது' என்பது பொருள்- 504 இறாத்தல் எடை கொண்ட சின்னவர் இவர்)

வேடிக்கை என்னவென்றால்- இவர்களுடைய உடல் பருமனுக்கேற்ற வகையில் பாதங்கள் பருக்காமல் மிகவும் சின்னதாகவே உள்ளன. அந்தச் சிறிய பாதங்களால் இந்தப் பாரிய உடல்களைத் தூக்கிக் கொண்டு ஆடுகிறார்கள்.

# தரையில் நிமிர்ந்து படுப்பது பாவம்

## மாண்டபின்னரும் இருந்தபடியே மண்ணுக்குள் அடக்கம்

## வியப்பான புதிய மதம் வியட்நாம் நாட்டில்



வியட்நாம் நாட்டில் புதுமையான ஒரு சமயம் வெகு வேகமாகப் பரவி வருகிறது. 'க ஓடாயிஸ்ற்' என்ற பெயருடைய இந்த மதத்தவர்களின் கடவுளின் பெயர் க ஓடை என்பதாகும். இணையில்லாதவன் என்பதுதான் அதன் கருத்து.

இம்மதத்தைச் சார்ந்தவர்கள் எவருமே நிலத்தில் சரிந்து உடலைக் கிடத்திப் படுப்பதில்லை. உறக்கம் வந்தாலும், நோயினால் பீடிக்கப்பட்டாலும், எந்தக் கட்டத்திலும் பூமியிலோ கட்டிலிலோ நீட்டி நிமிர்ந்து படுப்பதேயில்லை.

இறந்த பின்னரும் சடலங்களை நிலத்தில் கிடத்தமாட்டார்கள். தியான நிலையில் நாற்காலியில் இருத்தியே பிரேதம் மண்ணுள் புதைக்கப்படும்.

வியட்நாமில் கொம்யூனிச ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் பௌத்த சமயமே பிரதான மதமாக இருந்தது. பிரெஞ்சுக்காரர் இந்நாட்டை ஆட்சிபுரிந்தபோது கிறிஸ்தவ மதமும் ஓரளவு பரவியது.

பிரெஞ்சு ஆட்சி அதிகாரி ஒருவர் 1920ம் ஆண்டில்தான் க ஓடாயிஸ மதத்தை முதன் முதலில் புகுத்தினார். தென் வியட்நாமில் கொம்யூனிச ஆட்சி பரவிய பின்னர் இம்மதம் தடை செய்யப்பட்டது. வியட்நாம் போரின் போது, இம்மத நம்பிக்கையாளர்களில் 25,000 பேர்வரை அமெரிக்காவின் பக்கம் சார்ந்து வடவியட்நாம் கொம்யூனிசக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் போரிட்டனராம். இதற்குத் தண்டனையாக பல ஆயிரக்கணக்கான க ஓடாயிஸ மதத்தைச் சேர்ந்தவர்கள் கொன்று குவிக்கப்பட்டனராம்.

இப்பொழுது தடை நீக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கில் இம்மதத்தில் புதியவர்கள் சேருகின்றனர். முன்பு சைய்கோன் என்றிருந்த தென் வியட்நாமின் தலைநகர் இப்பொழுது ஹோசிமிங் பட்டினம் என்று அழைக்கப்படுகிறது.

இந்நகரிலிருந்து 60 மைலுக்கப்பால் இவர்களுடைய பிரதான ஆலயம் அமைந்திருக்கிறது. 'ரெய் நின்' என்ற இந்த ஆலயத்தில் கிறிஸ்தவம், கொன்ஃபூசியானிசம் மற்றும் பௌத்த மதப் பிரார்த்தனைகள் நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

நாட்டின் வசதிபடைத்த வர்த்தகர்கள், ஆட்சி நிர்வாகிகள், பொறியியலாளர்கள், உயர்கல்விமான்கள் ஆகியோரே இம்மதத்தில் அதிகமாகச் சேர்ந்திருப்பதனால் ஏனைய மதங்களை குறுகிய கண்ணோட்டத்துடன் நோக்கும் தன்மை இல்லை.

உலகம் மிக விரைவில் அழியப் போவதாகவும் அவ்வாறு பேரழிவு ஏற்படும் காலத்தில் தங்களுடைய 'ரெய் நின்' ஆலயம் மட்டுமே தப்பிப்பிழைக்கும் என்றும் இவர்கள் நம்புகின்றனர். இதனால் நாடெங்கணும் ரெய் நின் ஆலயங்களை நிர்மாணிக்கும் பணி துரிதமாக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நோய் எதற்கும் மருத்துவம் பார்ப்பதில்லை. சத்திரசிகிச்சை மற்றும் ஊசிபோடுதல் எதனையும் இவர்கள் அனுமதிப்பதில்லை.

அண்மையில் மின்குஸ் என்ற 51 வயதுப் பெண், நாற்காலியில் இருந்த வண்ணமே காலமானார். சிறுநீரகத்தில் கல் விளைந்திருந்ததே இவருடைய நோய்க்கான காரணமாகும்.

இதனை மிகச் சுலபமான சத்திர சிகிச்சை மூலம் நீக்கி அவரைக் குணப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர் நோய் கடுமையானதும், தனது இறுதிக் காலத்துக்கென சிறப்பாகத் தயாரிக்கப் பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

தியானத்தில் ஈடுபட்டு தனது வேதனையைத் தாங்கிய வண்ணம் உயிரை விட்டார். இவர் இறந்து விட்டார் என்பதனைத் தீர்மானிக்க இவருடைய கண் இமையினை நீக்கிப் பார்த்தே தெரிந்து கொண்டனர்.

இருந்த வண்ணமே அடக்கம் செய்வதற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட பேழையில் வைத்தே அந்த அம்மையாரின் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது.


'சத்திரசிகிச்சை செய்வோர், இரத்த மாற்றம் செய்வோர், ஊசி மருந்து போடுவோர், மருந்துகளை உட்கொள்வோர் எவரும் மறுமையில் நற்பேறு அடைய மாட்டார்கள் என்பதே இவர்களின் நம்பிக்கை.

## வீர நாய்களுக்கு ராஜ மரியாதை



தீரச் செயல் புரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்குவது பற்றி அறிந்திருக்கிறோம். மனிதர்களால் மட்டும்தான் தீரச் செயல்கள் புரியமுடியுமோ? இல்லை. தங்களாலும் முடியும் என்று நிரூபித்துவருகின்றன நாய்கள். தங்களை வளர்த்துவரும் எஜமான்களை ஆபத்தான நேரங்களில் பாதுகாத்த நாய்களின் பட்டியல் திரட்டப்பட்டது. ஏழு நாய்கள் தெரிவு செய்யப்பட்டு விருதோடு விருந்தும் கொடுக்கப்பட்டது. ராஜ விருந்து. ஜேர்மனியில் உள்ள மொளர் நகரில் நத்தார் வைபவங்களில் அந்த விருந்து வைபவமும் ஒன்று.

## வழிகாட்டி



பிரான்சில் பெய்த கடும்மழையினால் இரண்டு ஆறுகளில் வெள்ளம் பெருகி நகருக்குள் புகுந்துவிட்டது. எஜமானருக்கு வெள்ளத்தில் வழி தெரியவில்லை. நாய் வழி தெரிந்து அவரை அழைத்துச் செல்கிறது.

www.padippakam.com    நனி - நூலகத்திட்டம்

# சினி விசிட்

## '94இல் தமிழ் சினிமா

### பாடியதில் அதிகம் பாலா!

கடந்த வருடம் பின்னணிப் பாடகர்களில் அதிகமான பாடல்களை பாடியிருப்பவர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். 83 பாடல்களை பாடியுள்ளார். பாடகிகளில் சித்ரா 52 பாடல்களை பாடியதன் மூலம் முன்னணியில் நின்றார். அதிக பாடல்களை எழுதியவர் வாலி. எழுதியது 52 பாடல்கள்.



பாலசுப்பிரமணியம்-லட்சுமி படம்-பூங்காற்று புதிதானது



### ருக்குமணியால் ரகுமானுக்கு வாய்ப்பு!

'ரோஜா' படம் இந்தியில் எடுக்கப்பட்டு பெரிய வெற்றி. 'ருக்கு மணியே, ருக்கு மணியே' பாடல் இந்தி ரசிகர்களால் முணுமுணுக்கப் படுகிறதாம். அதனை அடுத்து ஏ-ஆர் ரகுமானுக்கு இந்திப்பட வாய்ப்புக்கள் தேடி வரத்தொடங்கி யுள்ளன. ரகுமானின் சகோதரி சமீபத்தில் அவர் பற்றிச் சொல்லியது: 'இப்படி ஒரு தம்பி கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.'



டிஸ்கோ சாந்தி

[illegible]

விட்ல விசேஷங்க படத்தில் பாக்கியராஜுக்கு ஜோடிகள் இருவர் இருவரும் புதுமுகங்கள். ஒருவர் மோகனா, மற்றவர் பிரகதி. வழக்கமான பாக்யராஜ் தனங்கள் உள்ள படம்.



பாக்யராஜ்-பிரகதி படம்-வீட்ல விசேஷங்க



கதாநாயகியாகும் எண்ணத்தில் வந்தவர் சந்தியா. வாய்ப்புத் தருவதாகக் கூறி பலர் கைவிரித்துவிட்டதால் வருத்தத்தில் இருந்தார். சந்தியாவின் கட்டான உடல் பவித்ரனின் பார்வையில் பட 'இந்து' படத்தில் ஒரு சான்ஸ். கதாநாயகியாக அல்ல. கவர்ச்சி நடனத்திற்கு வந்த வாய்ப்பை சந்தியாவும் பயன்படுத்திக் கொண்டார்.



பிரபுதேவா-சந்தியா படம்-இந்து

### இசைராஜா சாதனை ராஜாவானார்

கடந்த வருடம் 'சிம்பொனி' இசை அமைத்து இளையராஜா சாதனை புரிந்தார்.

ஆசியாவிலேயே 'சிம்பொனி' இசை அமைத்த முதல் இசையமைப்பாளர் என்ற பெருமையையும் பெற்றார்.

அதிகப்படங்களுக்கு சென்ற வருடம் இசையமைத்தவரும் அவர்தான். மொத்தம் 38 படங்கள்.

கடந்த வருடம் தேவா- 31 படங்களுக்கும், ஏ.ஆர் ரகுமான் 5 படங்களுக்கும் இசையமைத்தார்கள்.

புதிதாகத் தோன்றிய இசையமைப்பாளர்கள் தாக்குப்பிடித்து நிற்கவில்லை.

இளையராஜாவுக்குப் போட்டியாக புதியவர்களை உருவாக்க முயன்றவர்களும் மீண்டும் அவரிடமே செல்ல வேண்டி ஏற்பட்டது.

### கமல்-சுகன்யா முத்த[...]
### மகாநதியில் ஒரு காட்[...]

'புன்னகை மன்னன்' படத்தில் ஒரு காட்சி. காதல் தோல்வியால் மனம் உ[...] தற்கொலை செய்யப் போகிறார்கள்.

இயக்குநர் பாலசந்தர் கமலை அழைத்தார். காட்சியைப் பற்றிக்கூறிவிட்டு [...] நடி' என்று கூறினார். கமல் தீவிரமாய் யோசித்தார். ரெடி என்று குரல் [...]ழுந்தது. கமலும் ரேகாவும் எதிர் எதிரே நின்றனர். திடீரென்று ரேகாவை இ[...] அவரது உதட்டில் அழுத்தமாக முத்தம் கொடுத்தார் கமல். அந்தக் காட்சி [...] ஏற்படுத்தியது.

அதேபோல் ஒரு காட்சி 'மகாநதி' படத்தில் இடம்பெறுகிறது. ஆனால் [...] வித்தியாசமாக அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு குழந்தைகளுக்கு தந்தையாகவும், ஜெயில் கைதியாகவும் கமல் நடி[...] காதலிக்கும் இளம் பெண்ணாக சுகன்யா நடிக்கிறார். படத்தில் ஒரு காட்[...] உதட்டில் ஆங்கிலப்படப் பாணியில் கமல் உதட்டோடு உதடு பதித்து [...] இடம்பெறுகிறது. பரபரப்பான காட்சியாக பேசப்படுமாம்.

மகாநதியில் கமல் இரு பாடல்களைப் பாடியுள்ளார். கதை-திரைக்கதை [...] கமலின் மனைவி சரிகா படத்தில் உடை அலங்காரப் பொறுப்பை கவனித்[...] வெளியீடு.

### அசத்திய படங்கள்

கடந்த ஆண்டில் எதிர்பாராத வெற்றி ஏற்படுத்திய படம் 'ஜென்டில்மேன்.'


மாபெரும் வெற்றி பெற்று சத்யராஜின் நடிப்புத் திறமைக்கும் பி.வாசுவின் [...] சேர்ந்த படம் வால்டர் வெற்றிவேல். கடந்த வருட இறுதியில் வெளியாகிய சிறந்த க[...] கிழக்குச் சீமையிலே. பாரதிராஜாவின் காட்டில் மீண்டும் மழை. துணிச்சலாகவும், [...] கதை சொல்லக்கூடியவர் என்ற பெருமையை பாரதிராஜா மீண்டும் தக்கவைத்துக்கொ[...]

கடந்த வருட இறுதியில் வெளியாகிய பாடல்களே இல்லாத விறுவிறுப்பான [...] சத்யராஜின் நடிப்புப் பசிக்கு மற்றொரு தீனி. இயக்குநர் ஜோசின் தொய்வில்லா[...] பத்திரிகைகளின் பலத்த பாராட்டைப் பெற்ற படம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

**பாப்பா முரசு சிறுகதை**

# குருவிகளின் தேடல்



ஒரு பணக்காரர் வீட்டுத் தோட்டத்தில் ஒரு ஜோடிக்குருவிகள் வாழ்ந்தன. அந்தக் குருவிகள் தங்கள் வாழ்நாளில் பலதரப்பட்ட வீடுகளில் வசித்து, பலதரப்பட்ட மனிதர்களைப் பார்த்துவிட்டன.

அவற்றிற்கு எந்த மனிதனையுமே பிடிக்கவில்லை. ஒவ்வொருவரும் மனித உருவத்தில் இருந்து கொண்டு வேறு உருவத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதை அவை கண்களால் பார்த்ததால் அவற்றிற்கு எந்த மனிதனையுமே பிடிக்காமல், நல்ல மனிதர்கள் ஒருவேளை இருக்கக்கூடுமென்று நினைத்து அவை ஒவ்வொரு வீடாகப் பறந்து சென்று ஒவ்வொரு வீட்டினுள் இருப்பவர்களையும் கவனிக்கத் தொடங்கின.

அப்படித்தான் அந்தப் பணக்காரரின் வீட்டுக்கு அவை வந்திருந்தன. அந்தப் பணக்காரரின் பெயர் மூர்த்தி. அவரது மனைவியின் பெயர் மாலா.

மாலாவிற்குப் பூக்கள் என்றால் மிகவும் விருப்பம். ஆகவே அவள் தன் வீட்டுத் தோட்டத்தில் ஏராளமான பூச்செடிகளை வளர்த்தாள். தினமும் காலையிலும் மாலையிலும் அவற்றிற்குத் தண்ணீர் விட்டு நன்கு பராமரித்தாள்.

ஒரு நாள் மாலா தன் சிநேகிதியின் வீட்டுத் திருமணத்திற்குச் செல்லவேண்டி இருந்தது. சென்று விட்டு இரண்டு நாள் கழித்துத்தான் வந்தாள். வந்ததும் வராததுமாக தனது தோட்டத்திற்குத்தான் வந்தாள்.

இரண்டு நாட்களாகத் தண்ணீர் விடாததால் பல பூச்செடிகள் வாடி இருந்தன. அவள் மனம் பதை பதைத்து விட்டது. உடனே மண்ணைப் பண்டுத்தி, உதிர்ந்த இலைச்சருகுகளை நீக்கி, தண்ணீர் விட்டாள்.

"ஒரு ரெண்டு நாள் ஊரில இல்லை. இதுக்குக் கொஞ்சம் தண்ணி விட்டா குறைஞ்சா போவீங்க?" என்று தனது கணவன் மூர்த்தியிடம் குறைப்பட்டுக் கொண்டாள் மாலா.

இதை அந்த ஜோடிக் குருவிகள் கவனித்துக்கொண்டிருந்தன.

"அந்த பெண்ணுக்கு இருக்கும் இரக்க குணம், அந்த ஆணுக்கு இல்லையே, எல்லா உயிரினங்களிலுமே ஆண்கள் மோசமான குணம் கொண்டவர்கள் தான்," என்றது பெண் குருவி.

"மூடு வாயை, அந்த மனிதர் போல் நல்லிதயம் கொண்டவர் யாரும் இருக்க முடியாது. வா காட்டுகிறேன்." என்ற ஆண்குருவி விருட்டென்று பறந்தது. உடனே பெண்குருவியும் பறந்துசென்றது. இரண்டு குருவிகளும் ஒரு ஜன்னல் கம்பியில் அமர்ந்தன.

கூடத்து சோபாவில் மூர்த்தியும் இன்னொரு வயதானவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தன.

"மூர்த்தி, சரியான சமயத்தில நீங்க பணம் குடுத்து உதவலேன்னா, என் பெண்ணோட கல்யாணம் இந்த ஜென்மத்தில நடந்திருக்காது. உங்களுக்கு எப்பிடி நன்றி சொல்லுறதுன்னே தெரியலை. என்னோட குடும்பம் காலம் பூராவும் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கு", எனக் கண்ணீர் மல்க மூர்த்தியை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டார் அந்தப் பெரியவர்.

"ஐயய்யோ, இதென்ன கும்பிடுறீங்க. அந்த அளவிற்கு நான் பெரியவன் இல்லேங்க. இல்லாத ஒருத்தருக்கு உதவி செய்யிறது, இருக்கிறவங்களோட கடமை. அதைத்தான் நான் செஞ்சேன். என் பெண்ணா இருந்தா நான் செஞ்சிருக்க மாட்டேனா?" என்றார் மூர்த்தி.

இப்போது ஆண்குருவி பெண்குருவியைப் பார்த்து, "அவரின் குணத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டது.

"உண்மைதான். அவர் மிகச் சிறந்த மனிதர் தான். ஆனால், மனிதனுக்கு இன்னும் சில நல்ல குணங்கள் இருக்கின்றன. அவையும் இவரிடம் இருக்கின்றனவா என்று தெரிந்து கொண்டால்தான் இவரை ஒரு முழுமையான மனிதராக ஏற்றுக்கொள்ள முடியும்." என்றது பெண்குருவி.

"நாளை அதைத் தெரிந்து கொள்வாய்," என்றது ஆண்குருவி.

மறுநாள் மூர்த்தி தம்பதியினர் பல ஏழைக்குழந்தைகளைத் தங்களது பங்களாவிற்கு வரவழைத்துச் சுவையான உணவு கொடுத்து உபசரித்தனர். இதைப் பலகாலம் அவர்கள் செய்து வந்தனர். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. ஆகவே ஊரில் உள்ள ஏழைக்குழந்தைகளை எல்லாம் வரவழைத்து அன்று ஒருநாள் அவர்களுக்கு வயிறு நிறைய உணவு கொடுப்பார்கள். அவர்கள் வயிறும், மனமும் நிறைவதைப்பார்த்து சந்தோசம் கொள்வார்கள்.

இப்பொழுது ஆண்குருவி பெண் குருவியைப்பார்த்தது. பெண் குருவியோ அந்த ஈகைக் குணத்தைப் பார்த்துவிட்டுக் கண் கலங்கியது. ஆண்குருவி அதன் கலக்கத்திற்கான காரணத்தை உணர்ந்து கொண்டு அமைதியானது.

மறுநாள் ஆண் குருவி, பெண் குருவியிடம் ஏதோ கேட்க, பெண் குருவிக்கு உடனே கோபம் வந்துவிட்டது. அந்தக் கேள்வி பிடிக்காமல் ஆண்குருவிடம் சண்டை போட்டது.

"ஹூம், எவ்வளவு கோபம் வந்தாலும் அதை அடக்கி, பொறுமையைக் கைக்கொள்ளுறதுதான் பெண்ணுக்கு அழகு, நீ இத்தனை படபடக்கிறாய், அந்த வீட்டுக்காரர் மனைவி எத்தனை சாந்தமானவர் தெரியுமா? வா அதையும் பார்த்து விடு," என்று சொல்லிவிட்டு ஆண்குருவி பறக்க, அதைத் தொடர்ந்து பெண் குருவியும் பறந்தது.

அவை ஜன்னல் கம்பியில் போய் அமர்ந்தன.

அந்த சமயத்தில் மூர்த்தி ஏதோ கோபமாகப் பேசிக்கொண்டிருக்க, மாலா அவர் காலடியில் அமர்ந்து மிகவும் சாந்தமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் திரும்பக் கோபப்படவில்லை. மாறாக அமைதியுடன் பேசி அவரது கோபத்தைத் தணித்தாள்.

"உண்மைதான், இனிமேல் நானும் அந்தம்மாவைப் போலவே நடந்து கொள்வேன்," என்றது பெண்குருவி.

"எத்தனை அன்பான தம்பதிகள் இவர்கள். நமது வாழ்நாளில் இவர்களைப் போன்ற மனிதர்களைப் பார்த்ததே இல்லையே. இவர்கள்தான் நாம் தேடி அலைந்த மனிதர்கள். இனி நம் ஆயுள் முழுக்க இந்த வீட்டுத் தோட்டத்திலேயே வாழுவோம்," என்றது ஆண்குருவி. பெண்குருவியும் அதை ஆமோதித்தது.

பின்னர், நல்ல மனிதர்களைப் பார்த்துவிட்ட சந்தோசத்தில் அவை தங்கள் கூட்டிற்குப் பறந்து சென்றன.

குழந்தைகளே! ஒரு மனிதனுக்கு அன்பு, அறம், கருணை, கனிவு, இவைதான் கண்ணியத்தை ஏற்படுத்தும் அணிகலன்கள். நாம் மூர்த்தி தம்பதியரைப் போல மனிதர்களாக வாழ்ந்து சிறப்படைவோம். ●

## அறிவோம் மனதில் பதிவோம்

நவீன கால ஒலிம்பிக் பந்தயங்களில் முதன்முதலில் 1928ம் ஆண்டு தான் ஒலிம்பிக் தீபம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஹொலன்ட் நாட்டில் ஆம்ஸ்டர்டாம் நகரில் இந்த ஒலிம்பிக் பந்தயம் நடைபெற்றது.




இங்கிலாந்தின் மிக குள்ளமான மனிதர் மைக்கல் ஹென்பரி. இவரது உயரம் 94 சென்ரி மீற்றர். எடை 35 கிலோ. இவரது இரட்டை சகோதரர் மேல்கமின் உயரம் 175 சென்ரிமீற்றர் எடை 73 கிலோ.



ஜெர்மனியைச் சேர்ந்த கணித மேதை கார்ல் விட்டி. இவர் 1814ம் ஆண்டு ஏப்ரல் 13ம் திகதி தனது 12ம் வயதிலேயே கணிதத்தில் டாக்டர் பட்டம் பெற்றுவிட்டார்.



## அம்மா



அம்மா உன்னை வணங்கிடுவேன்
அன்பாய் உன்னிடம் நடந்திடுவேன்
அன்புடன் நீ தரும் பழஞ்சோறு
அமுதமாய் நினைத்து உண்டிடுவேன்
ஆசையில் நீ தரும் முத்தங்கள்
அழியா நெஞ்சில் முத்துக்கள்
தமிழை அமுதாய் வாயினிலே
தடைகள் இன்றித் தந்தவளே
தாயே என்றும் நீ வாழ்க!
தரணி போற்ற உயர் வாழ்க!

ஏ.குசைன்தீன்
மூதூர்-02.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஆழ குழிதோண்டி, அதிலே ஒரு முட்டை இட்டு, அண்ணாந்து பார்த்தால் 90 முட்டை அது என்ன?
2. ஆள் நுழையாத காடு என்ன காடு?
3. கழுத்திருக்கு தலை இல்லை. கை இருக்கு விரல் இல்லை. அது என்ன?
4. குச்சி கண்ணிருக்கு. திறக்க இயலாது. அது என்ன?

1. தென்னைமரம் 2. முக்காடு 3. சேட் 4. சிரட்டை

எம்.எச்.றிசானா-புத்தளம்.

●

1. தேர் அசைய அசைய பூ உதிர உதிர. அது என்ன?
2. போன ரயில் திரும்பி வராது. அது என்ன?
3. தங்கை தலையிலே பாம்பு?
4. வெள்ளைப் பிள்ளையார் கோயிலில் விழுந்து கும்பிட இடமில்லை?
5. உப்பினை உண்டவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
6. பந்தலைச் சுற்றி பாம்பு தொங்குது. அது என்ன?
7. பகலில் தூங்கி இரவில் விழிப்பான். அவன் யார்?

1. இயந்திரம் 2. சாவு 3. பின்னல் 4. முட்டை 5. கடல் 6. புடலங்காய் 7. நட்சத்திரம்.

கா.சுபாஸ்குமார்-ஹட்டன்.

●

1. கட்டான கட்டழகி. முத்தான முத்தழகி. நெட்டான நெடும்பாவி. பொன்னான பொன்னழகி. சின்ன சிவகாமி. இவர்கள் யார்?
2. அம்மி அடியில் கும்மி அடிப்பேன் நான்தான். கூரையில் ஏறி கூத்து போடுவேன் நான்தான். பட்டுச் சேலையில் முத்திரை போடுவேன் நான்தான். நான்யார்?
3. அடுக்கடுக்காய் இருக்கும். அழகி ராணி அனைவரையும் மயக்கிடும் இதழ் மேனி அவள் யார்?
4. அழகாய் ஆடுவேன் நான் கன்னியும் அல்ல. கானகத்தில் வசிப்பேன் நான். தேவதையும் அல்ல. நான்யார்?

1. ஐந்துவிரல்கள் 2. எலி 3. ரோசாப்பூ 4. மயில்

ஏ.கே.எம். நலீர்-உகுவெல.

## முக்கிய ஆண்டுகள்

1. ஜேர்மன் இரண்டாகப் பிரிந்தது-1945
2. ஜேர்மன் இரண்டாக இணைந்தது- 1990.10.3
3. ஐ.நா தலைமையகம் ஆரம்பிக்கப்பட்டது-1945.10.2
4. இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்டது-1939.
5. மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது- 1952
6. மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது-1950
7. தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது-1961
8. ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியது-1802
9. ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியது-1658
10. போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியது- 1505
11. இலங்கை குடியரசானது-1972
12. இலங்கையில் தொலைக்காட்சி ஆரம்பம்-1982
13. இலங்கையில் அணிசேரா மாநாடு நடாத்தியது- 1976
14. இலங்கை ஜனநாயக குடியரசானது- 1978
15. முதன் முதல் தபால் முத்திரை வெளியிடப்பட்டது- 1857

டீ.எம்.நு.'.மான்-மன்னார்.

## நாடுகள்-தலைநகரங்கள்-நாணயங்கள்

| நாடுகள் | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|
| அல்ஜீரியா | அல்ஜியேஸ் | ரூபிள் |
| டென்மார்க் | ஹோபனேகன் | குரோன் |
| எகிப்து | கெயிரோ | பவுண் |
| ஃபிரான்ஸ் | பரீஸ் | ஃபிராங்க் |
| ஈரான் | தெஃரான் | றியாள் |
| ஈராக் | பக்தாத் | டினார் |
| இத்தாலி | ரோம் | லீரா |
| ஜப்பான் | டோக்கியோ | யென் |
| குவைத் | குவைத் | டினார் |
| லெபனான் | பெய்ரூட் | பவுண் |
| மலேசியா | கோலாலம்பூர் | றிங்கள் |
| நியூசிலாந்து | வெலிங்டன் | டொலர் |
| நோர்வே | ஒஸ்லோ | குரோன் |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் | டொலர் |

தொகுப்பு: எம்.எஸ்-ஸாமிலா
முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், ஒட்டமாவடி.

## கண்டு பிடித்தவர்கள்

1. மின்குமிழ்-தோமஸ் அல்வா எடிசன்
2. கைமணிக்கூடு- கிரீமியன் அய்வரஸ்
3. துவிச்சக்கரவண்டி- ஜின் தேசன்
4. கார்-டெசிமர்
5. மின்கலம்- வேல்டர்
6. தீக்குச்சி- ஜோன்வோகர்
7. வானொலி- மார்க்கேனி
8. தொலைபேசி- அலெக்சான்டர் கிறஹம்பெல்
9. ஹெலிகொப்ரர்-பிறகே
10. தொலைக்காட்சி- லொகி பெயார்ட்
11. றேடியம்- மேடம் கியூரி
12. மோட்டார்கார்- ஹென்ரி போட்
13. கைத்துப்பாக்கி-கோல்ட்
14. எக்ஸ்றே கதிர்கள்-ஜோன் ரோஜு

சி.கிரிஜா-விபுனாந்த மத்திய கல்லூரி, காரைத்தீவு-02.

## உலகநாடுகள் சிலவற்றின் பாராளுமன்றங்களின் பெயர்கள்

| | |
|---|---|
| இலங்கை- | பாராளுமன்றம் |
| அப்கானிஸ்தான்- | சோறா |
| பிரித்தானியா- | பாராளுமன்றம் |
| சீனா- | தேசிய மக்கள் காங்கிரஸ் |
| டென்மார்க்- | போகெற்றிங் |
| ஹங்கேரி- | தேசிய சபை |
| இந்தியா- | லோக்சபா |
| ஈரான்- | மஜ்லிஸ் |
| அயர்லாந்து- | டயல் |
| யப்பான்- | டயற் |
| சுவிடன்- | றக்ஸ்டாக் |
| ஐக்கிய அமெரிக்கா- | காங்கிரஸ் |

எம்.ஐ.எம்.ரம்ஸின்
தர்காநகர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.01.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 25
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 22

பரிசுக்குரியவர்:
கே.சுபாஷினி
நீர்கொழும்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

பவுல்.ஜெயகணேஸ்
விபுலானந்தா வித்தியாலயம்-காரைதீவு-02.

பீ.எம்.முகமட் மாஜித்
தி/மூதூர் மத்திய ம.வி-மூதூர்.

ஏ.எல். பாத்திமா ஸக்கியா
தி/அந்நகார் மகளிர் ம.வி-மூதூர்.

யூ. சிவகுமார்
விஷ்னு வித்தியாலயம்-காரைதீவு.

ஆர்.கிறிஷாந்தி
நல்லாயன் அரசினர் த.ம.வி- கொட்டாஞ்சேனை.

செல்வன்-ப.ருசான்
கல்குடா.

எக்ஸ். நிரஞ்சன்
கொட்டாஞ்சேனை.

ஆறுமுகம் அருண்
தமிழ் மகாவித்தியாலயம்-தலவாக்கலை.

பாக்கியராசா விகர்னன்
கோட்டைக்கல்லாறு-02.

அரசரெத்தினம் கோகுலதீபன்
கல்முனை.

எஸ்.எம்.முஹம்மது சப்வான்
குருனாகல்.

டினேஸ்.நடராஜா
நாவலப்பிட்டி.


வி.வி. தாட்சாயினி
க/மு.விவேகானந்தா த.வி-கல்முனை.

ஏ.எஸ்.எப். முசீரா
கொடியா கும்புர.

ஏ.எல்.பாத்திமா சுமையா
புத்தளம்.

மெ.ரவிந்திரராஜ்
சா/இராகலை தமிழ் ம.வி-இராகலை.

# சிரிக்காத கப்டன்





அசாருதீனுக்கும், பி.வி.நரசிம்மரா வுக்கும் ஒரு விஷயத்தில் ஒற்றுமை உண்டு. இருவருமே அபூர்வமாகத்தான் சிரிப்பார்கள். வெற்றி மேல் வெற்றி குவிந்த போதிலும் அசாருதீன் முகம் சாதாரணமாகவே இருக்கும். சமீபத்தில் ஹீரோ கோப்பையை இந்தியா வென்றபோது இந்திய அணி வீரர்கள் அனைவரும் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தனர். கபில்தேவ் முதல் டென்டுல்கர் வரை சந்தோஷச் சிரிப்பிலும், கேளிக்கை யிலும் மூழ்கித் திளைத்தனர்.

சாம்பெயின் மதுப் போத்தலை நுரை பொங்கக் குலுக்கி அதை மனேஜர் அஜித் வடேகர் மீது ஊற்றி இந்திய வீரர்கள் கொண்டாடினார்கள். மனோஜ் பிரபாகரின் குழந்தையை எல்லோரும் தூக்கிக் கொஞ்சி மகிழ்ந்தனர்.

வினோத் கம்பிளியின் வருங்கால மனைவி நோயிலா லீவிஸை டென்டுல்கர் கிண்டல் செய்து சீண்டி விட்டு தமாஷ் செய்தார்.

இத்தனை கொண்டாட்டங்களும் நடந்தபோது கப்டன் அசாருதீன் மட்டும் தனக்கும் இந்த வெற்றிக்கும் சம்பந்தமே இல்லாதது போல அமைதியாக இருந்தார். சிரிப்பில் சிக்கனக்காரரான அசாருதீன் குளிர்பான போத்தலுடன் ஒதுங்கியே இருந்தார்.

மதுபானம் அருந்தாத கப்டன் என்ற பெயர் பெற்ற அசாருதீன் இரவு நேர பார்ட்டிகளில் கூட நீண்ட நேரம் தங்கி இருப்பதில்லை. எட்டு மணிக்குள் சாப்பிட்டு முடித்து பத்து மணிக்குள் தூங்கும் பழக்கம் கொண்டவர் இவர்.

அசாருதீனுக்கு இந்திய கிரிக்கட் அணியில் உள்ள சிலர் வைத்திருக்கும் செல்லப் பெயர் என்ன தெரியுமா?

'அழுமூஞ்சி கப்டன்'

# ஸ்போர்ட்ஸ்

அமெரிக்காவில் இப்போது 'வீடியோ கேம்' விளையாட்டு இயந்திரங்கள் உள்ளன. அமெரிக்க குழந்தைகள் வீடியோ கேம் சாதனங்களையும், வீடியோ கசட் ரெக்கோடர் களையும், கொம்பியூட்டர்களையும் மிகவும் சர்வ சாதாரணமாகப் பயன்படுத்துகின்றனர். அவர்களின் இந்த வீடியோ மோகத்தை பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தவும் பூமி யின் சுற்றுச் சூழலைப்பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தவும் இந்த வீடியோ கேம் சாதனங் களை முறையாகப் பயன்படுத்தவுள்ளனர்.

'வீடியோ கேம்ஸ்' சாதனங்களை வெறும் விளையாட்டு சாதனங்களாகக் கருதி விடக்கூடாது. குழந்தைகளின் அறிவுக் கூர்மையை வளர்க்கும் சாதனங்கள் இவை.





அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்த அமெரிக்கா வில் முடிவு செய்துள்ளனர்.

குழந்தைகளின் கணிதத் திறமையை வளர்க்கவும், வெளிநாட்டு கலாச்சாரங்களைப் குழந்தைகளிடம் நல்ல சிந்தனையைத் தூண்டும் புதிர்களும், போட்டிகளும், 'வீடியோ கேம்ஸ்' சாதனங்கள் மூலம் கொடுத்தால் குழந்தை களுக்கு நல்லது என்று தெரிவித்துள்ளனர்.

# தேசிய விளையாட்டுக்கள்

1. ஜப்பான் - கராத்தே, ஜூடோ
2. அவுஸ்திரேலியா - கிரிக்கெட்
3. பாகிஸ்தான் - ஹொக்கி
4. இலங்கை - எல்லே
5. துருக்கி - மல்யுத்தம்



6. இந்தியா - ஹொக்கி, கபடி
7. ஐக்கிய நாடுகள் - போஸ் பால்
8. கனடா - ஹொக்கி (பனிஹொக்கி)
9. ஸ்பெயின் - ஜல்லிக்கட்டு
10. ஸ்கொட்லாந்து - கால்பந்து (ரக்பி)

அனுப்பியது: தராபுரம் நப்ஹான்.

# தேன் கிண்ணம்

## அன்பின் மாமிக்கு!

மாமி....
நீ ஏன்
அநாவசியமாகப்
பயப்படுகிறாய்..?
நான் சத்தியமாய்
உன் மகளைக்
காதலிக்க மாட்டேன்!

உன் மகள்
அழகானவள்தான்
இருப்பினும்
(விற்பனைக்குத் தானே?)
அழகு, வீட்டு வாடகை
கொடுக்காது!
கரண்ட் பில்லும்
கட்டாது!!

நான்
யாழ்ப்பாணத்துப்
பெற்றோல் மாதிரி..!

நீ சந்தைக்குப்
போனால்
செவ்விளநீரின்
விலையை
விசாரித்துப்பார்.
அதுவும் அழகாகத்தான்
இருக்கிறது!

எதற்குப்
பெருமைப்படுகிறாய்?
உன் மகளை
பூட்டி வைத்திருப்பதாலா?
மாமி....
மகிழ்ந்து போகாதே!
உன் மகளின் நெஞ்சில்
காதை வைத்துப்பார்.
எனது பெயர்
ஒலித்துக்கொண்டிருக்கும்!
(எனது பெயர்
'டிக்டிக்'அல்ல
ஹி.....ஹி.....ஹி...)

மாமி..
உன் மகள்
உண்ணும் போது
என்னை
நினைக்காவிட்டால்-நான்
உறங்கும்போது
அவளை
நினைக்கமாட்டேன்!

எதற்கு வீண் வம்பு.
நான் அவளைக்
காதலிக்க மாட்டேன்.
போதுமா..?

எனக்குப்
பூக்களுக்குப்
பஞ்சமில்லை!
இந்த மாட்டின்
விலை
ரொம்ப அதிகம்!

ஏனோ...
நான் விரும்பினேன்,
நீ விரும்பவில்லை.
சரி விடு.
உனக்கு
மகள் மிச்சம்!
எனக்கு
காரும் வீடும் மிச்சம்!!

எம். சுரேஷ்.

## மரணம்வரை மௌனமாய்

ஊழிக் காலத்தின்
ஆணி வேர் ஊன்றிக்
கொண்டதான
எங்கள் நிலத்தின்
கொடுமை.

சுடலைகள்
நிரம்ப
சவங்களைப்
புதைத்து மீள
மழையும்
காற்றும்..

செத்துப் பிழைத்து
மீண்டும் செத்து
புதைத்து
என்பதான
ஒரங்க
விதிமுறைகள்.

மஹாராஷ்டிரத்திற்குப்
பின்னால்
ஈழமா?
என்ற
பயங்கரமும்
பீதியும்.

எரிமலையும்
சூறாவளியும்
வங்கக் கொந்தளிப்பும்.
பூமி நடுக்கமும்
கொலை கார அரக்கனாய்

போதாதற்கு

இனவாதமும்
யுத்தமும்...
அட்டூழியங்களின்
பிரதிபலிப்பாய்
இறைவன் பார்க்கும்
இயற்கைப் பார்வைக்கு
யார்தான்
தடை போடுவது?
மரணிக்கும் வரை
மௌனங்
கொள்வதைத்
தவிர...

அக்குறணை-இளைய அப்துல்லாஹ்.

## தேர்தல்

தேர்தல் ஒன்று வருகிறது
தேற இதில் அபேட்சகர்
மார்பு தட்டி வருகிறார்
மகிமை பேசி நிற்கிறார்

••

கன்னல் தமிழ் சாற்றிலே
கருத்தை அள்ளி வீசுகிறார்
பென்னம் பெரிய மாலைக்காய்
கழுத்தைக் கொஞ்சம் நீட்டுகிறார்

••

ஒலி பெருக்கி ஒரு பக்கம்
ஊருல படமோ மறுபக்கம்
வலிமை யான கைதட்டல்
வாகை தன்னை காட்டிடும்

வீட்டில் சேர்த்த பணமதும்
வாங்கி வைத்த நகைகளும்
ஓட்டு கேட்டு போய்விடும்
ஒய்வும் முற்றாய் குறைந்திடும்

••

கோழி திரியும் இடமெல்லாம்
கூடிப் போகும் குஞ்சு போல்
வழியே வந்து நண்பர்கள்
வாங்கி உண்டு கழிக்கிறார்.

••

ஏ. குசைன்தீன்-மூதூர்-02.



## பழைய நாட்கள்!

அழுக்கு மேகம்
அடர்த்தியாகப் பரவி
ஆகாயத்தை மறைத்து
இரத்த வாடையில்
மழை சிணுங்கிக் கொண்டிருந்தது!

••

மனிதனின்
குருதி வெள்ளோட்டத்தில்
மழைத்துளிகள் விழுந்து
குமிழ் குமிழாய்
வெடித்து மறைந்தன!

••

பூமி தவிட்டு நிறமாய்
களை இழந்து
ஆசை தீரக் குளித்த
மனநிறைவில்
ததும்பி நின்றது!

••

சமாதானப் புறா ஒன்று
ஈரச் சிறகை
உலுப்பி
உதறிக்கொண்டு
சலனமுற்ற எரிச்சலில்
முணுமுணுத்துக் கொண்டது!

••

வேலிமர அடர்த்திக்குள்
நாய் ஒன்று
இமைகளை நனைத்த
ஈரச் சுமையோடு
தண்ணீரால் விருப்பமில்லாமல்
நழுவிக் கடந்தது.

••

நான் ஜன்னல் சுவரில்
நெஞ்சைப் போட்டுக்கொண்டு
முழங்கைகளை நாடியில் தாங்கி

அடைமழையின்
பாய்ச்சல்களை
ஊடுருவிக் கொண்டு
ஈரக் காற்றை
சுவாசிக்க,

••

பழைய நாட்கள்
இந்த கனத்த மழையோடு
சங்கமித்து
இறுதியாக பள்ளம் நோக்கிப்
பாய்ந்தது.

••

செல்வன் ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(23.01.94 முதல் 29.01.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

மகரம் - சூரியன், சனி, வெள்ளி, செவ்வாய், புதன்
கும்பம் - புதன்
இடபம் - கேது
துலாம் - வியாழல்
விருட்சிகம் - இராகு

சந்திரன் இவ்வாரம் இடபம், மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

## மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணமுடங்கல், கடன் தொல்லை. | காலை 9 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பயணம், துக்க செய்தி. | காலை 10 மணி |
| புதன்- | பணத்தட்டுப்பாடு, கடன் படல். | பி.ப 2 மணி |
| வியாழன்- | வீண் முயற்சி, மனக்குழப்பம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், மறைமுக எதிர்ப்பு. | பகல் 11 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் படல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செலவு மிகுதி ஆடம்பர வாழ்வு. | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- | உறவினர் உதவி, திடீர்ப் பயணம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | வெளியிட வாசம், பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், முதலீட்டு இலாபம். | பி.ப 1 மணி |
| சனி- | பிள்ளைகளால் கவலை, மனக்கிலேசம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 1

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, உறவினர் பகை. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மன மகிழ்வு. | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, இனசனக் கொண்டாட்டம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், எடுத்த கருமம் வெற்றி. | பி.ப 2 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, பண இழப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணவரவு. | காலை 8 மணி |
| திங்கள்- | காணி பூமி மாற்றம், மன வேதனை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, வருமானம் குறைவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | நடைக்கஷ்டம், அந்நியர் சகவாசம். | பகல் 11 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணக்கஷ்டம் நீங்கும், உயர்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, காணி பூமி மாற்றம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, பணவரவு. | காலை 9 மணி |
| புதன்- | எதிர்பார்த்த நன்மையுண்டு, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | குடும்பக் கலகம், திடீர் பயணம். | காலை 10 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, துயர் நிலை நீங்கும். | பி.ப 3 மணி |
| சனி- | வெளியிட வாசம், காணிபூமி தகராறு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் மேன்மை, கௌரவ நிலை. | காலை 7 மணி |
| திங்கள- | பூமியால் இலாபம், துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- | எண்ணிய கருமம் வெற்றி, தேகசுக நன்மை. | காலை 9 மணி |
| வியாழன்- | வீண் முயற்சி, புதிய திட்டம் நிறைவேறல். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனவேதனை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், எதிர்பாரா செலவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | செல்வாக்கு மிகுதி, துயர் நீங்கும். | பகல் 11 மணி |
| புதன்- | பயணங்கள் வெற்றி, பணவரவு. | பி.ப 1 மணி |
| வியாழன்- | துக்க செய்தி, மனக்கவலை. | காலை 7 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, மனத்துயர் நீங்கும். | காலை 8 மணி |
| சனி- | அந்நியரால் உதவி, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -9

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் மனஸ்தாபம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 1 மணி |
| திங்கள்- | செய்தொழில் நன்மை, கௌரவம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பணவரவு. | பி.ப 3 மணி |
| புதன்- | தேகசுகம் நன்மை, செய்தொழில் விருத்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | தனலாபம், பெரியோர் உதவி. | காலை 10 மணி |
| வெள்ளி- | நடைக்கஷ்டம், வெளியிட வாழ்க்கை. | காலை 9 மணி |
| சனி- | மனக்குழப்பம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் கலகம், மனக்குழப்பம். | காலை 8 மணி |
| திங்கள்- | வைத்தியச் செலவு, உத்தியோகத்தடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | தூரஇடப்பயணம், செய்தொழில் நன்மை. | காலை 9 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | மனக்குழப்பம், தெய்வ வழிபாடு. | காலை 9 மணி |
| சனி- | பணப்புழக்கம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பகைமை நீங்கல், மன மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், உயர்ச்சி நிலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | தனலாபம், செய்தொழில் நன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, கீர்த்தி, மேன்மை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | தனச் சேதம், கண்டத்திற்கு மேல் நோய். | காலை 9 மணி |
| சனி- | அந்நியர் எதிர்ப்பு, பணத்தடை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 8

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, பணக்கஷ்டம். | பகல் 11 மணி |
| திங்கள்- | பெரியோர் சகாயம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தனலாபம், முயற்சி மேன்மை. | காலை 10 மணி |
| புதன்- | புதிய ஸ்தானம், தேகசுக நன்மை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, உயர்ந்தவாழ்க்கை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, பணவரவு. | காலை 9 மணி |
| திங்கள்- | துன்பநிலை நீங்கும், பெரியோர் நட்பு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் இலாபம், மனக்கஷ்டம். | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, வீண் வாக்குவாதம். | பகல் 11 மணி |
| வியாழன்- | முதலீட்டு இலாபம், சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வீண் குழப்பம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| சனி- | உறவினர் உதவி, வெளியிடப் பயணம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்



## முத்தான முகம் விகாரமாகியது சத்திர சிகிச்சை கை கொடுத்தது

முகத்தின் சதை முழுவதும் தானாகவே உருகி, உருவம் மாறி விகாரமான தோற்றம் பெற்ற இந்தியப் பெண், மருத்துவ உதவி பெற்று புதிய தோற்றம் பெற்றார்.

சந்திரா படேல் என்ற வடஇந்தியப் பெண்ணான இவரைக் கண்டாலே வேறு புறம் முகம் திருப்புவோரும், பயந்தோடும் குழந்தைகளும் இவரை இப்பொழுது பார்த்து அதிசயப்படுகின்றனர்.

சந்திராவுக்கு இப்பொழுது 38 வயதாகிறது. 1986ல் முதன் முதலில் இவருக்கு சதையினை உருக்கும் நோய் கண்டது. முக்கியமாக இவருடைய முகம் விகாரமடைந்தது. கன்னம், மூக்கு, கண் இமைகள், நாடி, நெற்றி ஆகிய அவயவங்களிலுள்ள சதைகள் மெழுகு போல் உருக ஆரம்பித்தன. உடலின் அங்கங்களிலும் சதைகள் உருகிவிட்டன.

கைகால் விரல்களில் கூட சில செயலிழந்துவிட்டன. இடது கண்பார்வையும் பறி போனது. 19வது வயதில் மிக அழகியாகத் தோற்றமளித்த சந்திரா சில மாதங்களிலேயே குரூபியாக மாறிவிட்டாள்.

பல மருத்துவர்கள் படாத பாடுபட்டு மருத்துவம் செய்தும் சந்திராவின் நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சில மருத்துவ சஞ்சிகைகளில் சந்திராவின் கதை பிரசுரமாகியது. 1988ம் ஆண்டில் அமெரிக்க சஞ்சிகைகள் விசித்திர நோய் பற்றிய தகவல்கள் வெளிவந்தன. இதனைக்கண்ட கலிபோர்னியாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் ஒருவம் இந்தத் தகவல்களை அறிந்தார். இத்துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்ட அந்த மருத்துவர், (பெயரை இப்பொழுது வெளியிட விரும்பாதவர்) சந்திராவுடன் தொடர்பு கொண்டு அவரை அமெரிக்காவுக்கு வரவழைத்தார்.

சந்திரா தையற்கலைஞரான ரவீந்த்ராத்சிங் என்பவரை மணம் முடித்திருந்தார். 1992 செப்ரம்பரில் சந்திரா அமெரிக்கா சென்றார். 10 மாதங்களில் அவருக்கு 3 சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அந்த மருத்துவ நிபுணர் கண்டு பிடித்த ஒரு புதிய மருந்தும் சந்திராவுக்குப் பரீட்சார்த்தமாகக் கொடுக்கப்பட்டது. வெற்றியும் கிடைத்தது.

சந்திரா இப்பொழுது புதிய உருவத்துடன் தோற்றமளிக்கிறார். அவருடைய கோர உருவம் நீங்கி அழகான முகத் தோற்றத்துடன் காணப்படுகிறார்.

"எனது சாவையே தந்து என்னை இக்கோர உருவ உடலிலிருந்து மீட்டருளும் இறைவா என்று நான் இறைவனை மன்றாடிக் கொண்டிருந்தேன். இன்று மருத்துவ நிபுணரின் தோற்றத்தில் இறைவனே வந்து எனது பயங்கரத் தோற்றத்தை மாற்றித் தந்துவிட்டார்.

"எனது முதல் சத்திரசிகிச்சையின் போதே எனக்கு பரிபூரணமான சுகம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றி விட்டது. இன்று நான் புத்துயிர் பெற்றுள்ளேன்" என்று சந்திரா படேல் குதூகலிக்கிறார். "என்னைப் பார்த்து அருவருப் படையும் எவரும் இன்றில்லை. என்னைக் கண்டு பயந்தோடும் பிள்ளைகள் இன்று என்னை நாடி ஓடி வருகிறார்கள்." என்கிறார் அவர்.



## இருதய சத்திர சிகிச்சையில் இலகுவான வழிமுறைகள்

மிகக் கடுமையான இருதய நோய் உள்ளவர்களையும் உடனடியாகப் பரிசோதித்து, அதே இடத்தில் வைத்தே சிகிச்சையும் அளித்து குணமாக்கி வீட்டுக்கு அனுப்பிவிடலாம். பைபாஸ் சேர்ஜரி (Bypass surgery) எனப்படும் நுட்பமான சத்திரசிகிச்சையினையும் நோயாளியைப் பரிசோதித்த உடன், அதே இடத்தில் வைத்தே சில நிமிடங்களில் செய்து முடித்துவிடலாம். தந்த வைத்தியர் ஒரு பல்லினைப் பிடுங்கி எடுப்பது போன்றே இப்பாரிய சத்திர சிகிச்சையினையும் செய்து விடலாம் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இருதயத்துடன் தொடர்புடைய நாளங்கள் மற்றும் நரம்புகள் இருதயத்துடன் இணையும் இடத்தில் சற்றுப் பெருத்தோ அல்லது சிறுத்தோ காணப்படுவதனால் இருதயக் கோளாறு ஏற்படுகின்றது. சிலருக்கு இருதயத்தில் சிறு துவாரம் இருக்கும். இத்தகைய நோய்களுக்கு சத்திரசிகிச்சை செய்தே மருத்துவ நிபுணர்கள் நோயாளிக்கு சுகம் அளிக்கின்றனர். இருதயத் தொடர்புடைய நாளங்களை வெட்டி, உடலுக்கு வெளியே வைக்கப்பட்டிருக்கும் செயற்கை இருதயத்துடன் பொருத்தி உடலின் பலபாகங்களுக்கும் இரத்த ஓட்டத்தைத் தொடர்ந்து அனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்த பின்னரே இருதயத்துக்கான சத்திர சிகிச்சையை மருத்துவர்கள் செய்கின்றனர். சிகிச்சை முடிந்ததும் இயற்கை இருதயத்தை மீண்டும் இயங்க வைத்துவிடுகின்றனர். இதுதான் 'பை பாஸ் சேர்ஜரி' என்றழைக்கப்படுகிறது.

இத்தகைய சத்திரசிகிச்சை பெறுபவர் சிகிச்சைக்கு முன் பல வாரங்களும் சிகிச்சைக்குப் பின்னர் சில வாரங்களும் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும்.

இனிமேல் வரும் காலங்களில் இதே போன்ற கடுமையான சத்திரசிகிச்சை ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் பூரணமாக முடித்து நோயாளி நடந்தே தனது இல்லம் சென்றுவிட முடியுமாம். மருத்துவமனையில் ஒருநாள் கூடத் தங்கவேண்டிய நிலை ஏற்படப் போவதில்லை என்று தெரிவிக்கப்பட்டள்ளது.

இத்தகவலை ஒரு பிரசித்திபெற்ற மருத்துவ சஞ்சிகை வெளியிட்டள்ளது.

## வயதாகி விட்டதே என்று வாழ்க்கையை வெறுக்கலாமோ?



இன்றைய நவீன மருத்துவம் வளர்ந்திருக்கும் நிலையில் நீண்டகாலம் உயிர்வாழ்வது என்பது பெரும் அதிசயமான தொன்றல்ல. மருத்துவத் துறையில் நடைபெறும் புதுப்புது ஆய்வுகள், உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் ஒருவருடைய ஆயுளை நிச்சயம் அதிகரிக்கவே செய்யும்.

இன்று 30 வயதை எட்டிப்பிடிக்கும் ஒரு ஆண் நிச்சயமாக 70 வயதுவரை வாழலாம். அதேபோல் இன்று 35 வயதிலுள்ள ஒரு பெண் 80 வயதுவரை வாழமுடியும். ஆனால் புதிய மருந்துகளைத் துணை கொண்டு ஆயுளை விருத்தி செய்ய முயல்வது வேறு பல பிரச்சினைகளுக்கும் இடம் தரும் என்பதை மறுக்க முடியாது.

அமெரிக்க தேசிய நல்வாழ்வு மையம் தெரிவித்துள்ள தகவலில், வயதேறிக் கொண்டு போகும் போது ஏற்படும் உடலியல் மாற்றங்களும் அதனால் உண்டாகும் தாக்கங்களும் விளக்கப்பட்டுள்ளன.


* சிரசில் மண்டை ஓடு தடிப்பாகும் போது மயிர் உதிரத் தொடங்கும். அறிவு அதிகரிக்கும். ஆனால் மூளை சுருங்க ஆரம்பித்துவிடும்.
* காதுகள் பெரிதாகும். ஆனால் கேட்கும் சக்தி குறைந்துவிடும்.
* இளமையில் மிகக் கூர்மையான பார்வையுடையவர்கள் கண்பார்வையினை இழக்க நேரிடும். கண்ணாடி அணியாமல் பார்க்க முடியாத நிலை ஏற்படும்.
* 50 வயதானவர்களுக்கு, 30 வயதிலிருந்ததைவிட 1/2 அங்குலமாவது மூக்கு நீளக்கூடும். அதே வேளை நுகர்ச்சியும் குன்றலாம்.
* அதிக உயரமுடையவராக இருந்த போதிலும் வயதாக ஆக உங்கள் உயரம் 2 அங்குலம் வரை குறைந்துவிடும். முதுகெலும்பின் அடுக்குகளுக்கிடையில் காணப்படும் இணைப்புத் தசைகள் சிதைவுறுவதனால் இது ஏற்படுகிறது.
* தாடை எலும்புகள் குறுகக்கூடும். அதே வேளை முகத் தோலும் சுருங்க நேரிடும்.

நீண்ட நாள் உயிர் வாழ நேர்ந்தால் இத்தகைய மாற்றங்களைத் தவிர்க்க முடியாது. இவற்றை நீக்கலாம் என்று நினைத்து மருத்துவம்செய்ய முயற்சி எடுத்தால் அதனால் எதிர்பார்த்த பலனுக்குப் பதிலாக மாறுபட்ட விளைவுகளே ஏற்படும்.

இத்தகைய பின்னடைவுகள் இருப்பினும், 70 வயதானாலும் சுகதேகியாகவும் சக்திமிக்கவராகவும் சுறுசுறுப்புடன் கடமை பார்க்கும் தன்மையுடன் ஒருவர் வாழ முடியும். அதற்கு மிக எளிமையான சில வழிகளைக் கடைப் பிடித்தால் மட்டும் போதுமானது என்று தேசிய நல்வாழ்வு மையத்தைச் சேர்ந்த நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்கள் தெரிவித்துள்ள முறைகள் வருமாறு:

* தினசரி அளவான தேகப்பயிற்சி செய்வது அவசியமானது.
* உணவில் கொழுப்புச் சத்துச் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாச்சத்து அதிகமற்ற தானியங்களை அளவாக உண்ணலாம். அத்துடன் காய்கறி மற்றும் பழங்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.
* உப்பைக் குறைக்க வேண்டும். அளவுக்கு மீறிய இறைச்சி வகையினையும் புசிக்காதிருக்க வேண்டும்.
* மதுபானம் பாவித்தல் மற்றும் புகைத்தல் ஆகியவற்றை உடன் நிறுத்திவிட வேண்டும்.

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்



சாப்பிடுபவர்: பொங்கள் கலரா இருக்கே?
சர்வர்: பச்சை அரிசியாச்சே சார்.

•

நடிகர்: நான் கேரக்டருக்காக மொட்டை அடிச்சுக்கிட்டேன். நீங்க?
தயாரிப்பாளர்: தயாரிச்சதுக்காக மொட்டை அடிச்சேன்.

ஒருவர்: சார் புடவைக்கடைக்கு எப்படிப் போகணும்?
மற்றவர்: மனைவியை வீட்டில விட்டுட்டுப் போகணும்.

•

நோயாளி: டாக்டர் ஒரு காலும் கையும் மட்டும் ரொம்ப வீங்கி வித்தியாசமாத் தெரியுது.
டாக்டர்: இந்த மருந்தை ஒருவாரம் சாப்பிடுங்க.
நோயாளி: சரியாயிடுமா?
டாக்டர்: இல்லே. இன்னொரு கையும், காலும் வீங்கிவிடும். பிறகு வித்தியாசம் தெரியாது பாருங்க.

•

* டாக்டர் நாளைக்கு என் கண்ணை ஒப்பரேசன் செய்யப் போறதை நினைச்சா பயமா இருக்கு.
* நீங்க கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கிறேன்.
* நீங்க பார்ப்பீங்க. நான் பார்ப்பேனா?

மாணவன்: மன்னர் ஆட்சிக்கும், மக்கள் ஆட்சிக்கும் என்ன சார் வித்தியாசம்?
ஆசிரியர்: அரசனைப் புகழ்ந்து பாட அரசவைப் புலவர்கள் இருப்பார்கள். மக்களாட்சியில் மந்திரிகளே அந்த வேலையைச் செய்கிறார்கள்.

அவள்: ரேடியோ அறிவிப்பாளரை கல்யாணம் செய்தது தப்பாய் போச்சுடி.
நண்பி: ஏன்?
அவள்: தினமும் நடுராத்திரியில் எழுந்து "இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன" என்று அறிவித்து விட்டுத்தான் தூங்குகிறார்.



அவர்: சரித்திரக் கதாசிரியருக்குப் பெண்ணைக் கொடுத்தது தப்பாப் போச்சுது.
நண்பர்: ஏன்?
அவர்: குதிரை வாங்கித்தருமாறு கேட்கிறார்.

•

எழுத்தாளர்: பத்து நாளுக்கு ஒரு தடவை யாரோ ஒரு திருடன் வந்து நான் எழுதும் கதைகளைக் கிழித்துப் போட்டுவிட்டுச் செல்கிறான்.
நண்பர்: அது திருடனாக இருக்காது. யாரோ உங்கள் வாசகராகத்தான் இருக்க வேண்டும்.

•

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கண்ணே மதுமிதா

எழுதுவது ரசிகன்



அத்தியாயம் 30

புகைப்படத்தில் துணியில்லாத மதுமிதா மீது பரவியிருந்தது தனபால். வைத்திலிங்கமாய் நடித்து செத்துப் போய்விட்ட தனபால்.

குலாம்ஷா புகைப்படங்களை தன் உதவியாளரிடம் கொடுத்தார்.

"போகலாமா நந்தகோபால்."

குலாம்ஷா கேட்க, நந்தகோபால் முகம் மின் விளக்கு இல்லாத வீதி போலத் தெரிந்தது.

லால், பி.எம்.லால் இனித் தப்பமுடியாது என்று உணர்ந்து மெல்லக் கண்திறந்தான்.

குலாம்ஷா லாலைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

"என்ன நண்பா நடித்தது போதும் என்று தீர்மானம் எடுத்துவிட்டாயா? முட்டாள் நண்பனே நீ கண் திறந்தது, என்னைப் பார்த்து மீண்டும் மூடிக்கொண்டது எல்லாமே என்னால் கவனிக்கப்பட்டது. விளையாட்டு ஏதாவது காட்டுவாய். நானும் கொஞ்சம் விளையாடலாம் என்று நினைத்தால்,...சே...இவ்வளவு தானா நீ..?"

லால் வெளிறிய முகத்தோடு நடுக்கமாய் தரைவிட்டு எழுந்தான்.

குலாம்ஷா கண்களால் கட்டளையிட லாலின் கரங்களில் விலங்கு ஏறியது.

"டாக்டரையும் கவனியுங்கள்."

நந்தகோபாலும் கரங்களில் விலங்கு தாங்கினார்.

வெளியே லாலின் ஆட்கள் பன்னிரெண்டு பேர் ஒரு ட்ரக் வண்டியில் துவைத்துப் போடப்பட்ட துணிகள்போல கிடந்தனர். கவனிப்பு அப்படி..

மதுமிதாவையும், வைத்திலிங்கத்தையும் அருகில் அழைத்து,

"மிஸ்டர் வைத்திலிங்கம். உங்கள் காரிலேயே நீங்கள் பொலிஸ் நிலையம் செல்லலாம். அங்கு காத்திருங்கள். சின்னதாய் ஒரு வேலை பாக்கியிருக்கிறது. முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்."

சொல்லிவிட்டு, கட்டளைக்காக காத்திருந்த சப் இன்ஸ்பெக்டர் மூர்த்தியை அழைத்தார் குலாம்ஷா.

"மூர்த்தி-நந்தகோபாலையும், லாலையும் நான் அழைத்துச் செல்கிறேன். நீங்கள் லாலின் ஆட்களை கொண்டுபோய்ச் சேருங்கள். கவனம் முக்கியம். தப்பி ஓட முயன்றால் கருணை காட்ட வேண்டாம். ஓ.கே."

"யெஸ் சேர். அந்த இரண்டு பிணங்கள்."

"அதை சப் இன்ஸ்பெக்டர் ராகவன் கவனித்துக்கொள்ளட்டும். என்ன ராகவன்."

ராகவன் சல்யூட் ஒன்றை வழங்கி அருகில் வந்து,

"ஓ.கே.சேர்."

நந்தகோபாலும், லாலும் குலாம்ஷாவின் ஜீப்பில் திணிக்கப்பட, காவலாய் மூன்று பொலிசார் பின்னால் ஏறிக்கொண்டார்கள்.

ஜீப் உறுமிக்கொண்டு கிளம்பி வேகம் எடுக்க, வோக்கி டோக்கி அழைத்தது.

மறுமுனையில் இருந்து இன்ஸ்பெக்டர் அரவிந்த் பேசினார்.

"ஒப்பிரேசன் சக்சஸ் சேர். ஓவர்."

"குட்.. சேதம் ஏதாவது? ஓவர்."

குலாம்ஷா கேட்டதற்கு சங்கேத வார்த்தையில் அரவிந்த் பதில் சொன்னார். குலாம்ஷாவின் முகம் பிரகாசமானது.

"தட்ஸ் குட். தட்ஸ் குட். இன்னும் இரண்டு மூன்றை அனுப்பி வைத்திருந்தாலும் ஓ.கேதான். இருந்துதான் என்ன செய்யப் போகிறார்கள்?"

மறுமுனையில் அரவிந்த் சிரித்தார்.

"ஏற்கனவே ஐ.ஜி. உங்களில் படுகோபம்."

என்று மீண்டும் சங்கேத வார்த்தையால் சொன்னார்.

"நினைத்தேன். டி.ஐ.ஜியை ஒரு வாங்கு வாங்கியிருப்பார். ஓ.கே.ஓவர்."

சங்கேத வார்த்தையில் தொடர்ந்து பேசினார்கள்.

"டி.ஐ.ஜிக்கு அறிவிக்கட்டுமா சேர். ஓவர்."

"யெஸ். சந்தோசப்படுவார். தங்கை பத்திரமாய் மீட்கப்பட்டதற்கு. கோபப்படுவார் அதிக பலிகள் எடுக்கப்பட்டதற்கு. என் தலையில் போட்டுவிடுங்கள். நான் பதில் சொல்லிக்கொள்கிறேன். ஓவர்."

குலாம்ஷாவுக்கு சந்தோசமாய் இருந்தது. டாக்டர் பாஸ்கரனிடம் நடித்து, டி.ஐ.ஜியின் தங்கை அடைத்து வைக்கப்பட்டிருந்த இடம் அறிந்து, மிகச் சரியாக திட்டம் வகுத்து இன்ஸ்பெக்டர் ரஞ்சித்திடம் பொறுப்பை கொடுத்தார். காரியம் வெற்றியானதில் நிம்மதி வந்தது.

சாரதிக்கு முன்கூட்டியே சொல்லி வைத்திருந்தபடி ஜீப் சென்றதில் நந்தகோபாலின் வைத்தியசாலைக் கட்டிடத்திற்குள் ஜீப் புகுந்து ஓய்ந்தது.

வெள்ளை அடிக்கப்பட்ட இருமாடிக் கட்டிடம். வெளியே அழகான குரோட்டன் செடிகள். புல் தரை பச்சைப் பசுமையாய் விரிய நடுவே ஒரு சின்ன அழகான தொட்டி. தொட்டியில் துள்ளித்திரியும் மீன்கள். சூழல் ரம்மியமாய், சுத்தமாய் தெரிந்தது.

பின்னால் திரும்பிப் பார்த்து,

"இரண்டு போரினதும் விலங்குகளை கழற்றி விடுங்கள்."

என்றார் குலாம்ஷா. கழற்றப்பட்டது.

"என்ன டாக்டர். ஆச்சரியமாக இருக்கிறதா? இருக்கும். இருக்கும். எவ்வளவு கௌரவமாய் பசுத்தோலோடு நடமாடியவர் நீங்கள். உங்களை விலங்கோடு கொண்டு போனால் கௌரவம் என்னாகும்? அதுதான் விலங்கில் இருந்து விடுதலை. இப்போது கீழே இறங்குங்கள்."

சொல்லிவிட்டு முன்னால் இருந்து குதித்து இறங்கி பின்புறமாய் வந்தார்.

"லால் உன் குள்ளநரித்தனத்திற்கு ஏதாவது வேலை கொடுத்தாய் என்று வை. ஆ...சொல்லக்கூடாது. வைத்துப்பார். பின்னர் தெரியும்."

புன்னகைத்தார். "உள்ளே போகலாமா டாக்டர். லாலும் கூடவே வரட்டும்."

பொலிஸ் ஜீப்பின் பின்புறம் இருந்தது நந்தகோபால் இறங்கிவர, ஆச்சரியமாய் விழி விரித்துப் பார்த்தான் வாட்ச்மேன். ஆச்சரியத்தோடு சல்யூட் ஒன்றை வழங்கி கண்ணாடிக் கதவு திறந்துவிட, அலட்சியம் செய்து நந்தகோபால் உள்ளே போனார்.

தினசரி பொலிஷ் செய்யப்பட்ட தரையில் முகம் பார்த்து தலை சீவலாம் போல் இருந்தது.

உள்ளே வரவேற்பாளப் பெண் வாளிப்பாய் இருந்தாள். மார்பைக் காட்டுவதற்கு என்றே ஆழமாய் வெட்டிய ரவிக்கை அணிந்திருப்பாள் என்று தோன்றியது.

"குட் ஈவினிங் சேர்" என்றாள் நளினமாய் மார்பு நிமிர்த்தி எழுந்து.

குட்ஈவினிங் சொல்லாமல் நந்தகோபால் இயந்திரம் போல் நடக்க, முகத்தில் அடர்த்தியாக ஆச்சரியம் காட்டி அமர்ந்தாள்.

"என்ன டாக்டர் அழகான பெண். குட்ஈவினிங் சொல்கிறாள். பதிலுக்கு சொல்லாமல் வருகிறீர்களே."

குலாம்ஷா கேலியாய் சொல்ல, நந்தகோபால் தன் பிரத்தியேக அறைக் கதவில் கோபத்தை செலுத்தி இடிப்பது போல் தள்ளி கதவு திறந்தார். லாலும் உள்ளே போக, கூட வந்த பொலிசாரை வெளியே நிற்கும்மாறு சைகைகாட்டி உள்ளே போனார் குலாம்ஷா.

பரந்த பெரிய மேசை. வெள்ளை விரிப்பு போர்த்தப்பட்டு, அதன் மேலே வெள்ளை நிறத்தில் இரண்டு நவீன தொலைபேசிகள். வெள்ளை நிறத்தில் இண்டர்கொம். சில மருத்துவ உபகரணங்கள். சுழலும் நாற்காலி. இரண்டு சோபாக்கள். அவையும் தூய வெள்ளையாய் இருக்க, தரையில் மட்டும் சிவப்பாய் விரிப்பு போடப்பட்டிருந்தது. ஜன்னல் திரைகளும் வெள்ளையாய். "அழகான பசுத்தோல்" குலாம்ஷா மனதில் நினைத்தார்.

ஷா சென்று ஏ.சியை திருக மெல்லிய சப்தத்தோடு அது தன் பணியை ஆரம்பித்தது.

"இருங்கள் டாக்டர். பிளீஸ் சிட்டவுன். லால் நீயும்தான்."

சோபாவில் இருந்தார்கள். குலாம்ஷா இருக்கவில்லை. காற்சட்டைப் பொக்கற்றில் இருந்து சிகரட் பெட்டி வெளியே எடுத்து பிரித்து நீட்டினார். நந்தகோபால் கை உயர்த்தி வேண்டாம் என்று மறுக்க, லால் ஒரு சிகரெட் எடுத்து,

"தாங்ஸ்"

குலாம்ஷா சிகரெட் உதட்டில் பொருத்தி, லைட்டர் எடுத்து லாலுக்கு பற்றவைத்து தானும் தீ வைத்து, புகையை உள்ளே இழுத்து,

"இப்போது நாம் ஆறுதலாக, அமைதியாக, ஆனால் உண்மையாக சில விசயங்களைப் பேசலாம்." என்றார் புகையை வெளியே விட்டபடி.

புரியாமல் இருவரும் பார்க்க, வெள்ளையாய் இருந்த மாபிள் ஆஸ்ரேயில் சாம்பல் தட்டி, கட்டை விரலால் மீசையை வருடிக்கொடுத்து,

"என்ன பேசுவது. எதைப் பேசுவது என்று யோசிக்கிறீர்களா டாக்டர். யோசிக்கிறாயா லால்?"

பதில் சொல்லாமல் அவர் முகம் பார்த்தார்கள்.

"எனக்குத் தெரியும் நீங்கள் இரண்டு பேரும் பொம்மைகள். ஆட்டுவிக்க ஆடுகிறீர்கள். பொம்மைகளுக்குள் போட்டிகள். யாரை யார் வெல்லுவது என்று போட்டி. வைத்திலிங்கமாய் நடித்தானே தனபால் அவனும் கூட பொம்மைதான்."

இருவரது முகங்களிலும் சந்தேகம் கலந்த பயம் ஒரே நேரத்தில் உற்பத்தியாக குலாம்ஷா அதை மனதில் குறித்துக்கொண்டார்.

"நானும் கூடப் பொம்மைதான்."

சொல்லி, நிறுத்தி, சிகரெட் புகையை ஆர்வமாய் உள்ளே இழுத்து, ரசித்து வெளியேற்ற ஏ.சி. அறையின் இறுக்கத்தில் சின்னப் புகை மண்டலம் தெரிந்தது. நந்தகோபாலின் மனதிலும், லாலின் மனதிலும் குழப்பம் மையம் கொண்டது.

"உங்களையும் என்னையும் ஆட்டுவிக்கும் அந்த வசதியான கை இப்போது எங்களுக்குள் போட்டி வேண்டாம் என்கிறது. காரணம் மிக முக்கியமானது."

ஒன்றுமே புரியவில்லை. இருவர் மனதிலும் மையம் கொண்ட குழப்பம் முகங்களில் வந்து அமர்ந்தது.

லால்தான் முதலில் வாய்திறந்தான்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் இன்ஸ்பெக்டர்?"

"எப்படி கூப்பிட்டாய்?"

"இன்ஸ்பெக்டர்..."

"நோ. வேண்டாம். அந்த இன்ஸ்பெக்டர் வேசம் எல்லாம் வெளியே. யெஸ். டாக்டர். நீங்கள் தனபாலை வைத்திலிங்கம் ஆக்கினீர்கள். எங்களை இயக்கும் அந்தக்கை என்னை குலாம்ஷாவாக்கிவிட்டது."

இருவரும் அதிர்ந்து "என்ன" என்றனர் ஒரே குரலில். சோபாவில் நிமிர்ந்து அமர்ந்து வியப்பும் குழப்பமுமாய் பார்த்தனர். நந்தகோபால் குரலில் சந்தேகம் கலந்து,

"நீங்கள் சொல்வது?"

"யாவும் உண்மை."

"அதாவது,"

"நமக்கெல்லாம் தலைவன் ஒருவரே என்கிறேன். அவரே என்னை குலாம்ஷா வாக்கினார் என்கிறேன். சந்தேகமா? வன்மினிட் டாக்டர்."

சொல்லிவிட்டு சென்று அறைக்கதவை உள்ளே தாளிட்டார்.

அறையைச்சுற்றி விழிகள் வீசி அலசி விட்டு, காற்சட்டைப் பொக்கற்றுக்குள் கையை விட்டார்.

பொக்கற்றுக்குள் இருந்து கையடக்கமான ரேப் ரெக்கோடர் வெளியே எடுத்தார்.

இருவரும் புதிராய் பார்க்க, அவர்களைப் பார்த்து சிரித்தார் குலாம்ஷா.

"இப்போது இந்த ரேப் ரெக்கொடர் பேசும். நான் யார் என்ற கதை சொல்லும்.

■

ஐந்து நட்சத்திர ஹோட்டல் நிஜாமின் அட்டகாசமான உயரத்தில், அழகான வடிவத்தில் கம்பீரம் காட்டியது.

உள்ளே விடுதியில் மெல்லிய வெளிச்சத்தில் மேலைத்தேச இசை தவழ்ந்து கொண்டிருந்தது.

சின்னச் சின்ன மேசைகள். சிவப்பு விரிப்புக்கள். அதன் மேலே உயர்ரக மதுபான ரகங்கள். சுகமாய் லயித்து உறிஞ்சும் உதடுகள். இசையின் கிறக்கத்தில் மெய்மறந்து, பின் தம்மையும் மறந்து போன ஜோடிகள். மேசைக்கு மேசை சென்று சேவைக்கு என்றே பிறப்பெடுத்தது போல வலியப் புன்னகைத்து, தேவை அறிந்து பரிமாறும் வெள்ளை உடையின் இடைப்பகுதியில் சிவப்பு கோடுகள் போட்ட பட்டி அணிந்த சர்வர்கள். அவன் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு ரசித்துக் கொண்டு, கிளாஸின் மெல்லிய விளிம்பில் உதடு பொருத்தி ஸ்காட்ச் விஸ்கியை சுவைத்துக்கொண்டு இருந்தான்.

அவன் றொபேட் ஜேம்ஸ் பீரிஸ். வெள்ளைத் தோல். வசீகர தோற்றம். தினசரி சவர உபயத்தில் பளபளவென்று தெரியும் முகம்.

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் வெளிநாட்டுக்காரன் என்பதை அவனது வெள்ளைத் தோலும், பிறவுண் முடியும் பளிச்சென்று சொல்லிவிடும்.

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் இப்போது காத்திருப்பது மிஸ் கரோலினுக்காக. 19 வயதுச் சொர்க்கம். ஒருமுறை பார்த்தவர்கள் மறுமுறை திரும்பிப்பார்க்காவிட்டால் அவர்கள் ரசிப்புத்தன்மையில் ஏதோ கோளாறு என்று அர்த்தம். உணர்ச்சி நரம்புகளில் ஏதோ தவறு நடந்திருக்கலாம் என்பது மற்றொரு அர்த்தம்.

மெல்லிய வெளிச்சத்தின் இடையே விடுதிக்கதவை பீரிஸ் அடிக்கடி பார்த்துக் கொண்டான். பின் மணிக்கட்டு திருப்பி மணிபார்த்தான்.

அருகே யாரோ நிற்பதுபோல் நிழல் அசைய பீரிஸ் முகம் திருப்பிப் பார்த்தான்.

நிற்பது பெண் என்று தெரிந்து சின்னதாய் வியந்தான். பின் ஆழ்ந்து பார்த்தபோது மாபெரிதாய் வியந்தான்.

அவன் காத்திருக்கும் கரோலினை தூக்கிச் சாப்பிடும் பேரழகியாகி இருந்தாள் வந்து நின்றவள்.

"நீங்கள் தானே மிஸ்டர் றொபேட் ஜேம்ஸ் பீரிஸ்?"

இசை மீட்டுவது போல உதடுகள் வார்த்தைகளை சிந்தின.

வியப்பு மாறாமல்,

"நூறுவீதம் உண்மை."

"நான் இங்கே அமரலாமா?" அவள் கேட்க,

"தாராளமாய்" என்றான் தன்னை இழந்த நிலையில்.

அமர்ந்தாள். செண்ட் வாசனை சுகமாய் இருந்தது. எதிர்பாராத சந்திப்பு. அழகுகள் தந்த பிரமிப்பால் பீரிஸ் மனதுகள் பதட்டமாய் உணர்ந்தான். "யார் இவள். என்னை எப்படி இவளுக்கு தெரிந்தது. என் பெயர் எப்படி இவளுக்கு தெரியும்" என்று பல கேள்விகளும் உள்ளே விரிந்தன.

அவள் சிரித்தாள். மின்னல் ஒன்று கண்டது போல் உணர்ந்தான். உள்ளே விரிந்த கேள்விகளை விட அவள் சமீபம் தந்த கிறக்கம் முன்னால் எழுந்தது.

நாவால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான்.

"உன்.....உங்கள் பெயர்"

அவன் கேட்க, அவள் அழகான பூவாய் இதழ் மலர்த்திக்காட்டினாள். பின்னர் பெயர் சொன்னாள்.

"ரம்யா"

■

டி.ஐ.ஜி.டெலிபோனில் போனில் பேசியவன் அவர் தங்கையின் உயிருக்கு ஆபத்து என்று அடித்துச் சொன்னான்.

"எங்கிருந்து பேசுகிறாய்?"

என்று கேட்க,

"தொலைபேசிக்கு பக்கத்தில் இருந்து"

என்று சொல்லிவிட்டு, சிரித்துவிட்டு தொடர்பு நிறுத்தினான்.

டி.ஐ.ஜி. கோபமாய், கவலையாய் அலுவலக அறையின் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருக்க, அவரது மிக இரகசியமான இலக்க தொலைபேசி சிணுங்கியது.

எடுத்து காதில் பொருத்தி,

"ஹலோ"

"இன்ஸ்பெக்டர் அரவிந்த் ஹியர்."

"சொல்லுங்கள்"

"உங்கள் தங்கை மீட்கப்பட்டுவிட்டார்."

சந்தோசமாய் இருந்தது. காக்கிச் சட்டைக்குள் மறைந்திருந்த பாசம் உள்ளே ஊற்றெடுத்து பாய்ந்தது.

"தாங்யூ அரவிந்த். குலாம்ஷா எங்கே?"

"ஒப்பிரேசன் நம்பர் 2இல் இருக்கிறார் டி.ஐ.ஜி."

"தொடர்பு கொண்டால் கிடைக்கவேயில்லையே"

"நான் நேரில் சென்று சொல்லட்டுமா சேர்."

"செய்யுங்கள்."

"சேர் இன்னொரு செய்தி."

"என்ன?"

"ஆஸ்பத்திரியிலிருந்த..."

தயங்கினார் இன்ஸ்பெக்டர்.

"ஆஸ்பத்திரியிலிருந்த..?"

டி.ஐ.ஜி கேட்க, அரவிந்த் தடுமாற்றமான குரலில்,

"ரம்யாவைக் காணவில்லை டி.ஐ.ஜி."

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். சிவகணேஷ்
வயது: 21
முகவரி: FRISCHUTZ GASSE. 14, 8004, ZURICH, SWITZER LAND.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், பத்திரிகை வாசித்தல், ரி.வி. பார்த்தல்.



பெயர்: ஆர். செல்வராஜ்
வயது: 25
முகவரி: இல.27, ஸ்ரேசன் வீதி, கொட்டகலை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை மற்றும் வானொலி, பத்திரிகைகளுக்கு எழுதுதல்.



பெயர்: ஜஃபர் முபினா
வயது: 17
முகவரி: 150H 13 B, வீ.சி. றோட், பெரிய நீலாவணை-02, மருதமுனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: எம். ஜிப்ரி
வயது: 26
முகவரி: 100, பழைய வீதி, மாளிகாஹேன, பேருவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல், ஓவியம் வரைதல், ஆக்கங்கள் எழுதுதல், உதைபந்து விளையாடுதல்.

பெயர்: மு. ராஜேந்திரன்
வயது: 27
முகவரி: கந்தப்பளை டிவிசன், கந்தப்பளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கரப்பந்தாட்டம் விளையாடுதல்.

பெயர்: நஜிமுன் நிஸா ஹசன்
வயது: 17
முகவரி: 860, மக்கள் வீதி, பாலையூற்று, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கைப்பணிப் பொருட்கள் செய்தல், அழகான படங்கள் சேகரித்தல்.

பெயர்: ரிஷ்கான்
வயது: 17
முகவரி: 65/11, சாந்த ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ், கொழும்பு-14.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: பாலன் ரமணி
வயது: 22
முகவரி: இல. 259, அன்புவழிபுரம், திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-5.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# உள்ளதும் இழந்தேனே!

"என்ன பிள்ள கன நாளாய் அந்தப் பக்கம் காணல்ல... இப்ப தாயம் விளையாடவும் வாறதில்ல." என்றவாறு பக்கத்து வீட்டு அக்கா வேலிக்குள்ளால் புகுந்து கொண்டு வந்தாள்.

அந்த வீட்டுக்குப் புதிசாகக் குடிவந்ததில் இருந்து ஜமுனா முதன் முதல் பழக்கம் பிடித்தது அந்தப் பக்கத்து வீட்டு அக்காவைத் தான். அங்கு செல்ல ஏற்படுத்திக் கொண்ட வழியே வேலியில் இருந்த ஓட்டை. மதியம் சாப்பிட்ட பின்னர் அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் எல்லாம் கூடுமிடம் தான் அவர்கள் வீட்டு முற்றத்தில் இருக்கும் பாரிய கறுத்தக் கொழும்பான் மாமர நிழல். வெயில் விழாமல் நிழல் தரும் மரம் அது. அதன் அடியில் அரட்டை அடிப்பதும் தாயம் விளையாடுவதும் தான் அங்கு கூடும் பெண்களின் வேலை.

சில நாட்களாக ஜமுனா செல்லாததிலோ 'என்னவோ ஏதோ' என்று விசாரிக்க வந்து விட்டா பக்கத்து வீட்டு அக்கா. அவவுக்கு மனதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. அதையும் தீர்த்துக்கொள்ள வேண்டுமே!

"வாங்குக்கா வாங்க இருங்க" என்றாள் ஜமுனா. வாயெல்லாம் பல்லாக 'இருங்க இவருக்கு தேத்தண்ணி போடுறன் போட்டுக்கொடுத்திட்டு வாறன். எங்க நேரம். நீங்களும் பாக்கிறீங்களே வீட்டு வேலையும் பிள்ளைகளின் வேலையும் செய்யத்தான் நேரம் சரியாக இருக்கிறது. களைப்பில மத்தியானம் கொஞ்சம் படுக்கிறநான்..." என்று கதைத்துக்கொண்டே தேனீர் ஊற்றினாள்.

பக்கத்து வீட்டு அக்கா பின் விறாந்தையில் பாயில் அமர்ந்து இருந்தாள். குசினிக்குள் இருந்தபடியே பேச இது வசதியாக இருந்தது.

"காஞ்சனா! காயத்திரி! இஞ்ச வாங்க ரீ குடியுங்க" என்று சத்தம் போட்டவள், "இந்தாங்கக்கா குடியுங்க!" என்று கூறியபடி ரீயுடன் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். பிள்ளைகள் இரண்டும் ஓடிவந்து ரீ குடித்தனர்.

"அப்பாவுக்கும் எடுத்துக்கொண்டு கொடு. காஞ்சனா அப்பாவுக்கு ஊத்தி வைத்திருக்கிறேன்." என்று அவள் கூறினாள்.

கணவன் குடிக்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். கடந்த ஆறுமாத காலமாக அவளும் சாப்பாடு எடுத்து வைக்கிறாள். அவன் சாப்பிடுவதே இல்லை. தேனீர் ஊற்றிக் கொடுக்கிறாள். அவன் குடிப்பதே இல்லை. அப்படியே ஆறிப் போய் இருக்கும். என்றாலும் என்றாவது ஒருநாள் அவன் மனம் மாறும் என்றொரு நப்பாசை. குடித்தாலும் இல்லாவிட்டாலும் அது தன் கடமை. அதிலிருந்து மாறுபட்டு அது வேறு ஏதும் விபரீதங்களை ஏற்படுத்தக்கூடாது என்றொரு எண்ணம் வேறு.

காஞ்சனா ஆறுவயதுக் குழந்தை. தகப்பனுக்குத் தேனீரை எடுத்துச் சென்றாள். முன்னால் பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றிய பின்னர் களைத்துப் போய் இருந்தான் தேவன்.

"இந்தாங்கப்பா தேத்தண்ணி."

"இல்ல மகள் எனக்கு வேணாம் நான் தண்ணீர் குடிச்சிட்டன்."

"தேத்தண்ணி குடிக்கலையே இதக் குடியுங்க..." என்று குழந்தை அடம் பிடித்தது.

"வேணாம் மகள். கொம்மா நஞ்சு போட்டாலும் போடுவாள். கொண்டு போய் கொம்மாவிடமே கொடு." என்றான் தேவன்.

பின் கட்டில் வேறு யாருடனோ மனைவி பேசிக் கொண்டிருக்கிறாள் என்பதை அறியாது, குழந்தை இதைப் போய்ச் சொல்லும் என்பதையும் உணராது கூறிவிட்டு அமைதியாக இருந்தான்.

"ஏனம்மா அப்பா இப்படிச் செல்லுறார்?" என்றாள் காஞ்சனா, தேனீருடன் திரும்பி வந்து.

"என்னவாம்?" என்றாள் ஜமுனா, குழந்தை என்ன சொல்லும் என்று அறியாது.

"நீங்க நஞ்சு போட்டுக் கொடுப்பீங்களாம் வேணாம் என்றவர்" என்றாள் காஞ்சனா.

பக்கத்து வீட்டு அக்காவைப் பார்த்த ஜமுனாவுக்கு முகம் வெளிறிவிட்டது.

"நீ கொண்டு போய் வைச்சிட்டு விளையாடு மகள் போ..." என்றாள்.

"என்ன பிள்ள குடும்பத்தில ஏதும் பிரச்சனையா? அதுதான் இப்ப அடிக்கடி சண்டை சச்சரவையும் ஏச்சுப் பேச்சையும் காணல்ல. சில நாள் பீங்கான் கோப்பைகளும் உடைஞ்சு சத்தம் கேட்டது. இப்ப ஒரே அமைதி." என்றாள்.

வீட்டிலே சண்டை சச்சரவு இருந்தால் தான் குடும்பம் ஒழுங்காக நடைபெறுகிறது என்று எண்ணும்- எதிர்பார்க்கும் பண்பு எப்படிப்பட்டது! அடிக்கிற கைதான் அணைக்கும் என்ற தத்துவம் தந்த பாடமோ?

கேட்டது தான் தாமதம் அக்காவின் தோளில் தலையை வைத்து விசும்பத் தொடங்கினாள் ஜமுனா.

"என்ன பிள்ள இது சின்னப் பிள்ளை மாதிரி?" என்று தடவிக் கொடுத்தாள்.

"இல்லக்கா உங்களிட்டச் சொன்னா என்ன? இவர் என்னோட ஆறு மாதமாகக் குடும்பமாக இருக்கல்ல. வீட்டு வேலைகள் தேவைகள் எல்லாம் கவனிக்கிறார். பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டு போய்வாறார். இரவில மாமி வீட்டுக்குப் போயிடுவார்?"

"என்ன சொல்லுறாய்? எப்ப பார்த்தாலும் இஞ்ச தானே நிற்கிறார்."

"எல்லாரும் பார்க்க அப்படித்தான். இரவு ஒன்பது பத்து மணிக்குப் போய் விடுவார். விடியவும் ஐந்து மணிக்கெல்லாம் வந்திடுவார். அப்ப எப்பிடி மற்றவங்களுக்குத் தெரியும். மாமியும் அவரைப் புத்தி சொல்லி அனுப்புறாவும் இல்ல...."

"அப்பிடி என்ன பிரச்சனை குடும்பத்திற்கு?"

"ஒருத்தருக்கும் தெரியாதக்கா. சத்தியமா யாரிட்டையும் சொல்லுறதில்லை எண்டாச் சொல்லுறன். அதுதான் நான் அங்கயும் வாறல்ல. வந்து கேட்டால் சொல்ல வேண்டிவருமே!"

"நான் ஏன் பிள்ள சொல்லுறன்? உனக்கு விருப்பம் எண்டா சொல்லு இல்லாட்டி விடு..."

"இல்லக்கா எல்லாருக்கும் தெரிஞ்சாப் பிறகு இந்த மனிசன் என்னக் கொண்டு போடும்....."

"நான் ஒருத்தரிட்டயும் சொல்ல மாட்டன். நீ பயமில்லாமல் சொல்லு" என்றாள். அறிய வேண்டும் என்னும் ஆர்வம் இன்னும் மேலிட்டது.

"உங்களுக்குத் தெரியுமோ என்னவோ இவருடைய மச்சாள் சரோவை."

"ரீச்சர் சரோ,தானே தெரியாதா பின்ன?"

"ஆ.... அந்தச் சரோ தான். மூன்று வருஷத்துக்கு முந்தி அவளுடைய இளம் கணவன் வன்செயலில் மாண்டு போனானே, அதன் பிறகு இவள் அந்தக் கைக் குழந்தையோட தனியத் தானே இருந்து வாறாள். புருசனார் அவளுடைய வீடு கட்ட பலரிடமும் கடன் பட்டிருக்கிறார். காசு வைச்சுத்தா பின்ன நாங்களும் இந்த வீட்டைக் கட்டினநாங்க.... எல்லோரும் கடன் கட்டைப் பட்டுக்கட்டுறது தான். பின்னர் கொடுக்கிறதுதான்...

"டிப்பாட்மென்டில கடன் எடுத்துக் கொடுப்பம் என்று கேட்டு இருந்தவராம் அப்பதானே செத்தவர். வீணாகப் பழி சொல்லக் கூடாது சரோ புருஷனை இழந்தாலும் நல்லா ஒழுக்கமாகத்தான் இருந்தவள். கடன் கஷ்டம் வந்ததும் 'அத்தான் எனக்கு உதவி செய்யுங்க' எண்டு இவரிட்ட வந்தாள்.

"இல்ல எண்டு சொல்ல ஏலாம இவரும் கொஞ்சம் காசு கொடுத்தவர். ஆனா அவளுடைய கடனுக்கு அது எங்கே காணப்போகுதென்று 'பேங்'ல கடன் எடுத்துத் தாறன் என்றவர். அதுக்கு அடிக்கடி வந்து போய் திரிந்தாள். இவரும் போய் வந்து இருக்கிறார்."

"இவருக்கு ஆம்பிளப் பிள்ளை இல்லை எண்டு கவலை தானே! அவன் 'ஆனந்'தை தூக்கிக் கொஞ்சிக்கொண்டு இருப்பார். அவன் சின்னப் பிள்ளை எனக்கும் விருப்பம்தான். அவளுக்கும் வீட்டில் உதவி இல்லை எண்டு பக்கத்து வீட்டிலதான் விட்டுத்து போறவள். இவர் தான் என்னிட்டம் கேட்டார். "ஆனந்தை பள்ளிக்குப் போகும் போது இஞ்ச கொண்டு விட்டுத்து திரும்பும் போது கூட்டிச் செல்லச் சொல்லுவோமா?' என்று."

"இவருக்கு ஆம்பிளப் பிள்ளை இல்லை என்ற கவலையும் தீரும். அவளுக்கும் உதவியாகவும் இருக்கும் எண்டு நான் மடச்சி 'ஓம்' என்றநான்.

"பொடியனை காலையில் பள்ளிக்குப் போகும் போது கொண்டு வந்து விட்டால் பள்ளி முடிந்து போகும் போது, இரண்டு மணியளவில் வந்து கூட்டிப் போவாள். அதனிடையில் அவனுக்கு ராஜோபசாரம் தான் நடந்தது. குழந்தையின் விருப்பத்தில் செய்கிறார் என்று விட்டிட்டன். தன்னுடைய பிள்ளைகளுக்குச் செய்யாத கடமைகளை எல்லாம் அவனுக்குச் செய்தார் என்றால் பாருங்களேன்.

"சில வேளையில அவள் வாற நேரம் பொடியன் சாப்பிட்டு விட்டுத் தூங்கி விடுவான். 'பிறகு நான் கொண்டு வந்து விடுறன்' என்று கூறுவார். சாப்பிட்ட உடனே கடைக்குப் போறவர் ஆனந்துக்காக காத்திருந்து அவன் எழும்பியதும் வீட்டுக்குக் கொண்டு விட்டுத்துப் போகத் தொடங்கினார். பிறகு எத்தனை மணிக்குக் கடைக்குப் போறார், பூட்டித்து வாறார் என்றெல்லாம் தெரியாது.

"காலையில் மார்க்கற் போனால் அவளுக்கு ஒரு பேக். பிள்ளைகளுக்கு உடுப்பெடுக்கப் போனால் அவனுக்கு ஒரு சேட். பின்னேரம் வரும்போது வீட்டுக்கு ஏதும் வாங்கி வந்தால் அவர்களுக்கும் ஒரு பார்சல் கொண்டு போய் கொடுத்து விட்டு வந்து சொல்லுவார், ஆனா ஒன்றும் எனக்குத் தெரியாமல் எதுவும் செய்ய வில்லை. நான் தான் பேச்சி. வெளுத்ததெல்லாம் பால் எண்டுத்து இருந்திட்டன்."

"ஏன் என்ன நடந்தது.." என்றாள். ஆர்வமாக.

"ஒன்றுமில்லை..அவருக்கு சரோவின் எண்ணம். அவள் வீட்டுக்கு அடிக்கடி ஏதாவது காரணத்துக்காகப் போகவேண்டும் என்ற நினைப்பு எப்போதும் மண்டைக்குள் வண்டு புகுந்தது போல் துருத்திக் கொண்டே இருந்தது போல. அடிக்கடி என்னிடமும் அவளைப்பற்றி கதைக்கத் தொடங்கினார்..."

"நானும் இதைப் பெரிசாக எடுக்கல்ல. ஆனால் ஊராக்கள் ஒன்றிரெண்டாக கதைக்கத் தொடங்கத் தான் நானும் அவரிடம் கேட்க ஆரம்பித்தேன். 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கொடுத்தானாம் ஆண்டி' என்ற கதையாகப் போயிற்று.

"ஏன் அடிக்கடி அங்க போய் வாறீங்க. தேவை ஏதும் என்றால் சரோ வருவாள் தானே. தேவையான உதவியைச் செய்யலாம். போறதை விட்டிடுங்க..." என்றேன்.

"ஏண்டி உனக்கும் என்னில கரவு வந்துவிட்டதா? நான் போய் வந்தா என்ன?" என்றார்.

"போய் வந்தா என்ன என்றா கேட்கிறீங்க... நீங்க அவளை வைச்சு இருக்கிறதாக ஊராக்கள் பேசுறாங்க." என்றேன்.

"சரி வைச்சு இருக்கிறாங்க என்று தானே பேசுறாங்க? அப்படியே வைச்சுத்துப் போறன். அவளுக்கென்ன விதவையாக இருக்கிற வயதா? வேறொரு கல்யாணம் செய்து வைக்க வேணும் எண்டு நினைச்ச நான். நீ இப்படிச் சொன்ன மட்டும் இனி நான் தான் அவளை வைச்சு இருக்கப் போறன்' என்றார்.

"அதற்குப் பிறகு எதற்கெடுத்தாலும் என்னோட சண்டையும் அடியும் தான். சாப்பிடக்குள்ள பேசினால் முதல் சும்மா கேட்டுத்து இருந்தார். பிறகு சாப்பாட்டு பிளேட்டையே எறிந்து உடைத்துவிட்டு எழும்பிச் சென்றுவிடுவார்."

"கடைசியாக என்னை அடிச்சி ஆக்கினைப்படுத்தி அவளை வைச்சிருக்க சம்மதம் கேட்டுவிட்டார். அதில் பகிடி என்னவென்றால் ஒரு நாள் என்னையும் கூட்டிச் சென்று இந்த வீட்டில ஒரு அறையில அவளையும் மகனையும் வந்து இருக்கும்படி என்னையே கேட்க வைத்தது தான்."

அவள் சிரித்துக்கொண்டே தேனீர் தந்தாள் எங்கள் இருவருக்கும்- நான் இதைக் கேட்ட போது, எனக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

"எத்தனை பேர் இரண்டு கல்யாணம் முடிக்கல்லயா? அதுவும் அக்காவையும் தங்கையையும் முடிச்சு ஒரே வீட்டில் வைச்சு குடும்பம் நடத்தல்லயா? இவளுக்கு என்னகுறை? இனியார் இவளை மணம் முடிக்கப் போறார்கள்? நாமே கூட்டி வைத்துக் கொண்டால் என்ன? என்று எனக்கு மூளைச் சலவை செய்து கொண்டிருந்த போதுதான் ஒரு நாள் அம்மா வீட்டுக்கு வந்தா.

"நான் எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லி அழுதேன்.

"அம்மா எனக்குத் தான் பேசினா. இத்தனை நாளும் இதை இப்படியே வளர விட்டு விட்டாயே? உன்னைப் போல் பைத்தியம் யார் இருக்கா? ஒரு பெண் தன் கணவனை "சாகக் கொடுத்தாலும் போகக் கொடுக்க மாட்டாள்" என்று சொல்லுவாங்க. நீங்க ஆரம்பத்தில பாவம் பார்த்தது தான் விட்ட பிழை. இதெல்லாம் காதோடு காதாகச் செய்யிற வேலை. நான் அடுத்த கிழமை இதற்குச் செய்யிறன் வேலை..." என்றா அம்மா.

"என்னம்மா செய்யப் போறியள்?" என்றேன்.

"செய்யிறதைச் செய்யிறன் இனி எண்டாலும் நான் சொல்லுறபடி செய்" என்றா அம்மா.

"அடுத்த கிழமை அம்மா இவர் அவளை மறக்கிறதுக்கு மருந்து ஓதிக் கொண்டு வந்து தந்தா, சாப்பாட்டிலயும் தேத்தண்ணியிலயும் போட்டுக் கொடுக்கும் படி. நானும் போட்டுக் கொடுத்தன். அம்மா வைத்தியரிடம் போய் வந்ததை இவரிடம் யாரோ சொல்லி இருக்கிறார்கள். இது எனக்குத் தெரியாது. தெரியாமல் நானும் மருந்தப் போட்டுக் கொடுத்திட்டன். தேத்தண்ணியக் குடிச்சுத்தார் என்று இருக்க அவர் ஊத்திப் போட்டு இருந்திருக்கிறார். சாப்பாட்டைக் கொடுக்க என்னையும் சாப்பிடச் சொல்லிக் கூப்பிட்டார். நான் சாப்பிட்டு விட்டன் என்று கூற நான் சாப்பிட்ட பிறகுதானே நீ சாப்பிடுற நீ? இண்டைக்கு என்னோடு சாப்பிட வேண்டும் என்றார் நானும் மறுத்துவிட்டேன்."

"நீ மருந்து போட்டுத் தந்து நான் சாக வேணும், இல்லாட்டி பைத்தியமாக திரிய வேணும் எண்ட எண்ணமா? உனக்குத் தெரியாதா வாத்தி ஒருவன் மருந்து போட்டு பைத்தியமாகி ரோட்டில ஓடித்திரிஞ்சது? நானும் அப்படித் திரிய வேண்டும் என்று எண்ணிய நீ எப்படிப்பட்ட ராட்சசி. இப்படிபட்ட நீ நஞ்சும் போட்டு என்னைக் கொல்லுவாய். உனக்கு நான் கணவனாக இருக்க மாட்டன். அவளை நான் மறக்க வேணுமெண்டா நீ தகுந்தபடி சொல்லி இருக்கலாம். இனி எனக்கு நீயும் வேண்டாம். அவளும் வேண்டாம். உனது புருஷனும் செத்திட்டான் என்று எண்ணிக் கொள். இனி நான் உண்ட பிள்ளைகளுக்கு அப்பன் மட்டும்தான்." என்று சொல்லி சொல்லி அடிச்சு கோப்பைகளை ஆறுமாதத்திற்கு முன்பு உடைத்து பிடிச்சது தான் கடைசிச் சண்டை.

அதோட அவருடைய படுக்கை தாய் வீட்டில தான். பேசுவது கதைப்பது எல்லாம் பிள்ளைகளோடத்தான். எல்லாம் செய்வார். வாங்கித்தருவார். எனக்கு ஒரு குறையும் இல்லை, புருஷன் என்றதைத் தவிர. நாங்க குடும்பமாக இருந்து ஆறுமாதத்துக்கு மேலே. அவருக்கு இருந்த ஆம்பிளப் பிள்ளை ஆசையும் போய்விட்டது. நான் என்ன செய்யிறது என்று தெரியாமத் தவிச்சுக்கிட்டிருக்கேன்.

"எண்ட புருஷன் எனக்கு மட்டும்தான் இருக்க வேண்டும் என்று பாதுகாக்கப் போய் இருந்ததையும் இழந்து நிற்கிறேன். சரோ புருஷனை இழந்தவள். நினைச்சால் வேறு கல்யாணம் முடிக்கலாம். ஆனால் நான்.....பாத்தீங்களா அக்கா எண்ட நிலமையை?

"நான் பாவி இப்ப புருஷன் இருந்தும் இல்லாமல் இருக்கிறன். சில புருசன்மார் காலத்துக்குக் காலம் இப்படிப் பிழை செய்யிறதுதான். அதைப் பொறுத்துக் கொண்டால் புருஷன் புருசனாகவே இருப்பான். இல்லாட்டி புருஷன் சண்டாளனாக மாறிவிடுவான் என்பதை இப்போது புரிந்துவிட்டேன். காலமும் நேரமும் வர அவர்களாகவே திருந்தி விடுவார்கள். தங்கள் தவறை உணர்ந்து விடுவார்கள். பெண்களால் அதுவரைக்கும் பொறுக்க முடியாதுதான். பொறுக்க முடியாவிட்டால் எண்ட கெதி தான் எல்லாருக்கும் ஏற்படும்.

"அவருடைய மனம் மாற இறைவனை வேண்டித் தவம் இருக்க மட்டும்தான் என்னால் முடியும். மனம் மாறுவதும் இல்லாததும் இனி இறைவன் செயல் என்று விட்டுவிட்டேன்." என்று கூறி முடித்தாள் ஜமுனா. இருந்த கணவனையும் இழந்த துக்கத்தோடு.

பக்கத்து வீட்டில் இருந்து அழைப்பு வந்தது அக்காவுக்கு.

"நான் வாறன். கவலைப்படாதை. மனதைத் தளரவிடாமல் இரு எல்லாம் சரிவரும்." என்று கூறிவிட்டு எழுந்து சென்றாள்.



**-முகில் வண்ணன்-**

(யாவும் கற்பனை அல்ல)

---

சூழ்நிலைக் கதை

## இன்னொரு பரிமாணம்

ஸ்ரீவரணி வாழையூர்



மழை தொடர்ந்தும் கொட்டிக் கொண்டிருந்தது. என்றுமில்லாதவாறு இந்த வருஷத்து மழை மிக அதிகமாயிருந்தது. குளிரில் கணேசனின் தேகம் வெடவெடத்தது. பூமி மழை நீரை உறுஞ்சி, இயலாமல் இப்போது நீரை தேக்கி வைத்துக்கொள்ள ஆரம்பித்தது.

கணேசன் தன் குடிசையைச் சூழ ஓலையுடன் சேர்த்து மண் அணைக்கத் தொடங்கினான். நீரை உள் வராமல் தடுத்தாலும், உள்ளே நிலத்தால் நீர் ஊறத் தொடங்கியிருந்தது. குடிசையுள் கணேசனின் மனைவி அழகம்மா அடுப்பை மூட்டி விட்டிருந்தாள். ஈர விறகுகள் அதிகமாய் புகையையே தந்து கொண்டிருந்தது. குடிசையுள் புகை நிரம்ப, சீலைத் தொட்டிலுள் கிடந்த ஆறுமாதத்துப் பாலகன் அழத் தொடங்கினான்.

"அழகம்மா, பிள்ளை அழுறான் என்னண்டு பாரு."

எரிச்சல் தாளாமல் அழகம்மா அடுப்பை ஊதிக்கொண்டிருந்தாள். விறகு எரியத் தொடங்கியது.

மழை இன்னும் விட்டபாடில்லை. 'சோ'எனக் கொட்டிக்கொண்டிருந்தது. நிலத்தில் நீர் அதிகரிக்க, நீர் மட்டம் உயரத் தொடங்கியது. நிலத்திலிருந்த பொருட்களெல்லாம் கூரைக்கு இடம் மாறின. அழகம்மா பழைய வாழ்வை நினைத்துப் பார்த்தாள். கனவாய்ப் போன பழைய நிகழ்வுகள்..வசதியான வாழ்க்கை, நேரத்திற்கு உணவு, உழைப்பு கொண்டாட்டங்கள்... ம்ஹூம், எல்லாவற்றிற்கும் இடியாய் வந்திறங்கியது 'பிரச்சினை'. இனவாதமா? பயங்கரவாதமா? புரியவில்லை, ஆனால் ஒன்று புரிந்தது. தாங்கள் தமிழினம் என்பதால், பயங்கரவாதி என விரட்டப்பட்டு அகதியாக்கப்பட்டவர்கள் 'அகதி' என்ற முத்திரையில் இந்த ஊரில், குடிசை போட்டு பிழைப்பு நடாத்த... அடிமேல் அடியாக, இப்போது வெள்ளம். 'பட்ட காலிலே படும்' என்றது போல அகதிகளுக்கு வெள்ளம்.

"அழகம்மா, நான் விதானையார் வீடு வரைக்கும் கொஞ்சம் போய்ட்டு வாறன்" சொல்லிவிட்டு, மண்வெட்டியை ஓரமாய் போட்டுவிட்டு நீருள் இறங்கி நடக்கத் தொடங்கினான். முழங்கால் வரையில் தண்ணீர், வீதியெல்லாம் நீர் மேவிக் கொண்டிருந்தது.

அழகம்மா குழந்தையை நித்திரையாக்கத் தொடங்கினாள். பொழுதுகள் மாறிக் கொண்டிருந்தன. மழை மட்டும் விட்டபாடில்லை. காலையில் போன கணேசன், மாலையாகியும் இன்னும் வரவில்லை. இதுவரையில் அடுப்பில் உலை ஏறவில்லை, ஆனால் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. பிள்ளைக்கு பால் கொடுத்தாயிற்று, பால் சுரக்கும் அவளுக்கு உணவில்லை. வாசலால் எட்டிப்பார்த்தாள். கணேசன் வந்துகொண்டிருந்தான்.

முகத்தில் மலர்ச்சி, கையில் பை, நிரம்ப நனைந்திருந்தான்.

"என்னங்க, இன்னும் சமைக்கல்ல, சாப்பாடும் இல்லை, ஏதாவது வாங்கலாமெண்டா, கையில காசுமில்ல,..." பேசிக் கொண்டு போனவள் அவன் கையில், பைக்குள்ளிருந்த பொருட்களைக் கண்டதும் வியப்பால் விழி விரித்தாள்.

"ஏதுங்க, இவ்வளவு சாமானும்?"

சிரித்தான் கணேசன்

"வெள்ள நிவாரணம் அழகம்மா"

நெடுநாளின் பின் மொத்தமாய் இவ்வளவு பொருட்களைக் கண்டதும் அவர்களுக்கேற்பட்ட சந்தோஷத்தை விபரிக்க முடியாது. அழகம்மா நிறைவாய் சமைக்கத் தொடங்கினாள்.

அவர்கள் குடிசையில் சந்தோஷம் பூத்திருந்தது. இயற்கையாலுருவான வெள்ளத்திற்கு, நிவாரணம். நமக்கு உருவாகிய 'பிரச்சனைக்கு' எப்போது நிவாரணமோ?, அழகம்மா நினைத்துக் கொள்ள, தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த பாலகன் தன் பங்கிற்கும் நிலத்திற்கு நீர் சேர்த்துக்கொண்டிருந்தான்.

(கொஞ்சம் கற்பனை)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை



# அம்மாவுக்கு நன்றி.

என். உதயகுமார்

"உங்களுக்கு எப்படி புரியவைக்கிறதென்று எனக்கு தெரியயில்லையே அம்மா......" சுபாஷிற்கு தன் மனசை எப்படி புரிய வைக்கிறதென்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தான்... "காயத்ரியை நானோ என்னை அவளோ இன்னும் ஒரு நேரம் கூட பார்த்ததில்லை. பேசினதில்லை, பழகினதில்லை, ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுக்கிட்டதில்லை பிறகு எப்படியம்மா நான் அவளைக் கல்யாணம் செய்ய சம்மதிக்கிறது. கல்யாணம் என்கிறது ஆயிரம் காலத்துப்பயிர். இப்படி திடீரென்று ஒருத்தியை முன்னால கொண்டு வந்து நிறுத்தி தாலியைக் கட்டு என்றால் என்னால் எப்படி முடியும் அம்மா..?"

சுபாஷின் தயக்கம் ஏன் என்று இப்போதுதான் திலகவதிக்குப் புரிந்தது.

"காயத்ரி யாரோ இல்லடா. என்னோட சினேகிதியின்ரை மகள். எனக்கு அவளைப் பற்றி நல்லாத் தெரியும். காயத்ரி நல்லவள், படிச்சவள். அழகானவள். அவள் இந்த வீட்டுக்கு மருமகளா வாறது அந்த மகாலக்ஷ்மியே வாறது போலத்தான். அதனால தான் சொல்றன் சுபாஷ்."

திலகவதியும் தன் மகனை எப்படியும் சம்மதிக்க வைத்துவிடவேண்டுமென்ற எண்ணத்தில் விடாது கூறினாள்.

"உங்களுக்கு அவளைப்பற்றி தெரிந்திருந்தால் போதுமா? அவளோடு குடும்பம் நடத்தப் போறது நான் தானே, எனக்கு அவளைப்பிடிக்க வேண்டாமா? என் மனசு அவளை விரும்ப வேண்டாமா?"

சுபாஷின் குரலில் எரிச்சல் இருந்தது. அது இன்னும் அம்மாவிற்கு தன் மனதை புரிந்து கொள்ள முடியவில்லையே என்றது தான்.

"நான் என்ன கூனையோ குருடியையோவா கல்யாணம் செய்துகொள்ள சொல்றன்? காயத்ரியைப் போல அழகி இந்த ஊரிலேயே இல்லையடா. அவளை ஒரு தரம் பார்த்தால் பிறகு இப்படிப் போசமாட்டாய் சுபாஷ்..."

'தன் அம்மா சொல்வது உண்மையாயிருக்குமோ? காயத்ரி நல்ல அழகாயிருப்பாளோ... அம்மாவும் வாதிட்டுக்கொண்டிருக்காமல் சம்மதம் என்று சொல்லி விடலாமா?...'

சுபாஷின் மனம் ஒரு கணம் சலனப் பட்டது. ஆனால் மறுவிநாடியே அதைப் போக்கிக் கொண்டான். 'இப்போ சரி என்று சொன்னால் 'அழகு' என்று சொன்னவுடன் சம்மதித்து விட்டதாக அம்மா கூட என்னை தவறாக நினைக்கக்கூடும். வேறு அழகான பெண்ணை நான் சந்திக்காமலா விடப்போகிறேன்...?'

சுபாஷின் நீண்டநேர மௌனம் திலகவதிக்கு சிறிது நம்பிக்கையைக் கொடுத்தது.

"அப்ப உனக்கு சம்மதம் என்று சொல்லி, பெண் பார்க்க வருகிறோம் என்று சொல்லி அனுப்பவா சுபாஷ்?" எங்கே தான் இன்னும் தாமதித்தால் சுபாஷின் மனம் மாறிவிடுமோ என்று திலகவதி அவசரமாகக் கேட்டாள்.

"அது தான் நான் அப்பவே என்ர முடிவை சொல்லிப் போட்டனே. திரும்பவும் ஏன் என்னைத் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறீர்கள்? இந்தப் பேச்சை இதோட நிற்பாட்டிப்போடுங்கள் அம்மா..."

மேலும் அங்கு நின்றால் இன்னும் பேச்சு வளரும் என்ற எண்ணத்தில் மெல்ல அந்த இடத்திலிருந்து நழுவிக்கொண்டான் சுபாஷ்.

திலகவதிக்கு சுபாஷின் இந்தப் பதில் பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுத்தது. தன் சிநேகிதியின் மகளையே தன் மருமகளாக்கிக் கொள்ள வேண்டுமென்று கற்பனைக் கோட்டை கட்டி வைத்திருந்ததை தன் மகன் உடைத் தெறிந்துவிட்டுப் போவதாகத் தோன்றியது அவளுக்கு.

திலகவதியும் உறுதியானாள். எப்படியும் தன் மகனின் பிடிவாதத்தைப் போக்கி காயத்ரியையே தன் மருமகளாக்க வேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டாள்.

முதற்கட்டமாக சுபாஷுடன் பேசுவதைக் குறைத்துக்கொண்டாள். அவனுடைய தேவைகளுக்கு மட்டுமே அவனுடன் பேசினாள்.

இதனால் சுபாஷின் மனம் மிகவும் வேதனைப்பட ஆரம்பித்தது.

அவன் அறிந்த நாள் முதல் அவன் அவனுடைய அப்பாவை நினைவில்லை. சுபாஷிற்கு மூன்று வயதாய் இருக்கும் போதே அவனது அப்பா இறந்துவிட்டார். அன்று முதல் அவனுக்கு தாயாகவும் தந்தையாகவுமிருந்து வளர்த்தது திலகவதி தான். அவனது தந்தையார் சம்பாதித்து வைத்துவிட்டுப். போனவை அதற்கு அவளுக்கு பெரிதும் உதவியாயிருந்தது. மற்றப் பிள்ளைகளைப் போலத்தான் அவள் சுபாஷையும் எந்தக் குறையும் தெரியாது தான் வளர்த்திருந்தாள். அப்படிப்பட்ட அம்மாவோடு இன்று எந்த ஒரு விஷயத்திற்கும் மறுப்புத் தெரிவிக்காத அவன், இப்போது திருமண விஷயத்தில் மட்டும் அம்மாவின் மனது நோகும்படி நடந்து கொண்டதை நினைக்க சுபாஷிற்கு மனதிற்கு பெரிதும் வேதனையாயிருந்தது.

தன்னை இத்தனை நாளாய் கண்ணாய் வளர்த்து வந்த அம்மாவின் ஆணையை நிறைவேற்றி வைக்காதது தன் தவறோ என அவன் மனம் நினைக்கத் துவங்கியது. தனது கடமையை செய்யத் தவறி விட்டோமோ என யோசிக்க ஆரம்பித்தான் சுபாஷ்.

அதற்கேற்றாற்போல் தொடர்ந்து மூன்று நாளாய் திலகவதியின் மௌனம் வேறு அவனை வாட்டிக்கொண்டிருந்தது.

இறுதியில் திலகவதியின் விருப்பப் படியே காயத்ரியை திருமணம் செய்து கொள்ள சம்மதித்துவிட்டான். ஆனால் பெண் பார்க்கும் அவசியம் ஒன்றுமில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டான் சுபாஷ்.

திலகவதிக்கு அவன் சம்மதித்ததே பெரிய விஷயமாகத் தோன்றியது. சுபாஷின் புகைப்படத்தைக் காட்டி அவள் ஏற்கனவே தன் சினேகிதி வீட்டில் சம்மதம் வாங்கிவிட்டதால் அவள் மளமளவென்று காரியங்களில் இறங்கிவிட்டாள்.. அந்த மாதத்திலேயே நல்ல நாள் பார்த்து திருமணத்தையும் நிச்சயம் செய்துவிட்டாள் திலகவதி.

இது இவ்வாறிருக்க மறுபக்கம் சுபாஷின் மனம் வெளியில் சொல்ல முடியாத ஒரு வேதனையில் தவித்துக் கொண்டிருந்தது.

அம்மாவிடம் சம்மதம் என்று சொல்லி விட்டாலும் காயத்ரி எப்படியிருப்பாள்? கறுப்போ சிவப்போ என்று கூட அவனுக்குத் தெரியாதே...

அதைவிட காயத்ரிக்குத் தன்னைப் பிடித்திருக்க வேணுமே..

உயரத்தில் குறை சொல்ல முடியா விட்டாலும் சுபாஷின் நிறம் சற்றுக் குறைவுதான். முகத்தில், சொரு சொரு என பருக்கள் தோன்றி மறைந்த வடுக்களுடனான கன்னங்கள், மீசை கூட சுபாஷிற்கு சுமார்தான். ஆனால் புருவங்கள் அடர்த்தியாக வில்லைப் போல் வளைந்து அவனது கண்களுக்கு அழகைக் கொடுத்துக் கொண்டிருந்தது. எப்போதும் மேவி இழுத்த கிராப்பு அவனது பெரிய நெற்றியை பளிச்சென்று காட்டும். தன்னைக் 'கமல்ஹாசன்' என்று நினைத்துக் கொள்ளா விட்டாலும் 'விஜயகாந்த்' 'முரளி' போல என்று ஒவ்வொரு தடவையும் கண்ணாடியைப் பார்க்கும் போது சுபாஷின் மனம் நினைத்துக்கொள்வதுண்டு.

ஒருவேளை காயத்ரியின் மனம் தனக்கு வரப்போகும் கணவன் 'கமல்ஹாசனை'ப் போல் இருக்க வேண்டுமென்று நினைத்து வைத்திருந்தால்...

இப்படிப் பலவாறு சுபாஷின் மனம் கற்பனை செய்து புழுங்கிக் கொண்டிருக்கையில் திருமண நாளும் வந்துவிட்டது.

மணமேடையில் தனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த காயத்ரியை தன் மனைவி எப்படியிருப்பாள் என்ற ஆவலில் சுபாஷ் திருடனைப் போல் ஓரக்கண்ணால் அவளைப் பார்வையிட்டான். பார்த்தவன் அதிர்ந்தே போய்விட்டான். அம்மா சொன்னது எவ்வளவு உண்மை என அவன் மனம் நினைத்தது. மகாலட்சுமியைப் போலவே தான் அழகுப் பதுமையாய் அவள் அமர்ந்திருந்தாள். காயத்ரியின் உதட்டோரத்தில் இலேசான சிரிப்பு இருந்தது. அது தான் அவளை கள்ளத்தனமாய் ஆராய்வதை அவள் புரிந்து கொண்டதாலோ என நினைத்து சுபாஷ் மீண்டும் பார்வையை நோக்கிக் கொண்டான். புரோகிதர் மந்திரங்கள் ஓத அனைவரது அட்சதை ஆசிர்வாதத்தோடு காயத்ரியின் கழுத்தில் தாலியைக் கட்டினான் சுபாஷ்.

அன்று இரவு முதன் முதலாக அவர்கள் இருவரும் தனியாகவிடப்பட்ட போது தான் சுபாஷின் மனம் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகியிருந்தது.

இப்போது காயத்ரியுடன் என்ன கதைப்பது? எதைப்பற்றிக் கேட்பது ஒருவார்த்தைகூட பேசாமல் எப்படி அவளைத் தொடுவது? அப்படி நடந்து கொண்டால் அவள் என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? முதலில் பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொண்டால் தானே மற்றதெல்லாம்...! ஒன்றுமே புரியாமல் குழம்பிப்போன நிலையில் காயத்ரியைப் பார்த்தான் சுபாஷ். அவள் அவனுக்கு எதிர்ப்புறம் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தாள். சுபாஷ் அவளையே பார்த்துக்கொண்டு யோசித்துக்கொண்டிருக்கையில் இருந்த நிலையிலேயே அவள் தூங்கிப் போனாள். சுபாஷ் அவளைத் தூக்கி சரியாகப்படுக்கையில் போட்டான். அவளைத் தொட்டு அணைத்துத் தூக்கையிலே அவள் மீதிருந்து வீசிய வாசம் சுபாஷிற்கு என்னவோ போலிருந்தது. காயத்ரி கண்விழித்துப் பார்க்கமாட்டாளா இப்போது என்ற எண்ணம் அவன் மனதில் உதித்தது. ஆனால் அவள் நல்ல உறக்கத்திலிருந்தாள். சுபாஷிற்கு பெரிதும் ஏமாற்றமாயிருந்தது.

இரண்டாம் நாளும் இப்படியே தான் கழிந்தது. இருவருடைய மனதிலும் எத்தனையோ ஆசைகள். ஆனால் அதை யார் முதலில் வெளிப்படுத்துவது என்ற தயக்கம். இதனால் சுபாஷின் மனம் மீண்டும் வேதனைக்குள்ளாகியது. அவனுடைய முகத்தில் புது மாப்பிள்ளைக்குரிய களை இருக்கவில்லை. காயத்ரியின் முகத்தில் கூட இலேசான வாட்டம் இருந்தது. சுபாஷ் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

பாவம் காயத்ரி. அவளுடைய மனதில் எவ்வளவு எதிர்பார்ப்புக்கள் தன் திருமண வாழ்க்கையைப் பற்றி இருந்திருக்கும், என்னென்ன கற்பனைகள் பண்ணி வைத்திருப்பாள்....!

'அவள் எனக்கு என்ன துரோகம் இழைத்து விட்டாள்? நான் ஏன் இப்படி மௌனமாக இருந்து என்னுடைய ஆசைகளையும் பூட்டிவைத்துக்கொண்டு அவளது மனதையும் நோகடிக்க வேண்டும்...'

சுபாஷ் யோசித்துப் பார்க்கத் துவங்கினான். இனியும் தாமதிக்காது அடுத்த தடவை எப்படியும் அவளுடன் பேசிவிட வேண்டுமென்று உறுதியாகிக் கொண்டான். மூன்றாம் நாள் இரவின் போது,

"காயத்ரி... உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?" நேரடியாகக் கேட்டான் அவளிடம். அவள் அதற்கு மௌனமாகத் தானிருந்தாள். ஆனால் அவள் கால்விரல்களால் தரையில் கோலம் போட்டுக்கொண்டிருந்தது.

"நீ என்னை விரும்பித்தான் திருமணம் செய்தாயா? அல்லது உன் பெற்றோரின் கட்டாயத்திற்காக என்னைத் திருமணம் செய்ய சம்மதித்தாயா?" அந்தக் கேள்வியால் காயத்ரியின் கண்கள் கலங்க ஆரம்பித்தன. சுபாஷிற்கு அவளது கண்களில் வழிந்த கண்ணீர் கவலையைக் கொடுத்தது. 'அப்படியானால் என்னைப் பிடிக்கவில்லையென்று தானே இந்தக் கண்ணீரின் அர்த்தம்...'

'சீ..நான் எவ்வளவு பெரிய சுயநலக்காரனாக இருந்துவிட்டேன். என்னுடைய விருப்பத்தைக் கூறிய நான், அவளுடைய சம்மதத்தை அம்மாவிடம் கேட்காமலிருந்து விட்டேனே, எல்லோரும் சேர்ந்து காயத்ரிக்கு பெரிய துரோகம் செய்துவிட்டோமே....'

"பரவாயில்லை காயத்ரி, இப்போதும் உனக்கு என்னைப் பிடிக்காவிட்டால் சொல்லிவிடு நான்.."

சுபாஷை மேலே பேசவிடாமல் காயத்ரி அவள் கைகளால் அவனது வாயை மூடிக்கொண்டாள்.

"அப்படி சொல்லாதீங்க! என் மனசில எப்பவும் நீங்க தான் நிறைஞ்சு இருக்குறீங்க. நான் உங்களுக்குத்தான் என்றைக்கும் சொந்தம்.....

'உங்களுக்கு என்னைப் பிடிக்கா விட்டாலும் என்னைப் போகச் சொல்லிடாதைங்க. நான் இந்த வீட்டிலேயே உங்களைப் பார்த்துக்கொண்டே ஓர் ஓரமாய் உங்களுக்கு இடைஞ்சலில்லாம இருந்து விடுகிறேன்.."

காயத்ரியின் குரலில் அழுகையும் கெஞ்சலும் இருந்தது. சுபாஷிற்கு அவள் பேசியது காதில் தேனாய்ப் பாய்ந்தது. அவன் முகம் சந்தோஷத்தால் பிரகாசமானது. காயத்ரியை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவள் கன்னங்களில் முத்து முத்தாய் நின்ற கண்ணீர் துளிகளை துடைத்துவிட்டபடியே,

"உன்னைப் பிடிக்காதவன் நிச்சயம் ஒரு குருடனாய்த்தானிருப்பான்.." என்றான்.

"அப்படியானால் உங்களுக்கு.. என்னை..."

"நிறையவே பிடிச்சிருக்கு காயத்ரி." இதைக் கேட்டு அவளும் அவனது மார்பில் தலைசாய்த்துக்கொண்டாள்.

"நாங்கள் இருவருமே ஒருவர் மீது ஒருவர் ஆசை வைத்துக்கொண்டு, அதை மறைத்து எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டு இந்த இரண்டு நாளும் இருந்திருக்கிறோம். இனிமேல் உன் கண்ணில் இருந்து கண்ணீர் வந்தால் அது ஆனந்தக்கண்ணீராய்த்தானிருக்க வேண்டும்..."

இன்னும் அவனது பிடியை இறுக்கிக் கொண்டான் சுபாஷ்.

தனக்கு இப்படியொரு அழகான நல்ல மனைவியை பெற்றுக்கொடுத்த அம்மாவை இப்போது அவனது மனம் நன்றியுடன் நினைத்துப் பார்த்தது.

(யாவும் கற்பனை)

---

# தண்டவாளங்கள்

-ஓட்டமாவடி அறபாத்-



நீண்ட நாட்களாக அவளிடமிருந்து கடிதம் வரவில்லை. எங்கிருக்கிறாளோ? என்ன செய்கிறாளோ? அடிக்கடி மனம் அவளுக்காய் அழுது கொண்டது. முகம் தெரியாத அந்த உயிருக்காக என் உயிரே துடித்துக் கொண்டது. ஒருவேளை திருமணம் முடிந்து, கணவனுடன் குடும்பம் நடத்துவதால், என்னிடம் தொடர்பு கொள்ளவில்லையோ... வேண்டாத கற்பனைகள் வந்து மனதை அலைக்கழித்தன. 'நட்பு என்ற ரோஜா மலர்வதில் தப்பு எதுவுமில்லை. ஆனால் விதியினால் வரையப்பட்ட வலிமையான கோடுகளை அது தாண்டியாக வேண்டுமே!' என்று ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

கடிதம் மட்டும்தான் அவளுக்கும் எனக்கும் உள்ள உயிர்த்துடிப்பு. இன்று வரை நேரில் கண்டு இருவரும் பேசவே இல்லை. எனக்குப் பெருநாள் வாழ்த்து அனுப்புவதும், நான் அவளுக்கு தீபாவளி, பொங்கல், புத்தாண்டு வாழ்த்துக்கள் அனுப்புவதுமாய் இந்த நட்பை வளர்த்துக் கொண்டோம். அண்மையில் தான் எழுதியிருந்தாள், அவளுக்கு ரீச்சிங் கிடைத்துவிட்டதென்றும், அடிக்கடி அவள் பகுதியை சுற்றி வளைப்பதால் உயிருக்கு உத்தரவாதமில்லை என்றும் குமுறியிருந்தாள். அண்ணாவுடன் வவுனியா செல்ல உத்தேசித்திருப்பதாகவும், சென்றவுடன் மடல் போடுவதாகவும் ஒரு கடிதம் கிடைத்தது.

ஒருநாள் கண்ணன் வரையப்பட்ட வாழ்த்து மடலொன்றை அனுப்பி "கண்ணனை நினைத்தால் சொன்னது பலிக்கும், நீங்களும் வழிபடுங்கள்" என்று குறிப்பெழுதியிருந்தாள். எனக்கு அவள்மேல் அனுதாபம்தான் பிறந்தது. வாய்விட்டுச் சிரித்துக்கொண்டேன். அல்லாஹ்வையன்றி எவருக்கும் நாம் வழிபடுவதில்லை என்றும், எமது மார்க்கத்தில் உருவ வழிபாடு இல்லை என்றும் பதிலிட்டேன். மனதை வருத்தியதற்கு மன்னிக்கவும் என்று பதில் போட்டாள். எனக்கு ஊருக்குள் எதிர்ப்புக்கள் வெடித்தன. எங்கள் கடிதத் தொடர்பு கசியத் தொடங்கியதால் சமூகம் கொதித்தது. அதன் குள்ளத்தனமான வறட்டு கௌரவப் பாம்பு இனவாதப் படமெடுத்தாடியது. ஊரின் ஒழுங்கை மீறியதாக குற்றம் சுமத்தப்பட்டேன். "நீ காபிரான ஒருத்தியோட சேர்ந்து சமூகத்தைக் காட்டிக்கொடுக்காய், இந்த தொடர்பை மறந்துடு" என்ற அநாமோதய மிரட்டல்கள் வந்தன. வீட்டின் சுவரில் 'துரோகி' என்று கரித்துண்டால் எழுதினார்கள். இன்னும் அசிங்கமாய் பேசியும், 'போஸ்டர்' ஒட்டியும் எதிர்ப்பைக் காட்டி திருப்தி கண்டார்கள்.

அவளை எப்படி மறக்க முடியும்? சாதாரண நட்பா இது? இரு இனங்களும் துவேஷத்தால் மதியிழந்து ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டபோதும், இடையில் தொய்வில்லாமல் தொடரும் உறவல்லவா இது? பேனா நட்பைப் போன்றதா எங்கள் உறவு? விழிகள் பார்த்து மனங்கள் வரவிட்ட காதல் கணக்கா இது? இல்லையே...

ஒருநாள் இரண்டாயிரம் ரூபா மணியோடரும் கடிதமொன்றும் தவறுதலாக என்கரம் கிட்டியது. உரியவரின் பெயர் முகவரி இருந்ததால் அனுப்பி வைத்தேன். கடலில் தத்தளிக்கும் ஒருவன் துரும்பு கிடைத்தாலும் குதூகலிப்பதைப் போல், சந்தோஷித்து நன்றிக்குமேல் நன்றியாய் எழுதினாள். குருதி கொப்பளித்த நாட்களில் கூட, எம் உறவுமட்டும் கொப்புவிட்டுத் தளைத்து வளர்ந்தது. என் கவிதைகள் பற்றிய விமர்சனங்களை உடனுக்குடன் எழுதி அனுப்புவாள். அவள் கணவனைப் பற்றி ஒரு கடிதத்தில் விசாரித்தேன். ஏராளமான சிரிப்புடன் எழுதியிருந்தாள். "எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை" என்று. எனக்கும் வெட்கம்தான்.

மூன்றுமாதமாய் அவளைப்பற்றிய தகவல்களை என்னால் அறிய முடியவில்லை. போய்த்தான் பார்க்க முடியுமா? வீட்டிலோ முகாமிலோ யார் அறிவர். போனாலும் உயிருடன் திரும்புவது சாத்தியமாகுமா? அவளின் ஊரைப்பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளில் வாசித்து துடித்துப் போனேன். வெள்ளமும், சுற்றிவளைப்பும் அவள் என்ன ஆனாளோ? திடீரென ஒரு கடிதம் வந்தது. வவுனியாவுக்குப் போய் விட்டதாய். அண்ணாவுடன் பாதுகாப்பாய் இருப்பதை நினைத்து மனம் திருப்திப்பட்டுக்கொண்டது.

இந்த துடிப்பும் ஆவலும் எனக்குள் ஏன் எழ வேண்டும்? அவள் யாரோ நான் யாரோ. அநாதையான முகம் கற்பனையில் மாத்திரம் வரையப்பட்ட உருவம். இதற்காக ஏன் சஞ்சலிக்க வேண்டும்? அவளின் மதமும், சமூக அமைப்பும் மாறுபட்டவை. அவளுக்காக நான் ஏன் களங்கத்தை சுமக்க வேண்டும்?

எனினும், அவளின் வாழ்வின் துடிப்பில் அக்கறை காட்டாமல் இந்த மனதால் இருக்கமுடியவில்லையே!

ஒருமுறை எழுதியிருந்தாள் "நம் இந்த உறவின் சங்கமத்தால் எதிர்கால சந்ததிகளாவது மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டால் நம்மைவிட பாக்கியசாலிகள் யாருமே இருக்க முடியாது." அவளின் இலட்சியங்களுடன் கைகோர்த்தபடி இக்கரையில் நான். அவள்...?

(ஒரு நிகழ்வின் சுவாசம்)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# இலக்கிய நயம்

## தருவது ரசிகன்

# துன்பமும் வேண்டும் காதலுக்கு!

நீலவானத்தில் உலா வந்த பால் வண்ண நிலவு தாமரைத் தடாகத்தில் முகம் பார்த்துக்கொண்டது. அருகில் இருந்த நட்சத்திரத் தோழிகள் மின்னி நகைத்தார்கள். முத்தான நிலா முகத்தில் பிறர் கண்பட்டுவிடக்கூடாதே என்று கவலைப்படுவது போல நிலா முகம் மறைக்க முகில் முயற்சித்து, முயற்சித்து தோற்றுக்கொண்டிருந்தது.

மணிமாறனும் முயற்சித்துக் கொண்டிருந்தான். தடாக முனையிலே, தன் அருகிலே, பொன் வண்ணச் சித்திரமாய் அமர்ந்திருந்த மோகனாவின் கவனத்தை தன் பக்கம் திருப்ப முயற்சித்துக்கொண்டிருந்தான்.

அவளோ முத்து மணிமாலை ஒன்றை கரங்களில் வைத்திருந்து விழிகளால் ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

"மணிமாலை ஆராய்ச்சி செய்வ தென்றால் இங்கு வந்திருக்க வேண்டிய தில்லை."

மணிமாறன் குரலில் கேலியும், கோபமும் கலவையாய் தெரிய, முத்து மணியொன்றை விரல்களால் தடவிக் கொண்டே, சித்தத்தில் போதையூட்டும் எழில் சித்திரம் இதழ் விரித்தது.

"வேறெங்கு போக வேண்டுமாம்?"

"உன் மாளிகையில் இருந்திருக்கலாம். அங்கிருந்தே ஆராய்ச்சியை நடத்தியும் இருக்கலாம்."

"உண்மைதான்."

"என்ன உண்மைதான்."

"இங்கு வந்திருக்க வேண்டியதில்லை. வர வேண்டாம் என்றுதான் நினைத்தேன்."

அழகின் பெட்டகம் பொய் பேசியது. மணிமாறனின் கோபத்துக்கு கொம்பு சீவிவிட்டு வேடிக்கை பார்க்க விருப்பம் கொண்டது. மணிமாறனுக்கு மோகனாவின் வார்த்தைகள் ஈட்டியாய் பாய்ந்து மனதில் வேதனை கசிய வைத்தன.

என்றாலும் கேட்டான்.

"பின் ஏன் வந்தாயாம்?"

மோகனாவுக்கு அவன் கோபம் புரிந்தது. உள்ளே நகைத்துக்கொண்டாள். செவ்விதழ்களில் இருந்து அவன் கோப நெருப்புக்கு நெய்யூற்றும் வார்த்தைகள் சிந்தினாள்.

"மாளிகையில் பொழுது போக மாட்டேன் என்கிறது. தடாக அழகை இரசிக்கலாம். காலாற நடக்கலாம். அப்படியே நீங்களும் இங்கிருந்தால் பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று வந்தேன்."

மோகனாவின் இதழ்களைக் கடித்து இனி பேசவே கூடாது என்று இதழ் தடை போடலாம் போல் இருந்தது. தன்னைப் பார்க்க வந்ததை மூன்றாம்பட்ச விசயமாக சொல்கிறாளே என்று மனதில் பெரும் சுமையாய் துன்பம் அழுத்தியது. உள்ளே அழுத்திய துன்பம் கோபமாய் வார்த்தைகளில் வடிந்தது.

"நான் இல்லாவிட்டால் கூட கவலைப் பட்டிருக்க மாட்டாய். அப்படித்தானே மோகனா?"

"அப்படித்தான்."

உயிரானவள் உதாசீனமாய் பேச மனது வாடிய பூவாய் சுருங்கிப் போனது.

'எப்படி முடிகிறது. இவள் முகம் காணாமல், குரல் கேட்காமல், நொடி நேரம்கூட நினைவு மறந்து இருக்க முடியாமல் நான் தவிக்கும் போது இவளால் மட்டும் எப்படி முடிகிறது? காலாற வந்தாளாம். தடாகம் இரசிக்க நினைத்தாளாம். ஐயோ! வார்த்தைகளா அவை. என் உயிரை உருக்கி, உள்ளத்தில் மலர்ந்த வண்ணக் கனவுகளை இரக்கமில்லாமல் அழித்து, என்னை சோகம் என்னும் சேற்றிலே வீழ்த்திவிட்ட கொடிய கணைகள் அவை.'

மணிமாறன் துயர வெள்ளத்தில் மகிழ்ச்சியை தொலைத்தான்.

"ஓ....இவ்வளவு தானா?" என்று உள்ளம் உரத்துக்கூவியது.

மோகனாவைப் பார்த்தான். மணிமாறனின் தவிப்பை கடைக்கண்ணால் இரசித்துக் கொண்டிருந்தவள் அவன் தன்னைப் பார்த்தபோது மணிமாலையை ஆராய்வது போல நடித்தாள்.

"மோகனா"

குரல் தழுதழுத்தது.

"என்ன?"

வேண்டுமென்றே குரலில் அலட்சியம் காட்டினாள். மணிமாலையைத் தூக்கி பார்த்து இரசித்தாள்.

"இனி நீ என்னைப் பார்க்க..."

அடுத்த வார்த்தைகள் வராமல் உதடுகளில் ஒடுங்கிக் கொண்டன. மோகனா விடவில்லை. கேட்டாள்.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்? உங்களைப் பார்க்க.."

மிகுந்த கஷ்டப்பட்டு, உள்ளே துயரம் பொத்தி அடக்கி அவன் சொன்னான்:

"நீ வரவேண்டாம்."

சொல்லி முடித்து தடாக முனையின் படிக்கட்டுவிட்டு எழ முயல, மோகனாவின் கரம் நீண்டது. மணிமாறனின் கரம்பற்றி இழுத்தது.

மணிமாறன் அவள் விழிகளை சந்தித்தான்.

மையுண்ணும் விழிகள், உள்ளத்தில் நிறைந்த அன்பு மெய் என்ற கதை சொல்லின. அஞ்சுக விழிகளில் கதை மட்டுமல்ல அழைப்பும் தெரிந்தது. இப்போது மணிமாறனின் முறை. விருப்பமில்லாதது போல கேட்டான்.

"ஏன் தடுக்கிறாய்?"

"ஒன்று சொல்ல வேண்டும்."

"சொல்."

"என்னை வரவேண்டாம் உங்களைக் காண என்று தடுக்கும் உரிமை உங்களுக்கில்லை."

"ஏன் இல்லை."

"எனக்கு சொந்தமான ஒரு பொருள் உங்களிடம் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு வரவேண்டாம் என்றால் என்ன அர்த்தம்? இனி அதை திருப்பி எடுக்க முடியாது என்று தெரியும். பார்க்கக்கூட முடியாது என்றால் என்ன நியாயமாம்? பல்லவ தளபதி நியாயம் தவறலாமோ?"

பிடியை மேலும் இறுக்கினாள். இந்த மெல்லிய கரங்களில் எத்தனை வலிமை! மனதில் வியந்தான். வியப்போடு கேட்கவும் செய்தான்.

"என்ன பொருள் அது?"

"நீங்கள் பகல் கொள்ளையரை விட மோசம்." அம்மாடி! எப்படி பொய் சொல்கிறீர்கள்!

"குழப்பாதே மோகனா. ஏற்கனவே உன்னால் குழம்பிப் போயிருக்கிறேன்."

மோகனா அவன் கையை எடுத்து தன் நெஞ்சில் வைத்துக்கொண்டாள். மனிமாறனுக்குள் கோபத்தீ அணைந்து ஆசைத்தீ அடங்காத்தீயாகியது.

"தெரியாதாக்கும். அதுதான் என் இதயத்தை எடுத்து வைத்திருக்கிறீர்களே. அதைத்தான் சொன்னேன்."

"அப்படியானால் முதலில் என்னைத் தூக்கி துன்பக்கடலில் வீசினாயே அது?"

மோகனா சிரித்தாள். சில்லென்று மலர்ந்த செந்நிற அழகு ரோஜா போல துடிக்கும் துள்ளிதழ்கள் "நாங்கள் உனக்குத்தான்." என்று அழைப்பது போல் இருந்தது.

"பகல் மட்டுமே இருந்தால் ஒரு நாள் என்பது பூரண நாளாகாது. அதுபோல இன்பம் மட்டும் இருந்தால் சந்திக்கும் நாள் தித்திக்கும் நாளாகாது. அதுதான்..."

"என்னைத் துன்பப்படுத்திப் பார்த்தாயாக்கும்."

சிரித்து தலையாட்டினாள்.

"நன்றாகப் பேச கற்று வைத்திருக்கிறாய். நானும் ஒன்றை கற்று வைத்திருக்கிறேன்."

"எதை?"

"பேசாமல் தடுக்கும் வித்தையை."

சொல்லிக்கொண்டே மோகனாவின் இதழ்களை தன் உதடுகளால் இறுக மூடினான். மோகனா மணிமாறனின்



பிடரியில் கரத்தால் அழுத்தினாள். மோகனாவின் சிற்றிடையில் இறங்கி அழுத்தி முன் எழில்களில் மணிமாறனின் இடக்கரம் இடம் பிடித்துக்கொண்டது. இதழ்கள் கொடுத்த அமுதமும், எழில்கள் வழங்கிய சுகமும் மணிமாறனுக்குள் இன்பக் கடலை உற்பத்தி செய்தன.

இதழ்களில் அமுதம் எடுத்து, விலகி மோகனாவின் கழுத்தில் முகம் புதைத்து மணிமாறன் மனதுக்குள் நினைத்தான்.


'தொடும் போதெல்லாம் புதிதாய் என்னுள்ளே மலரும் உற்சாகமும், உத்வேகமும் விந்தையன்றோ. இவள் உடல் என்ன அமிழ்த்தால் செய்யப்பட்ட பேரழகுப் பெட்டகமோ?"

மணிமாறன் நினைப்பதிலே பழுதில்லை. காதல் பித்திலே சித்தம் கலங்கிய நினைப்பல்ல அது. காதலியின் உடலைத் தீண்டும் போது புதிய சக்தி தூண்டப்படும் என்றுதானே நமது திருவள்ளுவரும் சொன்னார்.

உறுதோ றுயிர்தளிப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்."

குறள் 1106
அதிகாரம் 111

## குறுக்கெழுத்துப் போட்டி இல—34



### இடமிருந்து வலம்

1. இது தூக்கத்தையும் கெடுக்கும்.
2. இரவுக்கு இன்னொரு பெயர்.
3. தாய்,தந்தைக்கு அடுத்ததாக வணங்கப்பட வேண்டியவர்.
4. சூழலுக்கு ஏற்ப நிறம் மாறும்.
5. அடுத்தவர் அறியக்கூடாதது.
8. விவசாயிகளுக்கு இதுவும் ஒரு ஆயுதம்.
9. முனிவர்கள் வரம் வேண்டி இதைச் செய்தார்கள்.
10. நல் இசை தரும்.

### மேலிருந்து கீழ்

1. புகைத்தால் இது கெடும் என்பார்கள்.
3. துறவிகளுக்கு இதுதான் இல்லம்.
4. சூரியனின் இராச்சியம் நடக்கும் நேரம்.
6. இதுவும் ஒரு தூங்கும் தளம்.
7. மங்கையர் அணிவது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 29.01.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-34**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-32க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 இ | ம | 2 ய | ம | லை | | 3 க |
| ரு | | ன் | | 4 மு | 5 த | லை |
| 6 ம | 7 யா | ன | ம் | | ம் | ஞ |
| ல் | த் | ல் | 8 சு | 9 வீ | ட | ன் |
| | தி | | | க் | ட் | |
| 10 தி | ரை | நீ | க் | க | ம் | |
| 11 வீ | | 12 வ | ரு | ம் | ப | டி |

குறுக்கெழுத்துப் போட்டி இல.32இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. வி. அம்பிகா
நீர்கொழும்பு.
2. ஸாயிதா முஸ்தபா
காத்தான்குடி-6.
3. எம். ரம்ஸீன்
கொழும்பு-5.
4. ஏ.எம். பௌமி
கிண்ணியா-3.
5. கே. அல்போன்ஸ்
பண்டாரவளை.
6. கே.எம். ஐனுல் மர்ழியா
கொழும்பு-10.
7. எம். செல்வரட்ணம்
மட்டக்களப்பு.
8. என்.எம். மஹ்ரூம் முனவ்பர்
திருகோணமலை.
9. வி. ஜோசவ்
புத்தளம்.
10. எஸ். தாஜுன்நிஸா
பிலியந்தலை.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

19ம் பக்க மகாபாரதம் தொடர்ச்சி...

உன் குறும்புகளைப் பற்றி நிரம்பப் புகார்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. நமது வீட்டில் வெண்ணைக்கு பஞ்சமில்லையே!

**கண்:** இருக்கலாம்! எனது நண்பர்களுக்கு வெண்ணை கிடைப்பதில்லையே! அப்பாவிடம் சொல்லுங்கள். சிறுவர்களுக்குத் தான் வெண்ணைமீது முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று.

**யசோ:** ஏதோ எல்லாம் தெரிந்த பெரியவர்களைப் போல் பேசாதே.

**நந்த:** (வந்துகொண்டே) என்ன அம்மாவுக்கும் மகனுக்குமிடையில் என்ன பெரிய விவாதம்?

**யசோ:** உங்கள் மகன் பெரிய பெரிய கதைகளையெல்லாம் கூறுகிறான். உரிமைக் குரல் எழுப்ப இப்போதே ஆரம்பித்து விட்டான். கண்ணா! ஏன் இப்போது மௌனியாகி விட்டாய்? அப்பாவிடம் சொல்லேன்.

**நந்தகோபன் அழைக்க கண்ணன் ஓடுகிறான்.**

-காட்சி மாற்றம்-

**கிராமத்துக்கருகிலுள்ள காடு. கிருஷ்ணனும் நண்பர்களும் மரத்தில் ஏறியுள்ளனர். ஒரு பெண் தண்ணீர் எடுக்கச் செல்கிறாள்.**

**கண்:** வாருங்கள். வெண்ணை உண்ணச் சொல்வோம்.

**சிறிதாமா:** வாங்கள்! வாருங்கள்! (அனைவரும் ஓடுகிறார்கள்)

-காட்சி மாற்றம்-

**ஆயர்பாடியில் மாலதியின் இல்லம்.**

**கண்:** ஷியாமா, சகா! இங்கே நில்லுங்கள்!

**கண்ணன் நண்பனின் தோளில் ஏறிநின்று வெண்ணைப் பானையை எடுத்து யாவரும் உண்கின்றனர். மாலதி வருகிறாள்.**

**மாலதி:** கிருஷ்ணா! இன்று நீ வகையாக மாட்டிக் கொண்டாய்!

**கண்:** தண்ணீர் எடுக்கப் போன நீ என்ன இன்று சீக்கிரமே திரும்பிவிட்டாயே?

**மாலதி:** அப்படியா? இன்று உன்னையே தண்ணீர் எடுக்க வைக்கிறேன் பார்.

**கண்:** என்ன மாமி? இப்படி என்னிடம் பேசுகிறீர்களே!

**மாலதி:** அந்த மாதிரி என்னை அழைக்காதே! நான் உன் மாமியல்ல. நான் உன் சின்னம்மா-சித்தி.

**கண்:** சித்தி என்றால் என்னை அன்பாகக் கட்டி அணைத்து, வெண்ணை சாப்பிடடா அருமை மகனே என்று ஊட்டவேண்டுமல்லவா? உன்னைப் போலவா சித்திமார் இருப்பார்கள்?

**மாலதி:** இப்போ போதுமான அளவு வெண்ணை சாப்பிட்டு விட்டாய் அல்லவா? கொஞ்சம் பொறு. இன்று உனக்கு நல்ல உதை கிடைக்க வைக்கிறேன்! இதோ உன் அம்மாவிடம் போய்ச் சொல்கிறேன்.

**கண்ணனைப் பிடித்து ஒரு தூணோடு கட்டி விடுகிறாள்.**

**மாலதி:** உன் சிநேகிதர்களுக்கு வேண்டுமானால் உன் வீட்டிலே இருந்து எடுத்துக் கொடுக்கலாமே! நீ வெண்ணைத்திருடன் என்று நான் எத்தனை தடவை முறையிட்டாலும் உன் அம்மா யசோதா நம்பமாட்டேன் என்கிறாள். இன்று நேரடியாகக் கொண்டுவந்து காட்டப் போகிறேன். நீ வெண்ணைத் திருடனா இல்லையா என்பதை அவள் ஒப்புக் கொள்ளுகிறாளா ஏன்பதைப் பார்ப்போம்.

-காட்சி மாற்றம்-

**நந்தகோபன் இல்லம்-வெளிப்புறம்.**

**மாலதி:** யசோதா அக்கா! நந்தராணி...! கண்ணனின் தாயே...!

**யசோ:** என்ன சகோதரி மாலதி? உள்ளேவா.

**மாலதி:** நான் இங்கு உன்னோடு உறவாட வரவில்லை. என்னோடு உன்னை அழைத்துப் போகவே வந்திருக்கிறேன்.

**யசோ:** எங்கே...?

**மாலதி:** வேறு எங்கே! என் வீட்டுக்குத்தான்! உன் வெண்ணைத் திருடனை அங்கு கட்டிவைத்து விட்டுவந்திருக்கிறேன். அவனை நேரடியாகப் பார்த்தாயானால் தான் நம்புவாய்.

**யசோ:** நீ என்ன சொல்கிறாய்? அவன் குறும்புக்காரன் தான். பிரளியும் கொஞ்சம் அதிகம். ஆனால் என் கண்ணன் திருடமாட்டான். அவனுக்கு வீட்டில் வேண்டிய அளவு வெண்ணை இருக்கும் போது உன் வீட்டில் அவன் வந்து திருடவேண்டிய அவசியமில்லையே!

**மாலதி:** அப்படியா? நீ நேரடியாகவே வந்து பாரேன். நான் சொல்வதற்கான சான்று கிடைக்கும்.

**யசோ:** நான் ஏன் அங்கு வரவேண்டும்? என் மகன் அங்கு இல்லையே!

**மாலதி:** அவனைக் கையும் களவுமாகப் பிடித்துவைத்துள்ளேன். இன்று உன் சாக்குப் போக்கெல்லாம் செல்லுபடியாகாது.

**யசோ:** அதற்கு முன்னர் என்னுடன் இங்கு உள்ளே வந்து பாரான்!

**மாலதியை யசோதா உள்ளே அழைத்துச் செல்கிறாள். அங்கே கண்ணன் உணவு உட்கொள்வதைக் காண்கிறாள்.**

**யசோ:** பார்த்தாயா! கண்ணன் இங்கேதானே இருக்கிறான்.

**மாலதி:** அட கடவுளே!

**கண்:** வணக்கம் மாமி..!

**மாலதி:** நான் முன்னமே சொன்னேன் அல்லவா? மாமி என்று என்னைக் கூப்பிட வேண்டாம் என்று... நான் உனக்கு சித்தி..!

**கண்:** என்னிடம் அப்படி எப்போது சொன்னீர்கள் மாமி?

**மாலதி:** என்ன யசோதா! என்னால் நம்பமுடியாதிருக்கிறதே..!

-காட்சி மாற்றம்-

*மாலதி வீடு செல்கிறாள். தூணோடு இணைத்துக் கட்டப்பட்ட நிலையில் கண்ணனைக் கண்டதும் மயக்கமுற்று விழுகிறாள்.*

இன்றைய முக்கியமான காட்சிகளின் பின்னோக்குத் தொகுப்புடன் காட்சி முடிவடைகிறது.

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 13

**இவ்வாரம் (23.01.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: கம்சன் என்னும் கொடியவன் அரசோச்சும் மதுராபுரி அஞ்ஞான இருளில் அமிழ்ந்து கிடக்கிறது. அதே போல் உலகப் பெரும் பேரொளியினைப் பெற்றெடுத்த தேவகி வாழும் சிறையும் அந்தகாரத்தில் மூழ்கிக்கிடக்கிறது. அவள் மடியில் தவழ்ந்து உலகனைத்தையும் மெஞ்ஞான ஒளியில் மிதக்க விட வேண்டிய கண்ணனோ யமுனா நதியின் அக்கரையில் யசோதையின் மடியில் தவழ்கிறான். அவன் சிந்தும் புன்னகையால் கோகுலம் மகிழ்ச்சிக்கடலாடுகிறது. அந்தப் பேரெழிலைப் பெற்றெடுத்தவளின் உள்ளும் புறமும் இருள் கவிந்திருக்கிறது. ஆனால், இந்த இருள் முழுமதியை மூடியிருக்கும் கார் மேகத்தினை ஒத்தது. இந்தத் தற்கால இருளால் தேவகி தவிப்பது என்னவோ உண்மைதான். உலகத்தை உய்விக்க அவதரித்த அந்த உத்தமோத்தமனை எண்ணியே அவள் கவலைக் கடலில் மூழ்கித் தவிக்கிறாள். அழிவுக் காரிருள் மதுராபுரியை சூழ்ந்து வருகிறது. அது கம்சனின் முடிவுவரை நீடிக்கும். முழுமதியை மூடியிருக்கும் இருளோ தற்காலிகமானது. இந்த இருளால் முழு நிலவின் எழிலை எப்போதும் மறைத்துக்கொண்டிருக்க முடியாது. இதனை தேவகியும் அறிவாள். இருப்பினும் அவள் ஒரு தாயல்லவா?

-காட்சி தொடக்கம்-

**கோகுலம்- கிருஷ்ணன் துயிலும் தொட்டிலை யசோதா ஆட்டியவண்ணம் அவனுடைய பேரெழிலின் பேரொளியை அள்ளிப் பருகி உவகை பூக்கிறார்கள். கோபியர்கள் சூழ்ந்திருக்கின்றனர். தாலாட்டுப்பாடுகிறாள் யசோதா.**

-காட்சி மாற்றம்-

**கோகுலம்- கண்ணனின் வளர்ச்சிப்படிகளைக் காட்டும் காட்சிகள் தொடர்கின்றன.**

-காட்சி மாற்றம்-

**கோகுலம்- கண்ணன் ஒரு மரத்தடியில் இருந்த வண்ணம் மண்ணை உண்ணுகிறான். இதனை ஒரு வயதான மாது கண்டுவிடுகிறாள்.**

வயதான பெண்: அட கடவுளே! இவன் யசோதையின் மைந்தனல்லவா? என்னடா மகனே மண்ணை தின்கிறாயா?

கண்ணன்: ஊகும்... இல்லையே பாட்டி!

வய.பெண்: ஏய் யசோதா..! இங்கே வந்து பார். உன் மகன் இங்கே மண்ணை அள்ளி அள்ளித் தின்கிறான். வாம்மா யசோதா....இங்கே வந்து பார் உன் பிள்ளையை..டேய் கண்ணா! இங்கே வா...!

**கண்ணன் பிடிபடாமல் ஓடிச் சென்று ஒரு மரத்தின் மீது தாவி ஏறி அந்த வயோதிப மாதைக் கேலி செய்கிறான்.**

வய.மா: ஏய் சொன்னாக் கேட்கணும். வா இறங்கி வா... வா யசோதாவிடம் போவோம் வா கண்ணா...!

கண்: ப்பாட்டி....வா பாட்டி...மரத்திலே ஏறிவந்து என்னைப் பிடி பார்ப்பம்...!

வய.மா: ஓ..யசோதா...! இங்கு வந்து பாரேன்! உன் மகன் மண்ணைத் தின்று விட்டான்.

**யசோதா வெளியே வந்து அந்த வயோதிப மாதுடன், கண்ணன் செய்யும் குறும்புகளைப் பார்த்து இரசித்துச் சிரிக்கிறாள். பின்னர் கண்ணனை அணுகுகிறாள்.**

யசோ: டேய் கண்ணா! பாட்டி சொல்வது உண்மையா...? மண்ணைத் தின்றாயா?

வய.மா: யசோதா! சாவித்திரிக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான். அதனை உன்னிடம் சொல்லத்தான் இந்தப் பக்கமாக வந்தேன். வரும் வழியில் பார்த்தால், உன் மகன் மண்ணை அள்ளி அள்ளி வாயில் போட்டுக்கொண்டிருந்தானடி.....

யசோ: ஏய் கண்ணா! மண் சாப்பிட்டாயா? எங்கே உன் வாயைத் திற...!

**கண்ணன் வாயைத் திறக்கிறான். அவன் வாயுள் அண்ட சராசரங்களையும் காணும் யசோதா மயக்கமுற்று கீழே சரிகிறாள். கிருஷ்ணன் அருகில் வந்து தட்டி எழுப்ப மெல்ல கண் விழிக்கிறாள். அதே வேளை நந்தகோபரும் அங்கு வருகிறார்.**

நந்த: யசோதா! என்ன நடந்தது...?

யசோ: என் மோகனக் கண்ணனுடன் விளையாடுகிறேன்.

நந்த: கிருஷ்ணா! இங்கே வா..!

யசோ: என் மகனை நான் விடமாட்டேன்.

நந்த: அப்படியானால் எனக்கு கண்ணன் மீது எந்த உரிமையும் இல்லையா யசோதா?

யசோ: என்னைத் தவிர என் கண்ணன் மீது எவருக்குமே உரிமை கிடையாது.

நந்த: அப்படியானால் ஒரு நாளைக்கு நான் கிருஷ்ணனை களவெடுத்துக்கொண்டோடிவிடுவேன்.

**இதனைக் கேட்டதும் யசோதா அழ ஆரம்பித்து விடுகிறாள்.**

நந்த: அடடே அழாதே அம்மா.... நான் ஒரு வேடிக்கையாகத்தானே சொன்னேன்.

யசோ: விளையாட்டுக்காவது அம்மாதிரிச் சொல்ல வேண்டாம். கண்ணன் இல்லையென்றால் நானும் இல்லை!

நந்த: அவ்வாறு சொல்லாதே யசோதா! கண்ணனோடு அவ்வளவு ஒட்டாக இருக்கலாகாதம்மா!

யசோ: ஏன்..? ஏன் அவ்வாறு சொல்லுகிறீர்கள்?

நந்த: கதிரவனின் ஒளியை உன் கைகளால் மறைத்துவிட நினைக்கலாமா?

-காட்சி மாற்றம்-

**சிறை-தேவகி வருந்துகிறாள். வாசுதேவர் ஆறுதல் கூறுகிறார்.**

வாசு: அழுவதனால் எந்தப் பிரச்சனையையும் தீர்த்து விடமுடியாது. அழாதே அம்மா!

தேவகி: சுலபமாகச் சொல்லிவிடலாம் பிரபு! பத்து மாதங்கள் சுமந்து சுமந்து ஒன்றன்பின் ஒன்றாக ஆறு குழந்தைகளைப் பறி கொடுத்தவள் நான். என்னால் அழாமல் இருக்க முடியவில்லை. அழுவதால் பிரச்சினை தீராது என்று கூறுகிறீர்கள். நான் விடுவது வெறும் கண்ணீர் அல்ல. நான் பறி கொடுத்த பிள்ளைகளின் மீதுள்ள பாசத்தின் விளைவால் ஊற்றெடுக்கும் சோகம். நான் என் குழந்தைகளுக்கு ஊட்டாத பால் என் கண்ணீராய் வடிகிறது பிரபு! ஒரு தாயிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட அன்பின் பிரவாகம் இது. யசோதையின் மடியில் என்னுடைய குழந்தை சுகமாக-பத்திரமாகத் தவழ்ந்து விளையாடுகிறான் என்பதை நான் அறிவேன். இருப்பினும் அந்த எட்டாவது குழந்தையின் மீது என் நாட்டம் செல்கிறது. நான் பெற்ற குழந்தைகளை நானே வளர்க்க முடியாத துர்ப்பாக்கிவதியாகி விட்டேன். எட்டுக் குழந்தைகளைப் பெற்றாயே, குழந்தை வளர்ப்பைப் பற்றி என்ன தெரியும் உனக்கு? என்று எவராவது வினவினால் என்னால் பதில் எதுவும் கூறமுடியாதே!

வாசு: கலங்க வேண்டாம் அன்பே! எல்லாம் நன்மையிலேயே முடியும்.

தேவகி: நான் கவலைப்படுவதால் யசோதா மீது பொறாமைப்படுவதாக நினைக்க வேண்டாம். ஆனால் தாயாகிய நான் என் துன்பங்களை அழுகையினால் தீர்க்க முயற்சிக்கிறேன் பிரபு!

-காட்சி மாற்றம்-

**நந்தகோபனின் இல்லம்- கண்ணனைத் துயிலெழுப்ப யசோதா முயற்சிக்கிறாள்.**

-காட்சி மாற்றம்-

**நந்தன் கிராமத்துக்கு அருகிலுள்ள ஒரு காடு. கிருஷ்ணன் தனது நண்பர்களுடன் விளையாடுகிறான். அவர்கள் ஒரு மரத்தின் பல கிளைகளிலும் ஏறியிருக்கின்றனர்.**

கண்ணன்: சிறிதாமா! உனக்குப் பசி எடுக்கவில்லையா? எனக்குப் பசிக்கிறது. வா எங்காவது போய் வெண்ணெய் எடுத்துண்போம்.

சிறி: ஆமாமா... எனக்கும் பசிக்கிறது. வாருங்கள் எல்லோரும் போவோம்.

-காட்சி மாற்றம்-

**ஆயர்பாடி- ஒரு கோபியின் இல்லம்- அறையுள் புகுந்த கிருஷ்ணனும் நண்பர்களும் வெண்ணை திருடுகின்றனர். உறியிலிருந்து எடுத்த வெண்ணையை உண்கிறார்கள்.**

சிறி: என் வயிறு நிரம்பி விட்டது. ஆனால் உள்ளத்தில் திருப்தி இல்லையே!

கண்: அப்படியானால் வேறோர் இடத்திற்குப் போவோம். ஆயர்பாடியில் வெண்ணைய்க்கா பஞ்சம்?

-காட்சி மாற்றம்-

**பாருவின் இல்லம்-**

பாருவின் தாயார்: ஏ பாரு!

பாரு: வருகிறேன் அம்மா.

பா.அம்: இந்தப் பாலைக் கொண்டுபோ. அறையுள் வைத்துக் கதவைப் பூட்டி வை. அந்த யசோதையின் மகன் இப்பக்கம் வந்தாலும் வருவான்.

பாரு: உங்களை எனக்குப் புரியவே இல்லை அம்மா. அவன் வந்தால் சினமடைகிறீர்கள். வராவிட்டாலும் காணவில்லையே என்ற ஏக்கம் உங்களுக்கு உண்டாகிறது.

பா.அம்மா: ஆமா....ஆமா... கதவை மூடி வை. போய் தண்ணீர் எடுத்து வா.

(பலராமன் வருகிறான்)

பலராமன்: வணக்கம் பாட்டி.

பா.அம்மா: வாடா மகனே வா. என்ன யசோதாவின் மகன் இன்று உன்னோடு வரவில்லையா?

பலராமன்: இல்லை பாட்டி..

பா.அம்மா: ஏன் அவன் வரவில்லை?

பலராமன்: எனக்கென்ன தெரியும் பாட்டி..... பாட்டி உங்கள் பசு அதிகம் பால் கறக்கிறது! என்ன பாட்டி?

பா.அம்மா: அப்படியல்ல மகனே. முன்பு இருந்ததை விட கம்சனுடைய ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்து பசுக்கள் குறைவாகவே பால் தருகின்றன.

பலராமன்: உண்மையாகவா பாட்டி?

பா.அம்மா: உக்கிரசேன மகாராஜாவின் காலத்தில் எவ்வளவு அதிகமான பால் கிடைக்கும்! பசுவின் மடியின் கீழிருந்து ஒருவர் பாலில் நன்றாகக் குளித்து விடலாம். என்ன நடந்தது என்று ஆண்டவனுக்குத் தான் தெரியும். வரவரப் பசுக்களெல்லாம் மெலிந்து போய் வாடுகின்றன. பார்த்தாய் அல்லவா? அது சரி என் பசுக்கள் மீது உன் கண்ணே பட்டுவிடும் போல இருக்கிறதே!

**கண்ணன் கன்றுகளை அவிழ்த்து விட்டு, பால் அருந்த அவற்றைப் பசுக்களிடம் சேர்த்து விடுகிறான். இதனைப் பாருவின் தாயார் கண்டு விடுகிறார்.**

பா.அம்மா: ஏய் கண்ணா! நில்லுடா இங்கே. உன்னை நான் இன்று விடமாட்டேன். கொஞ்சம் பொறு இதோ வந்து விடுகிறேன்.

**(கண்ணன் ஓடுகிறான். பாருவின் தாய் துரத்துகிறாள்)** நில்லுடா நில். எங்கே ஓடப்போகிறாய்? நீ என்னைப் படுத்தும் பாடு பெரும்பாடாகிவிட்டது. நீ செய்யும் வேலையால் கறப்பதற்குப் பாலே கிடைப்பதில்லை. என்னிடம் ஏன் உன் விளையாட்டைக் காட்ட வேண்டும்? உன் அப்பாவிடம் ஆயிரம் பசுக்கள் உள்ளன. அங்கே போய் கன்றுகளை அவிழ்த்து விட்டு உன் ஆட்டத்தைக் காட்டேன்.



கண்: அங்கும் அப்படித்தானே செய்கிறேன் பாட்டி!

பா.அம்: ஏனப்பா இந்த ஏழையை வதைக்கிறாய்?

கண்: அதுகள் வாயில்லாப் பிராணிகள் என்பதனால் அந்தக் கன்றுகளுக்கு பால் கொடுக்காமல் நீங்கள் வதைக்கிறீர்களே! முதலில் கன்றுகள் வேண்டிய பாலைப் பருகட்டும். அதன்பின்னர் வேண்டுமானால் சேரியிலுள்ளவர்கள் பாலைக் கறக்கட்டுமே!

பா.அம்: அப்போ மதுராபுரிக்கு அனுப்புவதற்கு பால் எங்கிருந்து கிடைக்கும்?

கண்: மதுராவுக்கு இனிமேல் எவரும் பால் அனுப்ப வேண்டாம். அண்ணா வருங்கள்.

கண்.பலரா: வணக்கம் பாட்டி...!

பா.அம்:(தனக்குள்) ஆண்டவனே யசோதையின் மைந்தனுக்கு கொஞ்சம் புத்தியைக் கொடுக்க மாட்டாயா? அவனைப்பற்றி யசோதாவிடம் முறையிட்டு எந்தப்பலனும் கிடையாது.

-காட்சி மாற்றம்-

*நந்தனின் இல்லம்- ரோகினி கவலையுடன் இருக்க யசோதா வருகிறாள்.*

யசோதா: ரோகினி அக்கா! ஏன் கவலையாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?

ரோகி: தேவகியின் எண்ணம்தான் இன்று என்னை வாட்டுகிறது.

யசோ: ஏன்? நாளை போய் அவர்களைப் பார்த்துவிட்டு வரலாமே!

ரோகி: அங்கு போகலாம். ஆனால் அவர்கள் படும் துயரை என்னால் பார்க்கச் சகிக்கவில்லை. அவர்கள் சூரியோதயத்தையும் அஸ்தமனத்தையும் பார்த்தே பல வருடங்களாகிவிட்டன. இங்கு நான் சுதந்திரமாக உண்டு உடுத்து மகிழ்கிறேன். நான் அவர்களுடனேயே- அந்தச் சிறையில், அவர்கள் படும் துன்பத்தையும் துயரையும் பகிர்ந்து அனுபவிக்கக் கடமைப்பட்டவள் அல்லவா?

யசோ: அப்படியல்ல சகோதரி! கம்சனுடைய கண் பலராமன் மீது விழாமல் நீங்கள் எட்டத்திலேயே இருக்க வேண்டியவர்கள். தைரியத்தை இழந்து விடாதீர்கள். எதிர்காலத்தில் காணப்போகும் மகிழ்ச்சியை எண்ணிப்பாருங்கள். கவலைப்படாமல் அமைதியாயிருங்கள்.

-காட்சி மாற்றம்-

**சிறை-**

வாசு: தேவகி.... என்ன நடந்தது..? தூக்கம் வரவில்லையா?

தேவகி: யசோதாவின் கண்ணன் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கிறானே!

வாசு: ஏன்? உனக்கேன் அந்த எண்ணம் இப்போ வரவேண்டும்?

தேவகி: அவன் தூங்காதிருக்கிறான். அவனுக்கு உடல் நிலை சரியில்லைப் போலும்...!

வாசு: இருக்காது. அப்படியானால் ரோகினி வந்து சொல்லியிருப்பாளே! அவனுக்கு எதுவுமே ஆகாது. உலகின் பல பிரச்சனைகளைத் தீர்க்க வந்துதித்தவனல்லவா? கவலைப்படாதே தேவகி!

தேவ: ஆனால் அவன் இன்னும் ஏன் தூங்கவில்லை?

வாசு: யசோதா கண்ணனுக்கு ஏதோ கதை சொல்லுகிறாள் போலும்!

-காட்சி மாற்றம்-

**நந்தகோபன் இல்லம்- கிருஷ்ணனைத் தூங்க வைக்க யசோதா முயற்சிக்கிறாள்.**

யசோ: தூங்கு கண்ணா... வெகு நேரமாகி விட்டதல்லவா...தூங்கடா...!

கண்: எனக்குத் தூக்கம் வரவில்லையே! நீங்கள் ஒரு கதை சொல்லாவிட்டால் எனக்குத் தூக்கமே வராது அம்மா..!

யசோ: அங்கு பார்த்தாயா? அண்ணன் தூங்கிவிட்டான்.

கண்: அண்ணன் தூங்கிவிட்டால் நானும் தூங்க வேண்டுமோ? அவன் வேறு, நான் வேறு அம்மா.

யசோ: நீ வர வர அம்மாவின் சொற்களைக் கேட்பதேயில்லை. எனக்கு பெருந்தொந்தரவுகளையே தர ஆரம்பித்து விட்டாய்.

கண்: அம்மா உங்களோடு நான் விளையாடுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?

யசோ: கண்ணா நீ என்ன செய்தாலும் எனக்குப் பிடிக்கும்.

கண்: என்னைப் பற்றி யாராவது கோள் சொன்னாலும்..!

யசோ: ஆமாம்!

கண்: பானைகளை உடைத்தால்..!

யசோ: ஆமாம்!

கண்: வெண்ணை தின்றால்...!

யசோ: ஆமாம் கண்ணா ஆமாம்.

கண்: அப்போ கதை சொல்லுங்கள்.

யசோ: ஒரூரிலே ஒரு அரசர் இருந்தார்...

கண்: எந்த நாட்டுக்கு அரசர்?

யசோ: எந்த நாடானால் என்ன? கதை சொல்லும் போது இடைமறிக்க வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்? அவர் அயோத்தி நாட்டு அரசர். அவருடைய பெயர் தசரதர். போதுமா? வேறு ஏதாவது...

கண்: இல்லை அம்மா. எனக்குப் புரிகிறது.

யசோ: அந்த அரசருக்கு மூன்று மனைவியர். இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கன் என்று நான்கு குமாரர்கள். மூத்தவன் இராமன். பரதனின் தாயார் கைகேயிக்கு அரசர் சில வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தார். ரகு குல அரசர்கள் கொடுத்த வாக்குறுதிகளை உயிரே போவதானாலும் ஒரு போதும் மீற மாட்டார்கள். இதன்படி கைகேயி அரசரிடம் தனக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றும்படி கேட்டாள். இதனால் இராமன் தனக்குரிய அரசர் பதவியை தம்பி பரதனுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று.

இம்முடிவினை பரதன் ஏற்கவில்லை. காட்டுக்கு சென்ற இராமனை அணுகி அயோத்திக்கு வரும்படி வேண்டினான். வன வாசத்தை விட்டு வர இராமர் மறுத்தார். பஞ்சவடியில் மனைவி சீதையுடனும் தம்பி இலட்சுமணனுடனும் வாழ்ந்து வரலானார்.

ஒரு நாள் ஓர் அரக்கன் பொன் மான் வேடமிட்டு சீதையின் கண்படும் இடத்தில் தென்பட, அதனைப் பிடித்துத் தரும்படி சீதை இராமனிடம் கேட்டாள். இராமர் தம்பி இலட்சுமணனை சீதைக்குக் காவலாக இருக்கும்படி கூறிவிட்டு மானைத் தொடர்ந்தார். இவை இலங்கை மன்னன் இராவணனின் மாய விளையாட்டு. இதனைப் புரியாமல் மானைத் தொடர்ந்து சென்ற இராமரின் அபயக்குரல் கேட்டது. ஓடிச்சென்று அண்ணனைக் காப்பாற்றும் படி, பயந்த சீதை இலக்குமணனை ஏவினாள்.

இலக்குமணன் போவதற்கு முன்னால், சீதை இருந்த குடிசைக்கு வெளியே ஒரு கோட்டினை வரைந்து, எது நடந்தாலும் அந்தக் கோட்டைத் தாண்டி அப்புறம் செல்ல வேண்டாம் என்று கூறிவிட்டு போகிறார். இதே வேளை இராவணன் ஓர் அந்தண வடிவம் பூண்டு சீதையிடம் வந்து யாசகம் கேட்க, அவளும் இலக்குமணன் கீறிய கோட்டைத் தாண்டுகிறாள். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த இராவணன் சீதையை குடிசையுடன் கடத்திக்கொண்டு வானில் தாவுகிறான். சீதை கணவனை நினைத்து... "பிரபே என்னைக் காப்பாற்றுங்கள்... என்னைக் காப்பாற்றுங்கள்..."

**(இதனைக் கேட்டதும் கண்ணன் எழுந்து பதட்டத்துடன்.)**

கண்: இலட்சுமணா..எங்கே எனது வில்..? அம்பினை எடு..?

யசோ: என்ன மகனே கண்ணா...உனக்கு என்ன ஆயிற்று..?

பலராமன்: கண்ணா! என்ன செய்கிறாய்? பேசாமல் படு..!

நந்த: (வந்து கொண்டே)..என்ன நடந்தது யசோதா..? கிருஷ்ணன் ஏன் சப்தமிடுகிறான்?

யசோ: அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்.

பலரா: அவன் தன்னை இராமன் என்று எண்ணி விட்டான். இராவணனுடன் சண்டையிட இலட்சுமணனிடம் வில்லையும் அம்பையும் கேட்கிறான்.

யசோ: எனக்கு பயமாக இருக்கிறது. எங்கே அமைதியாகத் தூங்கு பார்க்கலாம்.

-காட்சி மாற்றம்-

**பாருவின் இல்லம்.**

பா.அம்: பாரு! வெண்ணையை மறைத்து வையடி. யசோதாவின் மகன் வரும் நேரமாகிறது....... சிரியாமல் போய் எல்லா வெண்ணையையும் எடுத்து மறைத்துவிடு.

பாரு: நான் எடுத்து வைக்கிறேன். நீ போய்வா அம்மா!

பா.அம்: வெண்ணையை உறியில் எடுத்து வைத்து போர்வையால் மூடி வைத்துவிடு.

-காட்சி மாற்றம்-

**பாருவின் தாயார் தண்ணீர் எடுக்கப் போகும்வழி.**

**மற்றுமொரு பெண்ணைக் காண்கிறாள்.**

பா.அம்: தண்ணீர் மொண்டுவிட்டாயா?

**கண்ணன் தன் நண்பர்களுடன் மரத்தடியில் நிற்பதனைக் கண்டு விடுகிறாள்.**

பா.அம்: ஏன் கிருஷ்ணா..! நீங்களெல்லாம் அங்கே என்ன செய்கிறீர்கள்?

கண்: விளையாடப் போறோம். நண்பர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

பா.அம்: என்ன? என் வீட்டில் வெண்ணை தின்னாமலா விளையாடப் போகிறீர்கள்?

கண்: அங்கு வந்தால் அம்மா திட்டுவார்.

பா.அம்: அது என்னுடைய வெண்ணை. அதை நீ எடுத்துத் தின்றால் அம்மா ஏன் திட்ட வேண்டும்? இங்கு பார் கண்ணா..... பாரு வெண்ணையை உறியில் ஒளித்து வைத்திருக்கிறாள். உனக்கு வெண்ணை தரக்கூடாது என்று கூறிக் கொண்டிருக்கிறாள். நான் சொல்கிறேன். நீ போ... போய் வெண்ணையை வேண்டியமட்டும் எடுத்துச் சாப்பிடு. ஓடு..

**சிறிதாமனும் ஏனைய நண்பர்களும் வருகின்றனர்.**

சிறி: மன்னித்துக்கொள் கண்ணா. பிந்தி வந்து விட்டேன். விளையாடலாமா?

கண்: முதலில் போய் வெண்ணை உண்ணுவோம். பாருவின் அம்மா நமக்காக வெண்ணை நிறைய வைத்திருக்கிறாராம்.

சிறி: அடடே அப்படியா? அப்படியானால் எல்லோரும் வாருங்கள். அங்கு போகலாம்.

-காட்சி மாற்றம்-

**பாருவின் இல்லம். ள கண்ணனும் நண்பர்களும் அங்கு வெண்ணை உண்ணச் செல்கின்றனர்.**

பாரு: கண்ணா இன்று இங்கு வெண்ணை கிடையாது.

கண்: பொய் சொல்ல வேண்டாம் பாரு. எனது மூக்கு வெண்ணையை மோப்பம் பிடிக்கிறது.

**இவ்வாறு கூறிக்கொண்டு நண்பர்களுடன் வெண்ணை உள்ள இடம் செல்கிறான்.**

பாரு: பொறு கண்ணா.... நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்.

கண்: எதுவுமே பேசாதே-மறைவிலிருக்கும் வெண்ணையை எடுத்துவா.

**பாரு வெண்ணையை எடுத்துக் கொடுக்கிறாள்.**

பாரு: இதனை உண்ண வேண்டாம் கண்ணா..!

கண்: ஏன்? காரணம் என்ன?

பாரு: சொல்வதைக் கேள் கண்ணா. அம்மா என்னைத் திட்டுவாள்.

கண்: எனது நண்பர்களுடன் நானும் இதனைச் சாப்பிட்டே தீருவோம்.

பாரு: அப்போ அம்மாவிடம் என்னைத் திட்டுவாங்கச் சொல்கிறாயா?

கண்: எனக்காக அம்மாவின் திட்டினை உன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதா பாரு?

ஷியாமா, சகா..! வாருங்கள் இந்த வெண்ணையை வயிறார சாப்பிடுங்கள்.

**உண்டபின் அனைவரும் வெளியேறுகின்றனர். பாருவின் தாயார் தண்ணீர் குடத்துடன் திரும்புகிறார்.**

பா.அம்: பாரு.. கிருஷ்ணன் வந்தானாடி?

பாரு: ஆமா அம்மா.

பா.அம்: வெண்ணை உண்டானா?

பாரு: என்னம்மா இது? உங்களை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லையே! கண்ணனுக்குத் தெரியாமல் வெண்ணையை ஒளித்து வைக்கும்படி கூறுகிறீர்கள். கிருஷ்ணன் வந்து வெண்ணையை உண்ணவில்லை என்றால் வருத்தப்படுகிறீர்கள்.

பா.அ: உனக்கு ஒன்றுமே புரியாது. யசோதாவின் மகன் இங்கு வந்து வெண்ணை திருடித் தின்னாத அன்று பசுக்கள் பால்தருவதில்லை. அதனால் நான் திட்டினாலும் பொருட்படுத்தாமல் அவன் வரும்போது தாராளமாக வெண்ணையைக் கொடடி.

பாரு: ஆகட்டும் அம்மா!

-காட்சி மாற்றம்-

**நந்தகோபன் இல்லம்-யசோதா கண்ணனுக்கு உணவூட்டுகிறாள்.**

யசோதா: கண்ணா! வயிறு நிறைந்துவிட்டதா?

கண்: எனக்கு எப்போதும் போதாதிருக்கிறதே.

யசோதா: கண்ணா நீ என்னவேண்டுமானாலும் இங்கேயே செய்துவிடு.

18ம் பக்கம் பார்க்க

www.padippakam.com

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு–11.
தொலைபேசி: 436331

# ஆடல்களோ? பாடல்களோ? உலகைக் கலக்கும் துள்ளிசைப் புயல்கள்

எல்லா விலங்கும் உடைபட்டும். எங்கள் இதயங்களுக்கு மகிழ்ச்சி வேண்டும். எங்களுக்கு சுதந்திரம் வேண்டும். ஆடுவோம்-பாடுவோம். இசையிலே மிதப்போம். இன்ப நதியிலே குளிப்போம்.

இதுதான் மேற்குலகில் வளர்ந்துவரும் போதையூட்டும் இசையின் இலக்காக இருக்கிறது.

இசையரங்கம்.



தினமுரசு வாரமலர்



மைக்கேல் ஜாக்சன்



மடோனா

நிரம்பிப்பட்ட வெளிச்சத்தால் நிறைந்திருக்கும். காது கிழிக்கும் இசையில் ரசிகர்களின் ஆரவாரம்.

உடைகளை நளினமாக அவிழ்ப்பது. அணைப்பது நெருங்குவது. இசை வெறியூட்டும். எல்லா வற்றையும் மறக்கவைக்கும்.





அரங்கம் நிரம்புகிறது. வினைவு வியாபாரிகள் இசை நிகழ்ச்சிகளை நடத்தி விளம்பரங்கள் தேடுகிறார்கள்.

இசைக் கலைஞர்களை குத்தகை எடுத்து நிகழ்ச்சிகளை நடத்தி வசூல் குவிக்கிறார்கள்.

இப்போது மைக்கேல் ஜாக்சன்-மடோனா முன்னர் சமந்தா பொக்ஸ் இப்படி ரசிகர்களை கிளுகிளுப்பூட்டும் பாடகர்கள் வர்த்தகர்களின் குறியில் இருக்கிறார்கள்.

வியாபார நிறுவனங்கள் இரண்டுக்கு இடையே ஏற்பட்ட மோதலே மைக்கேல் ஜாக்சன் பற்றிய பாலியல் பிரச்சனையை கிளப்பியது என்றும் சொல்லப்படுகிறது.

"என்னைத் தொடு, இங்கே தொடு...." என்று சமந்தா பொக்ஸ் பாடுவதைக் கேட்ட அந்த மோகத்தில் குளிர்காய படையெடுக்கும் ரசிகர்கள் உள்ளவரை வசூலுக்கு குறைவில்லை.

பாடகர்கள் மீதும், பாடகிகள் மீதும் வெறித்தனமான பிரியம்.

எல்விஸ் பிரஸ்லி என்றொரு பாடகர். வர்த்தக சூதாடிகள் அவரை வளைத்துப் பிடித்தனர்.

பாடலை கேட்க மக்கள் அலைமோதினார்கள். காவல் காக்க ஆயுதம் தாங்கிய காவலர்கள். அதையும் மீறி இளம் பெண்கள் பாய்ந்து சென்று முத்தமழை பொழிந்தனர்.

இப்போது எல்விஸ் மறைந்துவிட்டார். அவரது இடத்தை நிரப்ப அதிரடி இசையோடு பல குழுக்கள் அரங்கில் தோன்றுகின்றனர்.

இரைச்சலில் தொலைந்து போகிறது எல்லாமே!

எல்விஸ் பிரெஸ்லி

## உலகில் பெரியது இது



உலகில் மிகப் பெரிய நட்சத்திர ஹோட்டல் இது.

அமெரிக்காவில் காசினோவான லோஸ் நெவாடா என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

1990இல் திறந்துவைக்கப்பட்ட இந்த பிரமாண்டமான ஹோட்டல் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துவிட்டது.

4032 அறைகள் சகல வசதிகளோடும் இருக்கின்றன. 4000 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

இதன் பெறுமதி 290 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இதன் பெயர்-எக்ஸ்கலிபர் ஹோட்டல்.

## குத்துக்களால் விருது!

குத்துச்சண்டையில் கியூபா வீரர்கள் வெற்றிக் கனியைச் சுலபமாய் தட்டிக்கொள்வார்கள்.

அமச்சூர் குத்துச்சண்டைக்கான உலக சாம்பியன் போட்டிகளில் மூன்று தடவை வெற்றி ஈட்டிய வீரர்கள் கியூபாவில்தான் இருக்கின்றனர்.

கியூபாவின் ஃபீலிக்ஸ் செவோன் 1986, 1989, 1991ம் ஆண்டுகளுக்கான அதிபார குத்துச்சண்டைப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

குத்துக்களால் எதிரியை கலக்கவைத்து விருதினைப் பெறும் களத்தில் ஃபீலிக்ஸ் குதித்த நோக்கில் கிளிக் செய்யப்பட்டதே இது.



## திகைக்கவைக்கும் படப்பிடிப்பாளர்

கமரா நுட்பம் கச்சிதமான படப்பிடிப்பை நடத்துபவர் ஹென்றி ராக்ஸ்லே.

சிந்தனைக்கு வேலை கொடுக்கும் விதமான புகைப்படங்களை அவர் தன் கமராவில் எடுத்துத் தருகிறார்.

நான்கு கட்டமாக படப்பிடிப்பைத் திட்டமிடுகிறார்.

1. நடைபெறமுடியாது என்று கருதும் நிகழ்வு.
2. அதனை திட்டமிடுதல்.
3. அதற்கான உருவங்களை தயாரித்தல்.
4. சிறப்பாகப் படம் பிடித்தல்.

படத்தில் ஒரு பொம்மை பூஞ்சாடியை தள்ளி விழுத்துவது போல காட்சி உருவாக்கி சிறப்பாகப் படம் பிடித்துள்ளார்.

